# வடமலை நிகண்டு

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
ருவான்மியூர், சென்னை-600 041
1983

P31:4K
N83
119598

P31·412
N82

ஈசுரபாரதி இயற்றிய

# வடமலை நிகண்டு

பதிப்பாசிரியர்

டாக்டர் இரா. நாகசாமி

எழுதிய ஆராய்ச்சி முன்னுரையுடன்

வித்துவான் சு. பாலசாரநாதன்

எழுதிய உரையுடன்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

திருவான்மியூர், சென்னை-600 041

1983

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண். 75

முதல் பதிப்பு :—1983, 1500 பிரதிகள்.

P31:4K
N83

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
சென்னை-41.

119598

விலை :—ரூ 15

Published with the financial assistance from the Ministry of Culture, Govt. of India.

Printed at Rajan & Co. (Printers) 1, Goomes Street, Madras-1

## இப்புத்தகத்தில் அடங்கியவை


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை ... ... ... | i—x |
| Introduction ... ... ... | xi—xvi |
| பிழை திருத்தம் ... ... ... | xvii—xviii |
| சூத்திரமும் உரையும் ... ... | 1–267 |
| சூத்திர முதற்குறிப்பகராதி ... | 269—288 |

# வடமலை நிகண்டு

## முன்னுரை

இந்நூலின் பெயர் 'வடமலை நிகண்டு' என்றும், 'இரையூர் வடமலை நிகண்டு' எனவும் பாயிரத்தில் இருந்து அறிகிறோம்.

"பல்கலை தேர் வடமலை நன்னிகண்டினையீ
சுரகவிஞன் பகர்ந்திட்டானே"—பா. 1.

"ஈட்டுபுகழ் இரையூர் வடமலை நிகண்டென
நாட்டினன் மடசை நன்னகர் வாழும்
சிதம்பர பாரதி சேய்தினம் உமையாள்
பதம்பணி ஈசுர பாரதி தானே"—பா.2.

இதை இயற்றியவர் திருநெல்வேலிச்சீமை மடசை நகரில் வாழ்ந்த சிதம்பர பாரதியின் மகன் ஈசுரபாரதி என்பவர். இந்நூல் கொல்லம் 876-ம் ஆண்டுக்கு நேர் விக்ரம வருடம் ஆவணி மாதம் மூல நக்ஷத்திரம் செவ்வாய்க்கிழமையன்று எழுதி முடிக்கப்பட்டது. அது கி. பி. 1700 ஆகஸ்டு மாதம் 13-ம் தேதியாகும்.

இந்நூல் மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது.

1. ஒரு பெயர் ஒரு பொருள் காண்டம்.
2. ஒரு பொருள் பல பெயர்க் காண்டம்.
3. பலபெயர்க் கூட்டத்து ஒரு பெயர்க் காண்டம்.

என அக்காண்டங்களின் பெயரை நூற்பாயிரம் உரைக்கிறது.

இந்நூல் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் அரும்பாடு பட்டுத் தேடி வைத்துள்ள சுவடிகளில் ஒன்று. இதுவரை அச்சில் வராதது. சுமார் 76 ஓலைகளின் பக்கங்களில் எழுதப்பட்டுள்ள இச்சுவடி 755 எண் இடப்பட்டு நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சுவடிகளின் விளக்கம் முதல் தொகுதியில் 25வது எண்ணில்

விவரிக்கப்பட்டுள்ளது. இந்நூலை ஓலையில் இருந்து ஏடு பெயர்த்து திரு அ. கிருஷ்ணசாமிநாயுடு என்பவர் எழுதியுள் ளார். நூற்பாக்களுக்கு எளிய உரையை திரு. வித்துவான் பாலசாரநாதன் எழுதியுள்ளார். நூற்பாக்களைப் பிற நிகண்டு களுடன்ஒப்பிட்டுப் பார்த்து அச்சுப் பிழைகளைத் திருத்த திரு. சாயிராமனும், திரு. விஸ்வேஸ்வரனும், திரு. என். பாபுவும் பெரிதும் உதவினர். அவர்கள் அனைவரும் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள்.

இந்நூலில் இரண்டாம் காண்டம் ஆன 'ஒரு சொல் பல பொருள் காண்டம்' மட்டுமே உள்ளது, சுவடியின் இறுதி யில் 'இரண்டாம் காண்டம் முற்றும்' என்று எழுதப்பட் டிருப்பதும் இதை உணர்த்தும். முதல் காண்டமும் மூன்ரும் காண்டமும் ஐயரவர்கள் சேமித்த சுவடிகளில் இல்லை.

அகராதி நூல்களை ஆராய்ந்து திருத்திய பதிப்புக்களை வெளிக்கொணர்ந்த திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது தமிழ் அகராதி (Tamil lexicon) முன்னுரையில் 'பல்பொருள் சூளாமணி' என்னும் நூலைப்பற்றி ''இந்நூல் கி. பி. 1700-ல் மடசை சிதம்பர பாரதி மகன் ஈசுரபாரதி என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூல் மூன்று காண்டங் களைக் கொண்டது. அமரகோசத்தைப் பின்பற்றி எழுதப் பெற்றது. ஒரு பெயர் ஒரு பொருள்; ஓர் சொல் பல பொருள்; பலபெயர்க் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என மூன்று காண்டங்கள் உள்ளன. மூன்ருங் காண்டம் கிடைக்கவில்லை. முதலிரண்டு காண்டங்களும் அகராதி வரிசையில் உள்ளன'' என்று கூறுகிருர்.

இதிலிருந்து ''பல்பொருள் சூளாமணியை'' இயற்றிய வரும், இந்நூலான ''வடமலை நிகண்டை'' இயற்றியவரும் ஒரே ஆசிரியர்தாம் என்பது தெளிவு. பிள்ளை அவர்களு டைய முன்னுரையில் அச்சுவடி எங்கு உள்ளது என்பது பற்றிக் குறிப்பு இல்லை. ஒருக்கால் அவர்கள் சேமித்த சுவடி களில் ஒன்ருக அது இருந்திருக்க வேண்டும். பிள்ளை அவர்

களின் சுவடித் தொகுப்புக்கள் அவருக்குப் பின்னர் கல்கத்தா தேசிய நூலகத்தாரால் வாங்கிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் அச்சுவடி காணப்படுகிறது. 1965-ம் ஆண்டு ''தமிழ் அகராதிக்கலை'' என்ற நூலை ஆக்கிய திரு. சுந்தர சண்முகனார் ''பல்பொருள் சூளாமணி நிகண்டைப்'' பற்றி எழுதியுள்ளார். அந்நூலில் கீழ்வரும் பாயிரத்தை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

''கொல்லம் எண்ணூற்று எழுபத்தாறெனக்
கணிதப் பாவாணர் குறித்த ஆண்டின்
மல்கு புகழ் விக்கிரம வருடத் தாவணி
மூல வளஞ்சேர் நாளில்

நெல்லை நகர் வடிவுகந்த வேய்முத்தைப்
பணிந்துலகில் நெடுநாள் நிற்கப்
பல்பொருள் சூளாமணியை ஈசுரபாரதி
தமிழால் பாடினனே''

என்றும்

''சிதம்பர பாரதிபாலன் புகழ்மடசை
உடையவளாந் தேவி செம்பொற்
பதம்பணி செங்கைத்தலத்தான் ஈசுர
பாரதி எனும் நூற் பாவலோனே''

என்று மேற்கோள்களைக் குறிப்பிடுகிறார்.

மேலும் அவர் பாயிரத்தின் பிற பகுதியையும் கொடுத்துள்ளார்.

''தோன்றுகாண் டச்சடையான் தொல்சீர் சேர் நாம
மூன்று காண்டத்தில் மொழிகின்றேன்'' [நூல்

''நாவு வந்த பல்பொருட் சூளாமணியைப் பாரில்
நாட்டிய சீர் முதற் காண்டமென்னும் பேர் தான்
பூவுவந்த ஒரு பெயர் ஓர் பொருளேயாகும்
போற்றிரண்டாம் காண்டம் பல்பொருளின்
ஓர் சொல்

சேவுவந்த நெல்வேலிப் பெருமான் ஈன்ற
செவ்வேளின் திருவருளால் சேர்ந்து நான்சொல்
பாவுவந்த பெயர்மூன்றுங் காண்ட மாகும்
பல்பெயர்க்கூட் டத்தொருபேர் பலவுந் தானே''

என்று உள்ளதால் இந்நூல் நாமநூல் என்றும், ''பல்பொருள் சூளாமணி'' என்றும் அழைக்கப்பட்டது என்றும் அறிகிறோம். சண்முகசுந்தரனுர் அவர்கள் இந்நூல் முழுமையாக உள்ளதா, பகுதியாக உள்ளதா எனக் குறிக்கவில்லை. அவர்களது குறிப்பில் முதல் இரண்டு காண்டங்களே இருப்பது போல் எழுதியுள்ளார். நூல் விருத்தத்தில் எழுதப்பட்டதா, நூற்பாவில் எழுதப்பட்டுள்ளதா என்றும் அறிய இயலவில்லை. தமது 9-ம் நூற்றுண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில்—நிகண்டுகளின் அட்டவணையில் இந்நூல் விருத்தப்பாவால் இயற்றப்பட்டது என்றும், அச்சாகவில்லை என்றும் திரு. எம். அருணுசலம் குறிக்கிருர். ஆனுல் தமிழ் லெக்ஸிகனில் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் மேற்கோள் காட்டியுள்ள பாக்கள் நூற்பாக்களாக உள்ளன. 'கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள்' என்ற நூலிலும், இச்சுவடி நூற்பாவில் உள்ளது என்று குறிக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து பல்பொருட் சூளாமணி என்னும் நூலும் நூற்பாவால் ஆனது என்று தெளிகிறோம்.

இங்கு ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். பல்பொருட் சூளாமணி என்னும் நூலையும், 'இரையூர் வடமலை நிகண்டு' என்னும் நூலையும் இயற்றியவர் ஒரே ஆசிரியர் என்பது புலனுகிறது. இரண்டு நூல்களின் பாயிரங்களிலிருந்தும், இரண்டு நூல்களும் ஒரே தேதியில் இயற்றப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. இரு பாயிரங்களும் கவிஞனின் பெயரை ஈசுவரபாரதி என்றும், சிதம்பரபாரதி மகன் என்றும் மடசை நகரில் வாழ்ந்தவன் என்றும், தினந்தோறும் உமையன்னையை வணங்குபவன் என்றும் குறிக்கின்றன. இரு நூல்களும் மூன்று காண்டங்களாக இயற்றப்பட்டவை என்பதும் மூன்று காண்டங்களின் பொருளும், வைப்பு முறையும் ஒன்றே என்பதும் குறிக்கப்படுகின்றன.

அச்சிடப்பட்டுள்ள நூற்பாக்களை ஒப்பிடும்போது இரண்டு நூல்களின் நூற்பாக்களும் பெரிதும் ஒத்திருக்கின்றன.

(1) (a) தாரமெனும் பெயர் தாரமும் நாவும்
வல்லிசைப் பெயரும் வாழ்க்கைத் துணைவியும்
அரும்பண்டப்பெயரும் யாழ் நரம்பில் ஒன்றும்
வெள்ளியும் எனவே விளம்பப் பெறுமே.

ப. பொ. சூ. T.L.

(b) வ. நி.—இதே நூற்பாவைக் கொடுக்கிறது.
840

2. a. வரியெனும் பெயரே நெற்பொதுவும் வாரியும்
எழுத்துஞ் சுணங்கும் பாட்டும் நீளமும்
குடியிறைப் பெயருஞ் சந்தித் தெருவுமாம்

ப. பொ. சூ. T.L.

b. வரியெனும் பெயர் நெற்பொதுவும் வாரியும்
எழுத்துஞ் சுணங்கும் இன்னிசைப் பாடலும்
குடியிறைப் பெயரும் சந்தித்தெருவும்
நீளமும் எனவே நிகழ்த்துவர் புலவர்.

வ. நி. 1333

3. a. வெம்மை எனும் பெயர் விருப்பும்
உட்டிணமும்.

ப. பெ. சூ,—கல்கத்தா
தே. த. நூ. பக்கம்-16.

b. வெம்மை எனும்பெயர் விருப்பும் உட்டிணமும்
விரைவும் எனவே விளம்பப்பெறுமே

—வ. நி. 1425.

பல்பொருட் சூளாமணி ஒரு சொல் பல பொருள் என்னும் இரண்டாம் காண்டத்தில் 1465 நூற்பாக்கள் கொண்டிருந்ததாக அறிகிறோம். (T.L. pp. XXXIV) வடமலை நிகண்டு இரண்டாம் காண்டம் 1452 நூற்பாக்கள் கொண்டுள்ளது.

இடையில் இரண்டு பக்கங்கள் இல்லாததால் மேலும் சில நூற்பாக்கள் மறைந்தன எனத் தெரிகிறது.

மேற்கூறியவற்ருல் ''பல்பொருட் சூளாமணி'' என்னும் நூலும் "இரையூர் வடமலை நிகண்டு" என்னும் நூலும் ஒன்றே எனத் தெளியலாம். எனில் இரு வேறு பெயர்கள் ஏன் இவற்றிற்கு இடப்பட்டன என்ற கேள்வி எழுப்பப் படுவது இயற்கை. முதலில் இந்நூலுக்கு ஆசிரியர் 'பல் பொருட் சூளாமணி' என்னும் பெயரிட்டிருக்கக்கூடும். அதுவே 13-8-1700-ல் நிறைவேற்றப்பட்டிருக்கும். ஆசிரியர் தம் வாழ்நாளிலேயே இந்நூலைத் திருத்தியும், விரிவாக்கியும் இருத்தல் வேண்டும். பல்பொருட் சூளாமணியில் வரி என்னும் சொல்லுக்கும் வெம்மை என்பதற்கும் உள்ள பொருள் வடமலை நிகண்டில் விரிவாக்கப்பட்டுள்ளது காண லாம். அவ்வாறு விரிவாக்கப்பட்டபோது இரையூர் வடமலை குடும்பத்தினர் கவிஞர்க்கு அளித்த பேருதவியின் நினைவாக வடமலை நிகண்டெனப் பெயரிட்டிருக்கக்கூடும். அவ்வமயம் பாயிரமும் சற்று திருத்தியமைக்கப்பட்டிருக்கக்கூடும். ஆதலின் வடமலை நிகண்டெனும் இந்நூல் பல்பொருள் சூளாமணி என்னும் நூலின் திருத்திய, சற்று விரிவாக்கப் பட்டதே என்றும், ஆசிரியரே இவ்வாறு செய்திருப்பார் என்றும் நாம் கருதுகிருேம். பல்பொருட் சூளாமணி முற்றும் பதிப்பிக்கப்பெறவில்லை. அது பதிப்பிக்கப்பெறும் போது மேலும் தெளிவு பெறும் என்பதில் ஐயமில்லை.

வடமலை நிகண்டில் சொற்கள் அகராதி வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. அகர வரிசையில் அமைப்பதைக் குறித்து எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிக்கிருர்.

''கி. பி. 1594-ல் சிதம்பரம் ரேவண சித்தர் என்பவரால் அகராதி நிகண்டு என்னும் நூல் இயற்றப்பட்டது. இதில் அனைத்துச் சொற்களும் அகர வரிசையில் அமைக்கப்பட் டுள்ளன. இதில் முதல் எழுத்துக்கள் மட்டுமே அகர வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது அல்லது

பின்வரும் எழுத்துக்கள் அகர வரிசைப்படி அமையவில்லை. இந்நூல் தமிழ் அகராதி வரலாற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. முதன் முதலில் அகர வரிசையைப் பின்பற்றிய நூல் இதுவேயாகும். எவ்வாறு இம்முறை பின்பற்றப்பட்டது எனக் கூற இயலாது. தமிழ் இலக்கியத்தில் வருக்கக் கோவை என்ற ஒரு வகை அமைப்பு உண்டு. இதில் அகராதி அமைப்பில் பாடல்கள் அமைக்கப்படும். அகராதி நிகண்டு எழுதிய ரேவண சித்தர் வருக்கக் கோவையைப் பின்பற்றி எழுதியிருக்கலாம். அல்லது சமஸ்கிருத நிகண்டுகளைப் பின்பற்றியும் இயற்றியிருக்கலாம்'' என்பார் எஸ். வையாபுரிப்பிள்ளை.

சொற்களை அகர வரிசையில் அமைப்பது என்பது இந்திய நாட்டில் தொன்று தொட்டு வரும் மரபாகும். கல்வெட்டுக்களில் கூட சொற்கள் அகர வரிசையில் எழுதப்பட்டுள்ளன. கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த பல்லவப் பெருமன்னன் மகேந்திரவர்மனது பெயர்கள், திருச்சி முதலிய அவனது குகைக் கோயில்களில் அகர வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் கைலாயநாதர் ஆலயத்தில் இராஜசிம்ம பல்லவனின் பெயர்கள் அகர வரிசையில் எழுதப்பட்டுள்ளன. மகேந்திரவர்மனின் சமகாலத்தில் வாழ்ந்த அப்பர் பெருமான் பதிகம் ஒன்றை அகர வரிசையில் வைத்துப் பாடியுள்ளார் (5-ம் திருமுறை.) சித்தத்தொகை குறுந்தொகை என்பது 30 பாடல்களைக் கொண்டது. இது அகர வரிசையில் உள்ளதைக்காணலாம். ஆதலின் அகராதி முறை பண்டைய முறை எனத் தெள்ளிதின் உணரலாம்.

இந்நிகண்டில் இரண்டாவது காண்டம் முற்றும் உள்ளது எனக் கண்டோம். இக்காண்டம் 10 தொகுதிகளாகக் கீழ் வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1-வது உயிர் வருக்கத் தொகுதி
2-வது ககர வருக்கத் தொகுதி
3-வது சகர வருக்கத் தொகுதி

4-வது ஞகர வருக்கத் தொகுதி
5-வது தகர வருக்கத் தொகுதி
6-வது நகர வருக்கத் தொகுதி
7-வது பகர வருக்கத் தொகுதி
8 வது மகர வருக்கத் தொகுதி
9-வது யகர வருக்கத் தொகுதி
10-வது வகர வருக்கத் தொகுதி

திருநெல்வேலிப் பகுதியில் பல கவிஞர்கள் 17, 18, 19-ம் நூற்றுண்டுகளில் நிகண்டுகள் தொகுப்பதில் மிகவும் ஆர்வம் காட்டியுள்ளனர். பெரும்பாலான நிகண்டுகள் அப்பகுதியிலிருந்து கிடைத்துள்ளதும் இச்சிறப்பை உணர்த்தும். இங்கு கி. பி. 1700, 1750, 1800 என்று சுமார் ஒன்றுக்கொன்று 50 ஆண்டு இடைவெளிக்குள் தொகுக்கப்பட்ட மூன்று நிகண்டுகளை இவ்வாறு குறிக்கலாம்.

| | | |
|---|---|---|
| கி.பி. 1700 பல்பொருட் சூடாமணி (அல்லது) வடமலை நிகண்டு. | ... | ஈசுரபாரதி, மடசை நகர். |
| 1750 பொதிகை நிகண்டு | ... | சுவாமிநாதக் கவிராயர், கல்லிடைக் குறிச்சி. |
| 1800 நாமதீப நிகண்டு | ... | சுவாமிநாதக் கவிராயரின் மைந்தர் சுப்ரமணியக் கவிராயர், கல்லிடைக் குறிச்சி. |

இந்நூல்களில் முதலிரண்டு நூல்களிலும் "ஒரு சொல் பல பொருள் தொகுதி" உள்ளது. இத்தொகுதி இரண்டு நூல்களிலும் அகர வரிசையில் உள்ளது குறிக்கத்தக்கது. பல்பொருள் சூளாமணியை இயற்றிய ஈசுவர பாரதி தாமே அதை விரிவாக்கி வடமலை நிகண்டெனப் பெயரிட்டதைக் கண்டோம். அதற்கும் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த பொதிகை நிகண்டு மேலும் விரிவாகத் தொகுக்கப்

பட்டுள்ளதைக் காண்கிறோம். உதாரணமாக வடமலை நிகண்டு அகர வரிசையில் 142 சொற்களுக்குப் பொருள் கொடுக்கிறது. பொதிகை நிகண்டு 181 சொற்களுக்குப் பொருள் கூறுகிறது. இது போல் பிறவர்க்கங்களிலும் அதிகச்சொற்கள் பொதிகை நிகண்டில் இடம்பெறுகின்றன. இதே போன்று வடமலை நிகண்டைக் காட்டிலும் பொதிகை நிகண்டில் சொல்லுக்குப் பொருள்கள் அதிகமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. வடமலை நிகண்டில் முதல் எழுத்து மட்டும் அகர வரிசையில் அமைந்துள்ளது. பொதிகை நிகண்டில் இரண்டாம் எழுத்தும் அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சதுரகராதியை இயற்றிய வீரமா முனிவருக்கும் (Father Beschi) பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே முதல் எழுத்தையும், இரண்டாவது எழுத்தையும் அகர வரிசையில் அமைத்து அகராதி தொகுத்தல் தமிழகத்தில் வழக்கில் இருந்துள்ளது என எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தெளிவாக்கியுள்ளார்கள். ''அகராதி மோனைக்கு அகராதி எதுகை'' என்ற நூல் அத்தகையது என்பார் பிள்ளையவர்கள். சுமார் 7500 சொற்களை உடைய இந்நூல் இன்னம் அச்சாகவில்லை. இது போன்ற நூல்களைப் பயின்று பொதிகை நிகண்டு விரிவாக அமைக்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. பொதிகை நிகண்டில் ''ஒரு சொல் பல் பொருட் பெயர்த் தொகுதி'' என்பது இரண்டு பகுதியாக உள்ளது. முதல் பகுதி விருத்தப்பாவில் ''ககர எதுகை'' ''சகர எதுகை''என இரண்டாம் எழுத்து வரிசைப்படுத்தப் பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் பகுதி ''அகர வருக்கம்'', ''ஆகார வருக்கம்'' என அகர வரிசையில் நூற்பாவினல் இயற்றப்பட்டுள்ளது. இவ்வரிசையில் இரண்டாம் எழுத்தும் அகரவரிசையில் உள்ளது சிறப்பாகும். எடுத்துக்காட்டாக ஆகம், ஆகாரம், ஆகு, ஆகுலம், ஆக்கம், ஆங்கை, ஆசினி, ஆசுகம் என வருவதைக் காணலாம்.

''பயலெனும் பெயர் சிற்றூரும் பள்ளமும் பந்தியுமெனவே பகருவர் புலவர்''என்று வடமலை நிகண்டு 1056ஆம்

நூற்பாவில் காணப்படுகிறது. இந்நூற்பாவில் பந்தியும் என்று இருப்பதற்கு மாருகப் பாதியும் என்று இருக்கவேண்டும். நிகண்டுகளில் பயல் என்ற சொல்லுக்குப் பாதி என்றே பொருள் தரப்பட்டுள்ளது. ஆயினும் மூலச் சுவடியில் உள்ள வாறே பந்தியும் என்றே பதிப்பித்துள்ளோம். ''பதியெனும் பெயரே கணவனும் நாகமும் தலைவனும் எனவே சாற்றப் பெறுமே''. 1071 ஆம் எண்ணுள்ள இந்நூற்பாவில் நாகமும் என்று இருப்பதற்கு மாருக நகரமும் என்று இருக்க வேண்டும். பதி என்ற சொல்லுக்கு நகரம் என்பதே சரியான பொருளாகும். ஆயினும் மூலச்சுவடியில் உள்ள வாறே நாகம் என்றே பதிப்பித்துள்ளோம்.

''பங்கியெனும் பெயர் ஆண்பான் மயிரும் அஃறிணைப் பொதுவின் பெயருமாமே'' 1039ஆம் எண்ணுள்ள இந்நூற் பாவில் அஃறிணைப் பொதுவின் பெயருமாமே என்பதற்கு மாருக அஃறிணைப் பொதுவின் மயிருமாமே என்றிருக்க வேண்டும். பங்கி என்ற சொல்லுக்கு விலங்கினங்களின் மயிர் என்று நிகண்டுகளில் பொருள் தரப்பட்டுள்ளது. இருப்பினும் மூலச்சுவடியில் உள்ளவாறே அஃறிணைப் பொதுவின் பெயருமாமே என்றே பதிப்பித்துள்ளோம்.

இந்நூல் தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு நிலையைச் சித்தரிக்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்நூலகம் சிறந்ததொரு ஆராய்ச்சி நிறுவனமாகத் திகழ வேண்டும் என இதற்குப் பெரும் ஆதரவு நல்கும் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அம்மையார் அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. ஐயரவர்களின் பெயரர், இந்நூலகத்தின் பொருளாளராகத்திகழும் திரு. க. சுப்பிர மணிய ஐயர் அவர்களுக்கு எமது நன்றி.

இரா. நாகசாமி,

# VADAMALAI NIKANTU.

## INTRODUCTION.

This work called "Iraiyur Vadamalai Nikantu", was compiled by a certain Isvara Bharati, son of Chidambara Bharati, a resident of Madacai, a village near Thirunelveli. According to the colophon, the work was completed in the Kollam year 876, equal unto the year Vikrama the month Avani, the star mūla, Tuesday, which corresponds to 13th August 1700. The author is said to be a great devotee of Lord Siva, the presiding deity of Thirunelveli and his consort, goddess Vadivudai Nayaki. He appropriately begins his work with the word '*Arul*'-ie Siva Sakti and grace.

The introductory verse states that the work was originally written in three chapters. The first section deals with words having one meanning, the second with homonyms, and the third with group-names. The available Manuscript has the second chapter only, the first and the third are not traceable. The available text is preserved in a single manuscript collected by Dr U. V. Swaminatha Iyer, and is in the Dr. U. V. S. Library now mss no 681; The work, not noticed by any lexicographer so far is being published for the first time, It is strange that such a valuable text has escaped the attention of scholars so far.

Dr. S. Vaiyapuri Pillai, the doyen of Tamil Lexicography refers to another text "*Pal porul cūlamani*" in his introduction to Tamil Lexicon, in the following terms.

"An improvement on the plan adopted in the above Nikantu was made in '*pal porul cūlāmani*' written in 1700 A.D. Its author was Isvara Bharati, son of a certain Chidambara Bharati of Madacai. As one of his prefatory stanzas pays homage to the God at Tirunelvelli this Madacai should be somewhere in neighbourhood. The author expressly states that following Amarakosa, he divides his work into three sections. In the manuscript available the third section is not found. The first section deals with words having one meaning, the second with homonyms, and the third with group-names will at once be seen, that the classification adopted is somewhat simpler, while many sections must be examined before a word is found in Akaradi Nikantu, it is enough to look through two sections, in '*Pal-porul-cūlāmani*' These two sections are in alphabetical order, though that order does not extend beyond the initial letter. There are in this Nikantu about 800 words having one meaning and about 1465 words having more than one meaning the total number of words being 4265".

Tamil Lexicon. page XXXIV

From the above citation it may be seen that the author of this work '*Vadamalai Nikantu*' and the work '*Pāl-Porul-chūlāmani* is the same Isvara Bharati, son of Chidambara Bharati of Madacai Nagar near Tirunelveli. It is also seen that both the works contained three identical chapters. The third chapter is not available in both the manuscripts. The first chapter is not available in the '*Vadamalai Nikantu*'. The second chapter dealing with homonyms, is available in both the texts making a comparison feasible. However the work '*Pal porul chūlāmani*' has not so far been published, except a few verses cited in Lexicon and 'The history of Tamil Lexicon' by

Shanmuga Sundaranar, published in Pondichery in 1965. Only one manuscript of *Pal-porul chūlāmani* has been reported so far and it probably was in S. Vaiyapuri Pillai collection and is now in the National Library, Calcutta. The prefatory verses are given by Shanmuga Sundaranar and it is seen this text was also composed on the same date as *Vadamalai Nikantu*, 13th Aug. 1700. Thiru M. Arunachalam mentions that the text of Pal-porul Chūlāmani is in Vrttappa metre. However the citations in Tamil Lexicon show the work composed in 'Nurpa' metre, the same metre found in Vadamalai Nikantu.

A comparision of three verses found in both *Pal porul Chūlāmāni* and *Vadamalai Nikantu* shows that both the works are identical, except that the later work is a slightly enlarged version of the former. It gives one or two meanings more than the first work.

(a) We have seen that the author of both these works is one and the same Isvara Bharati, son of Chidambara Bharati of Madacai.

(b) That the date of the compostion is the same, 13th Aug. 1700.

(c) That both consisted of three identical chapters.

(d) They are found in the same *Nurpā* metre.

and

(e) Both are arranged in alphabetical order.

We are convinced from the above that both the works '*Pal porul Chūlāmani*' and *Vadamalai Nikantu* are one and the same work and not two different works.

The question naturally arises why these are called by two different names in the prefatory verses of the respective texts. It is seen that the colophons are also almost identical except for some minor changes. It is possible that the author first compiled the text on 13th August 1700 and named it "*Pal-porul Chūlāmani*". Later, probably some years after, he wrote a revised and slightly enlarged version and named it "*Iraiyur Vadamalai Nikantu*" in honour of some grateful memory. The date of Composition remained the same.

The words are arranged in this *Vadamalai Nikantu* in alphabaitcal order. Regarding the introduction of the alphabetical system S. Vaiyapuri pillai holds the *Akaradi Nikantu* of Revana Siddhar of Chidambaram compiled in the year 1594 AD. as the earliest. Prof pillai holds that probably the Tamil composition "Varukka kovai" influenced Revana Sidhha to introduce alphabetical order or perhaps he must have borrowed the idea from Sanskrit Sources.

Arranging words in alphabetical system is a very ancient system in Tamil Nadu. Saint Appar has composed one of his hymns consisting of 30 verses, in the alphabetical order. The Pallava ruler Mahendra, in 7th cent. has inscribed several of his titles in alphabetical order in his cave temples. Similarly several titles of the Pallava Rajasimha are found in alphabetical order in the Kailasanatha temple of Kanchi. Thus alphabetical system is so well known as early as 7th cent. in the Tamil land.

It is of interest to mention that several poets of eminence in Tirunelveli region were vying with each other in compiling dictionary in the 17th, 18th & 19th centuries A.D. Quite a number of Nikantu manuscripts so far

collected come from this region. It would be of interest to cite three such Nikantus, compiled in this region within 50 years of each.

1700 AD. *Palporul Chulamani (Vadamalai Nikantu)* by Isvara Bharati Madacai.

1750 AD. *Podikai Nikantu*, by Swaminatha Kavirayar, Kallidaikkuruchi.

1800 AD. *Namadipa Nikantu* by Subrahmanya kavirayar son of the above. Kallidaikkuruchi.

We have seen that the author of the first work enlarged his own text. The second text '*Potikai Nikantu*', written fifty years later is a further enlargement both in the number of words and also in the number of meanings. Vadamalai Nikantu, arranges only the initial letter in alphabetical order but the 'Podikai Nikantu' pays attention to the second letter also.

Prof Vaiyapuri pillai has demonstrated clearly that the system of arranging words in alphabetical order not only with reference to the first letter but also the second letter, was well known to the Tamils long before Father Beschi who arrived in 1710. He cites the work "*Akarādi monaikku Akarādi Edukai*" following this method earlier to Besehi. Unfortunately this work has not yet appeared in print.

The work 'Vadamalai Nikantu' represents an interstsing stage in the development of Tamil Lexicography.

Vidvan S. Balasaranathan has rendred the meanings of the verses. In critically editing the text, Sri. S. Saiaman, Sri. S. Visweswaran and my Son N. Babu have

been of great assistance. All of them deserve special mention. Smt. **Rukminidevi,** the adhyaksha of Dr. U. V. S. Library is keen to develop this Library into a great centre of Learning and Research and as services the fountain head of inspiration and guidance I thank Sri **K. Subramanya Iyer,** the grandson of Dr. U. V. S. Iyer, the treasurer of this Library for his valuable suggestions.

R. NAGASWAMY

Madras,
4-4-1983.

# வடமலை நிகண்டு

## பிழை திருத்தம்

| சூத்திர எண் | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| பாயிரம் | 1 | வேய்முகத்தைப் | வேய்முத்தைப் |
| | 2 | நாலிருங் | நாலிரு |
| | 4 | தேரும்மையுஞ் | தேரும்ஐம்மையுஞ் |
| | 4 | அரதலும் | அரிதலும் |
| | 6 | இரவியி | இரவியு |
| பொ. | 6 | பூ மரம் | பூ, மரம் |
| | 7 | அவன் தேர்பாகன் | அவன் தேர்ப்பாகன் |
| | 10 | ஐயனேயும் | மையனேயும் |
| பொ. | 10 | ஐயம், நோயும் | மையல் நோய் |
| பொ. | 12 | பாம்பும் | பாம்பு |
| பொ. | 22 | பாலையாழ்திறத்தி லொன்று | பாலையாழ்த்திறத்தி லொன்று |
| பொ. | 51 | பாட்டின் ஒருறுப்பு | பாட்டின் ஒருறுப்பு |
| | 60 | கத்தியும் | அகத்தியும் |
| | 67 | மகிளிள்பரலும் | மகிழின்பரலும் |
| பொ. | 67 | பெண்கள் கால்களில் அணிந்துகொள்ளும் மாணிக்கப்பரல் | மகிழம் விதை |
| பொ. | 69 | கீழ் இறங்குதல் | கீழ், இறங்குதல் |
| | 71 | இரத்தல் | ஈர்த்தல் |
| பொ. | 71 | இரத்தல் | ஈர்த்தல் |
| | 85 | இடாவுமாம் | மிடாவுமாம் |
| பொ. | 117 | அச்சவடிவு | தகட்டுவடிவு |
| | 118 | போரிடமுமாம் | ஓரிடமுமாம் |
| பொ. | 118 | போர்க்களம் | ஓர் இடம் |
| | 129 | அசோகமர்க்கடவுள் | அசோகமர்கடவுள் |
| பொ. | 131 | உணவு | தேவர் உணவு |
| பொ. | 132 | தண்ணீர் | கடல் |
| பொ. | 135 | கலசம் | கவசம் |
| பொ. | 160 | முத்துமாலை | முத்து, மாலை |
| | 176 | ஆணம் | அரணம் |
| | 198 | உறுதிவார்த்தை | உறுதிவார்த்தையும் |
| | 226 | மறுப்புமாம் | மறப்புமாம் |

| | சூத்திர எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| பொ. | 242 | மரக்கலம், ஓட்டும் கோல் | மரக்கலம் ஓட்டும் கோல் |
| | 247 | மந்தியும் | நதியும் |
| பொ. | 247 | பெண்குரங்கு | நதி |
| பொ. | 369 | மூலைபாரம் | மூலைப்பாரம் |
| | 379 | புனர்தநாட் பெயரும் | புணர்தநாட்பெயரும் |
| | 392 | கல்வியுங் | கலவியுங் |
| பொ. | 437 | கற்பகவிருஷம் | கற்பகவிருக்ஷம் |
| பொ. | 560 | கொல்லன், சம்மட்டி | கொல்லன்சம்மட்டி |
| | 599 | இரந்தையு | இரந்தையும் |
| | 609 | சாற்றுவர் | சாற்றுவர் புலவர் |
| | 718 | கரத்தண்டு | காத்தண்டு |
| பொ. | 718 | கரத்தண்டு | காத்தண்டு |
| | 735 | சுட்டியும்குடமும் | சுட்டியுமகுடமும் |
| பொ. | 861 | திலகம் | திலம் |
| பொ. | 864 | திளைதல் | திளைத்தல் |
| பொ. | 1119 | வைரவன | வைரவன் |
| | 1178 | வனசமாவீரர் | வன்சமர்வீரர் |
| பொ. | 1225 | துர்க்கைகள் | துர்க்கை,கள் |
| | 1307 | வசியமெனும் | வசியெனும் |
| பொ. | 1307 | வசியர் | வசி |

'பொ' என்பது பொருளையும் மற்றவை மூலப்பாட்டையும் குறிக்கும்.

உ

ஆறுமுகம் துணை

# வடமலை நிகண்டு

கொல்லமெண்ணூற் றெழுபத்தா றெனக்கணிதப்
பாவாணர் குறித்த வாண்டின்
மல்கியசீர் விக்கிரம வருடத்தா
வணிமூல வளஞ்சேர் நாளி
னெல்லைநகர் வடிவுகந்த வேய்முகத்தைப்
பணிந்துலகி னெடுநா ணிற்கப்
பல்கலைதேர் வடமலைநன் னிகண்டினையீ
சுரகவிஞன் பகர்ந்திட் டானே. 1

பார்புகழ் திருநெல் வேலியம் பதிவா
ழைங்கரத் தொருகோட் டானையை வடிவேற்
சிங்கந் தன்னைச் சிறப்புட னீன்ற
பிடிவடி வுடைய பெண்கொடி பாகத்
தடிகள் செம்பொன் னடிகளை வணங்கி
ஒருபெய ரொருபொருள் உரைக்குங் காண்டமும்
ஒருபொருள் பலபெயர் ஓதுங் காண்டமும்
பலபெயர்க் கூட்டத் தொருபெயர்க் காண்டமும்
சொற்பொருட் காண்டத் தொகைமூன் றாக்கி
ஈட்டுபுகழ் இரையூர் வடமலை நிகண்டென
நாட்டினன் மடசை நன்னகர் வாழும்
சிதம்பர பாரதி சேய்தின முமையாள்
பதம்பணி யீசுர பாரதி தானே. 2

காப்புப் பாயிர முற்றும்

---

1. கொல்லம் 876, விக்ரம வருடம் ஆவணி மாதம் மூல நக்ஷத்திரம் செய்வாய்க்கிழமை இந்நூல் இயற்றப்பட்டது. இதுக்குச் சரியான கிறிஸ்தவாப்தம் நாள் 13th August 1700 ஆகும்.

கண்ணனுங் கண்ணனைக் காத்த நெல்வேலிக்
கண்ணனுஞ் செந்தமிழ்க் காப்பா குவரே. 3

திக்கன் புறுபெயர்நூல்செய்யவடி வாளுகந்த
நக்கன் புகழ்நெல்லை நாயக - முக்கண்ணிறை
சாரதிதா னெவ்வுலகுந் தந்தோன்செந் நாவினிற்சேர்
பாரதிதாள் வாழ்த்திநினைப் பாம். 4

---

வளம் சேர் நாள் - மங்கல வாரமாகிய செய்வாய்க்கிழமை, திருநெல்வேலி வடிவுடைய நாயகி சமேத வேணுவனநாதரை வணங்கி என்றும் நிலைத்து நிற்க 'வடமலை நிகண்டு' என்னும் இந்நூலை ஈசுர கவிஞன் இயற்றினன்.

2. ஐங்கரத்து ஒரு கோட்டானை - கணபதி. வடிவேல் சிங்கம் - முருகன், இவர்களைப் பயந்த வடிவுடைய மங்கையை ஒரு பாகத்துக் கொண்ட சிவபெருமானின் பொன்னடிகளை வணங்கி. அடுத்த மூன்று அடிகளால் இந்நூல் மூன்று காண்டங்களாக இயற்றப் பட்டது என அறிகிறோம்.

(1) ஒரு பெயர் ஒரு பொருள் காண்டம்.
(2) ஒரு பொருள் பல பெயர்க் காண்டம்.
(3) பல பெயர்க்கூட்டம் ஒரு பெயர்க் காண்டம் என்பவை

அவை. ஆனால் நமக்குக் கிடைத்துள்ள சுவடியில் இரண்டாவது காண்டம் மட்டுமே கிடைத்துள்ளது.

"இரையூர் வடமலை நிகண்டு" என்பதும் இந்நூலின் பெயராகும்.

மடசை நகர் வாழும் சிதம்பர பாரதியின் மகன் ஈசுவர பாரதி நூல் ஆக்கியோன்.

4. திசை எங்கும் நேசிக்கும் பெயர் பெறும் நூல் இயற்ற. வடிவாளுகந்த நக்கன் - வடிவுடை அம்மனை உகந்த சிவ பெருமான். நெல்லை நாயகர் - திருநெல்வேலிப் பெருமான் - முக்கண் இறை சாரதி - சிவபெருமானின் சாரதியான பிரமன் (திரிபுர தகனத்தின்போது சிவபெருமானுக்கு நான்முகன் சாரதியாய்த் திகழ்ந்தார்). எவ்வுலகுந் தந்தோன் - உலகினைப் படைத்தோன். நாவினில் சேர் பாரதி தாள் வாழ்த்தி - பிரம்மனின் நாவில் திகழும் சரஸ்வதி தேவியின் தாள் வாழ்த்தி என்று ஒரு பொருள். பிரம்மனின் நாவில் திகழும் நான்மறையின் பாதங்களை (அடிகள்) வாழ்த்தி என்பது இரண்டாம் பொருள். பாரதி என்பது இந்த கவிஞரின் குடிப்பெயர். இவர் தந்தையின் பெயர் சிதம்பர பாரதி, இவர் பெயர் ஈசுவர பாரதி ஆதலின் தமது குடியையும் வாழ்த்துகிறார். தமது தந்தையின் பாதத்தையும் வாழ்த்தி எனப் பொருள் படும்படி சிறக்க அமைத்துள்ளது இவ்வடி.

# வடமலை நிகண்டு

# உயிர்வருக்கத்தொகுதியில்
## அகரவருக்கம்

1. அருளெனும் பெயர்சிவ சத்தியி னுடனே
கருணையின் பெயருங் கருதப் பெறுமே.

2. அனந்த னென்னும் பெயர்சிவனு மாதவனும்
சினந்தவிர் அருகனு நாலிருந் தெய்வமும்
சேடனும் எனவே செப்புவர் புலவர்.

3. அரம்பை யெனும்பெயர் தெய்வப்பெண் பெயரும்
வாழையின் பெயரும் வழங்கப் பெறுமே.

4. அரியெனும் பெயர்நித் திரையுமிரு சுடரும்
பரியுஞ் சிங்கமும் பகையுந் தேரையும்
பொன்னும் காற்றும் புரந்தரனு மாலும்
செந்நெற் கதிரும் கிளியும் காந்தியும்
தேரும் மையுஞ் சேகும் வரியும்
கூர்மையு நிறமும் கூற்றும் வண்டும்
வேயும் பன்றியும் விசியும் புகையும்
பாயலுஞ் சிலம்பின் பரலும் சோலையும்
கண்ணில் வரியும் கடலும் உரகமும்
எண்ணிய திகிரியும் இகலியர் வாளும்
தகரும் வலியும் அரிசியும் குரங்கும்
புகரு நெருப்பும் புரையுஞ் சயனமும்
எறிதரு முரசமும் எண்படைக் கலமும்
குறிதரு பச்சையும் கூறிய மதுவும்
அரதலும் நாற்பா னெழுபெய ராமே

5. அண்ட ரெனும்பெயர் விண்டலத் தமரரும்
இடையரும் பகைஞரும் இயம்புவர் புலவர்.

1. அருள்:—சிவசத்தி, கருணை

2. அனந்தன்:—சிவன், மாதவன், அருகன், எட்டு வித்யேசுரர்களில் ஒருவர் பெயர் அனந்தர். வாசுகி, சேடன்.

3. அரம்பை: தெய்வப்பெண் அரம்பை, வாழை.

4. அரி:—நித்திரை, சூரியன், சந்திரன், குதிரை, சிங்கம், பகை, தேரை (தவளையில் ஒரு வகை), பொன், காற்று, இந்திரன், திருமால், நெற்கதிர், கிளி, ஒளி, தேர், ஐம்மை (தகட்டுவடிவு) மரவயிரம், வரி, கூர்மை, நிறம், யமன், வண்டு, மூங்கில், பன்றி, தாமரைத்தண்டு, புகை, பாதி, சிலம்பின் பரல், சோலை, கண்வரி, கடல், பாம்பு, சக்கரம், பகைவர்வாள், ஆடு, வன்மை, அரிசி, குரங்கு, சுக்கிரன், நெருப்பு, குற்றம், படுக்கை, முரசம், ஆயுதப்பொது பச்சை, கள், அரிதல்—47.

5. அண்டர் :—தேவர், இடையர், பகைஞர்.

6. அலரி யெனும்பெய ரலர்க்கணை ஐந்தும்
இரவியி மலருமோர் மரமு நீராவியுந்
தேனீயும் அழகும் செப்பப் பெறுமே.

7. அருண னெனும்பெய ரருக்கனும் அவன்தேர்
பாகனும் புதனும் பகர்ந்தனர் புலவர்.

8. அளக்க ரெனும்பெயர் சேறும் உப்பளமும்
கடலும் புடவியுங் கார்த்திகை நாளுமாம்.

9. அத்த மெனும்பெய ரருநெறி யுடனே
ஒருநாள் மீனும் உறுகவிப் பொருளும்
காடும் கனகமும் கையும் பாதியும்
கண்ணு டியுமெனக் கருதுவர் புலவர்.

10. அணங்கெனும் பெயரே ஆசையும் அழகும்
வருத்தமும் கொலையும் ஐய னேயும்
தெய்வமுந் தெய்வத்து வமைசொல் மாதுமாம்.

11. அங்கத மெனுபெய ரரவுந் தோளணியும்
வசைபுகல் கவிதையும் வழங்கப் பெறுமே.

12. அரவ மெனுபெய ரோசையும் பாம்பும்
சிலம்பும் எனவே செப்புவர் புலவர்.

13. அண்ட மெனும்பெயர் முட்டையும் விசும்புமாம்.

14. அம்பர மெனும்பெய ராடையும் விசும்பும்
கடலு மெனவே கருதப் பெறுமே.

15. அஞ்சன மெனும்பெயர் கருமை நிறமும்
ஒருதிசை யானையு மெழுதுகண் மையுமாம்.

16. அங்கி யெனும்பெய ரனலும் சட்டையும்.

6. அலரி :—மலர்க்கணை ஐந்து. சூரியன், பூமரம், நீராவி, தேனீ, அழகு.

7. அருணன்:—சூரியன், சூரியன்தேர்ப்பாகன், புதன்.

8. அளக்கர்:—சேறு, உப்பளம், கடல், பூமி, கார்த்திகை நட்சத்திரம்.

9. அத்தம் :—அருநெறி, ஒருநட்சத்திரம் (ஹஸ்தம்) சொற்பொருள், காடு, பொன், கை, பாதி, கண்ணாடி.

10. அணங்கு :—ஆசை, அழகு, வருத்தம், கொலை, ஐயம், நோயும், தெய்வம், கொல்லியம் பாவையர்.

11. அங்கதம் :—பாம்பு, தோளணி, வசைச்சொல்.

12. அரவம் :—ஓசை, பாம்பும், சிலம்பு.

13. அண்டம் :—முட்டை, ஆகாயம்.

14. அம்பரம் :—ஆடை, ஆகாயம், கடல்.

15. அஞ்சனம் :—கருமைநிறம், மேற்றிசை யானை, மை.

16. அங்கி :—நெருப்பு, சட்டை.

17. அயமெனும் பெயரே அறலும் குதிரையும்
குளமும் இரும்பும் தகருங் கூறுவர்.

18. அளக மெனுபெயர் புனலு மயிரும்
மயிர்க்குழற் சியுமென வகுத்தனர் புலவர்.

19. அளறெனும் பெயரே நரகமும் சேறுமாம்.

20. அந்தரி யெனும்பெயர் துர்க்கையும் உமையுமாம்.

21. அல்கல் எனும்பெயர் தங்கலு நாளும்
சுருங்கலும் இரவும் சிறுமையும் சொல்லுவர்.

22. அந்தி யெனும்பெயர் பாலையாழ்த் திறத்தோர்
ஓசைப் பெயரு மாலையும் இரவுமாம்.

23. அடுப்பெனும் பெயரே யியம ளுைம்
அச்சப் பெயருமுத் தானமு மாமே.

24. அறுவை யெனும்பெயர் சித்திரை நாளும்
தூசும் எனவே சொல்லப் பெறுமே.

25. அன்றில் எனும்பெயர் மூல நாளுமோர்
புள்ளும் எனவே புகன்றனர் புலவர்.

26. அகியெனும் பெயரே அரவும் இரும்புமாம்.

27. அணுவெனும் பெயரே நுண்மையும் உயிரும்
மந்திரப் பெயரும் வழங்கப் பெறுமே.

28. அகலுள் எனும்பெயர் ஊரு நாடும்
பரப்பும் எனவே பகரப் பெறுமே.

29. அவந்தி யெனும்பெயர் கிளியின் பெயரும்
உஞ்சேனை நகரமும் உரைத்தனர் புலவர்.

17. அயம் :—நீர், குதிரை, குளம், இரும்பு, ஆடு.

18. அளகம் :—நீர், பெண்மயிர், மயிர்க்குழற்சி.

19. அளறு:—நரகம், சேறு.

20. அந்தரி:—துர்க்கை, உமை.

21. அல்கல் :—தங்குதல், தினம், குறைதல், இரவு, சிறுமை.

22. அந்தி:—பாலையாழ் திறத்திலொன்று, மாலை, இரவு.

23. அடுப்பு: பரணிநட்சத்திரம், அச்சம், அடுப்பு.

24. அறுவை:—சித்திரைநட்சத்திரம், ஆடை.

25. அன்றில்:—மூலநட்சத்திரம், ஒரு பறவை.

26. அகி:—பாம்பு, இரும்பு.

27. அணு:—நுண்மை, உயிர், மந்திரம்.

28. அகலுள்:—ஊர், நாடு, பரப்பு.

29. அவந்தி :—கிளி, உச்சயினி நகரம்.

30. அருப்பம் எனும்பெயர் ஊர்ப்பொதுப் பெயரும்
சோலையின் பெயரும் நோயும் காடுமாம்.

31. அடையெனும் பெயரே இலையின்பெயரும்
அடுத்தலும் கனமும் அப்பமும் வழியுமாம்.

32. அருவி யெனும்பெயர் மலைச்சார்நதியுந்
தினைத்தாள் பெயரும் செப்பப் பெறுமே.

33. அயிரி யெனும்பெயர் நுண்மணற் பெயரு
மீன்முள் ளரிந்திடு கருவியும் விளம்புவர்.

34. அணையெனும் பெயரே மெத்தையும் சயனமும்
செய்கரைப் பெயரும் செப்பப் பெறுமே.

35. அகமெனும் பெயர்மரப் பொதுவும் சயிலமும்
இல்லமு மனமும் இடமும் பாவமும்
ஐந்திணைப் பொருளு டனுள்ளு மாமே.

36. அங்கணம் எனும்பெயர் தூம்பு வாயிலு
முன்றிலுஞ் சேறும் மொழிந்தனர் புலவர்.

37. அரச னெனும் பெயர் வியாழமு மன்னனும்.

38. அன்னை யெனும்பெயர் முன்பிறந் தாளுந்
தாயும் துணைவியும் சாற்றப் பெறுமே.

39. அம்மை யெனும்பெயர் தாயு மறுபிறப்பும்
யாப்பினோர் வனப்பும் இயம்பப் பெறுமே.

40. அணியெனும் பெயரே அழகும் பெருமையும்
படையின துறுப்பும் இலக்கண அணியும்
பூணும் ஒப்பனையும் புகன்றனர் புலவர்.

41. அரத்தம் எனும்பெயர் அரத்தமும் சிவப்பும்
அரக்கும் கடம்பு மரத்தவுற் பலமுமாம்.

30. அருப்பம் :—ஊரின்பொதுப்பெயர், சோலை, ஒரு நோய், காடு.

31. அடை:—இலை, அடுத்தல், கனம், அப்பம், வழி.

32. அருவி :—மலைச்சாரலாறு, தினைத்தாள்.

33. அயிரி :—நுண்மணல், மீன்முள். அரிந்திடுகின்ற கத்தி.

34. அணை :—மெத்தை, படுக்கை, செய்கரை.

35. அகம் :—மரப்பொது, மலை, வீடு, மனம், இடம், பாவம் ஐந்திணைப்பொருள், உள்.

36. அங்கணம் :—சலதாரை, முன்றில், சேறு.

37. அரசன் :—பிரகஸ்பதி, மன்னன்

38. அன்னை :—அக்காள், தாய், தோழி.

39. அம்மை :—தாய், மறுபிறப்பு, ஒரு செய்யுள் வனப்பு.

40. அணி :—அழகு, பெருமை, படைவகுப்பு அணி இலக்கணம், ஆபரணம், அலங்காரம்.

41. அரத்தம் :—ரத்தம், சிவப்பு, அரக்கு, கடம்பமரம் செங்குவளை,

42. அடியெனும் பெயரே முதன்மையும் காலுங்
கவிதையின் பாதமும் செண்டும் வெளியுமாம்.

43. அரலை யெனும்பெயர் அருங்கனி விதையும்
மரலும் கழலையின் பெயரும் வழங்குவர்.

44. அன்னமெனும் பெயர் சோறும் ஓதிமமுமாம்.

45. அக்கார மென்னும் பெயர்சருக்கரையும்
புடைவையும் எனவே புகன்றனர் புலவர்.

46. அழனம் எனும்பெயர் அனலும் பிணமுமாம்.

47. அளியெ னும்பெய ரன்பும் நறவும்
கொடையும் வண்டின் பெயரும் கூறுவர்.

48. அரிட்டம் எனும்பெயர் பிறவியிற் குற்றமும்
கள்ளும் காக்கையும் கருதப் பெறுமே.

49. அத்தெனும் பெயரே அசைச்சொல்லும் சிவப்பும்
இசைப்புந் துன்னமும் அரைப்பட் டிகையுமாம்.

50. அக்கெனும் பெயரே சங்கின் மணியும்
ஏற்றின் முரிப்பும் எலும்பும் இயம்புவர்.

51. அராகம் எனும்பெயர் பாலையாழ்த் திறமும்
செந்நிறப் பெயரு முடுகியற் கவிதையும்
ஆசையின் பெயரு மாமென வழங்குவர்.

52. அனந்தம் எனும்பெயர் பொன்னும் ஆகாயமும்
அளவின் மைப்பொருட் பெயரு மாமே.

53. அலங்கல் எனும்பெயர் அசைவும் தொடையலும்
இலங்கலும் தளிரும் இயம்புவர் புலவர்.

54. அரந்தை யெனும்பெயர் குறிஞ்சி யாழிசையும்
துன்பமும் என்னச் சொல்லுவர் புலவர்.

42. அடி :—முதல், கால், கவிதையின்அடி, செண்டு, தூய்மை,

43. அரலை :—பழவிதை, சிறுசெடிவகை, கழலை.

44. அன்னம் :—சோறு, அன்னப்பறவை.

45. அக்காரம் :—சருக்கரை, ஆடை.

46. அழனம் :—நெருப்பு, பிணம்.

47. அளி :—அன்பு, தேன், கொடுத்தல், வண்டு.

48. அரிட்டம் :—பிறவிக்குற்றம், கள், காக்கை.

49. அத்து :—அசைச்சொல், சிவப்பு, இசைப்பு, தைப்பு, அரைப்பட்டிகை.

50. அக்கு :—சங்குமணி, எருத்தின் திமில், எலும்பு.

51. அராகம் :—பாலையாழ்த்திறம், சிவப்பு, பாட்டின் ஒருறுப்பு, ஆசை.

52. அனந்தம் :—பொன், ஆகாயம், அளவின்மை.

53. அலங்கல் :—அசைவு, பூமாலை, ஒளிசெயல், தளிர்.

54. அரந்தை :—குறிஞ்சியாழிசை, துன்பம்.

55. அடலெனும் பெயரே சமரும் பெலமும்
வென்றியும் எனவே விளம்பப் பெறுமே.

56. அயிலெனும் பெயரே வேலுங் கூர்மையும்
ஆர்தலின் பெயரு மாகு மென்ப.

57. அரணம் எனும்பெயர் காவற் காடும்
வேலுங் காவலும் மதிலும் கவசமும்.

58. அம்பண மென்னும் பெயர்மரக் கலமும்
கதலித் தண்டும் நீர்ப்பத்தலுந் தூம்பும்
ஆமையின் பெயரு மாமெனப் புகலுவர்.

59. அளித்தல் எனும்பெயர் கொடுத்தலும் காத்தலும்
செறிவும் எனவே செப்புவர் புலவர்.

60. அச்சம் எனும்பெயர் கத்தியும் பயமுமாம்.

61. அருணம் எனும் பெயர் செம்மறி யாடும்
மானும் எலுமிச்சுஞ் சிவப்பும் வழங்குக.

62. அந்தம் எனும்பெயர் அழகு முடிவுமாம்.

63. அம்பல் எனும்பெயர் பழிமொழி யுடனே
சிலரறிந்து தம்முட் புறங்கூறல் செப்புவர்.

64. அலரெனும் பெயர்பழி மொழியும் பூவும்
பலரறிந் தலர்தூற் றுதலும் பகருவர்.

65. அரற்றல் எனும்பெயர் அழுகையும் ஒலித்தலும்.

66. அஞ்சலி எனும்பெயர் அஞ்சலித் திறைஞ்சலும்
வாவற் பறவையும் வகுத்தனர் புலவர்.

67. அலகெனும் பெயரே நுளம்பும் சோதிடமும்
நெற்கதி ராதியும் பலகறைப் பெயரும்
மகளிர் பரலும் புல்வாயுந் துடைப்பமும்.

55. அடல் :—போர், பலம், வெற்றி.

56. அயில் :—வேல், கூர்மை, ஆர்தல். (குடித்தல்)

57. அரணம் :—காவற்காடு, வேல், காவல், மதில், கவசம்.

58. அம்பணம் :—மரக்கலம், வாழைத்தண்டு, நீர்ப்பத்தல், நீர்விழுங்கருவி, ஆமை.

59. அளித்தல் :—கொடுத்தல், காத்தல், நெருங்குதல்.

60. அச்சம் :—அகத்தி, பயம்.

61. அருணம் :—ஆடு, மான், எலுமிச்சை, சிவப்பு

62. அந்தம்:—அழகு, முடிவு.

63. அம்பல் :—பழிமொழி, சிலர் அறிந்து தம்முள் புறங்கூறல் (இரகசியத்தை வெளிப்படுத்துதல்).

64. அலர் :—பழிச்சொல், பூ, பலர் அறிந்து பழிதூற்றல்.

65. அரற்றல்:—அழுகை, ஒலித்தல்.

66. அஞ்சலி :—கும்பிடல், வாவற்பறவை.

67. அலகு :— சிறு கொசுகு, சோதிடம், நெற்கதிர் முதலியன, பலகறை, பெண்கள் கால்களில் அணிந்துகொள்ளும் மாணிக்கப்பரல், பறவைகளின் மூக்கு, துடைப்பம்.

68. அல்லி யெனும் பெயர் காசை மரமும்
வெள்ளாம் பலுமக விதழும் விளம்புவர்.

69. அதமெனும் பெயர்பா தாளமும் கீழும்
இறங்குதற் பெயரும் இயம்புவர் புலவர்.

70. அரமெனும் பெயரே பலபொருள் வடிவின்
அருகும் அராவும் கருவியு மாமே.

71. அகைத்தல் எனும்பெயர் அறுத்தலும் ஒலித்தலும்
இரத்தலும் எனவே இயம்பப் பெறுமே.

72. அசியெனும் பெயரே அவமதிச் சிரிப்பும்
வசிதரு வாளும் படைக்கலப் பொதுவுமாம்.

73. அமரர் எனும்பெயர் அடுபடை வீரரும்
தேவரும் எனவே செப்புவர் புலவர்.

74. அந்தணர் எனும்பெயர் அறவோர் பெயரும்
பூசுரர் பெயரும் புகலுவர் புலவர்.

75. அள்ளெனும் பெயரே காதும் கூர்மையும்
வரிபத் திரும்பும் வன்மையும் செறிவுமாம்.

76. அலம் எனும் பெயரே அமைவும் கலப்பையும்.

77. அயிரெனும் பெயரே சருக்கரைப் பெயரும்
நுண்மணற் பெயரும் நுண்மையும் நுவலுவர்.

78. அண்டசம் எனும்பெயர் அரவும் தவளையும்
நண்டு முதலையு மாமையு மீனும்
உடும்பும் ஓந்தியும் பல்லியும் அரணையும்
பறவையும் இப்பியும் பகர்ந்தனர் புலவர்.

79. அற்றம் எனும்பெயர் மறைவும் அவகாசமு
முடிவும் எனவே மொழியப் பெறுமே.

68. அல்லி :—காயாமரம், வெள்ளாம்பல், அகவிதழ்.

69. அதம் :—பாதாளம், கீழ் இறங்குதல்.

70. அரம் :—அராவும் கருவி.

71. அகைத்தல் :—அறுத்தல், ஒலித்தல், இரத்தல்

72. அசி :—இகழ்ச்சி நகை, வாள், ஆயுதப்பொது.

73. அமரர் :—வீரர், தேவர்.

74. அந்தணர் :—முனிவர், பார்ப்பார்.

75. அள் :—காது, கூர்மை, இரும்பு, வலிமை, செறிவு.

76. அலம் :—அமைவு, கலப்பை.

77. அயிர் :—சர்க்கரை, நுண்மணல், நுண்மை.

78. அண்டசம் :—பாம்பு, தவளை, நண்டு, முதலை, ஆமை, மீன், உடும்பு, ஓணன், பல்லி, அரணை, பறவை, இப்பி.

79. அற்றம் :—மறைவு, சமயம், முடிவு.

80. அருச்சுனம் எனும்பெயர் மருதும் வெளுப்புமாம்.

81. அத்தி யெனும்பெய ரதவு மியானையும்
உவரியும் எலும்பும் உரைக்கப் பெறுமே.

82. அந்தில் எனும்பெயர் அசைச்சொல்லு மிடமுமாம்.

83. அம்மெனும் பெயரே அசைச்சொல்லு மழகும்
புனலின் பெயரும் புகலப் பெறுமே.

84. அம்பெனும் பெயரே மேகமும் புனலும்
கணையு மூங்கிலுங் கருதப் பெறுமே.

85. அகளம் எனும்பெயர் தாழியும் இடாவுமாம்.

86. அங்காரக மெனும்பெயர் பூசு வனவும்
நெருப்பும் எனவே நிகழ்த்துவர் புலவர்.

87. அஞரெனும் பெயரே அறிவிலோர் பெயரும்
துக்கமும் எனவே சொல்லுவர் புலவர்.

88. அந்தகர் எனும்பெயர் குருடருங் கூற்றுமாம்.

89. அரக்கெனும் பெயரே மதுவிலோர் விகற்பமும்
சிவப்புஞ் செந்நிற மெழுகும் செப்புவர்.

90. அகவல்எனும்பெயர் கூத்துமாசி ரியப்பாவும்.

91. அரங்கம் எனும்பெயர் ஆற்றிடைக் குறையும்
போரிடம் வட்டா டிடமும் சபையும்
கூத்தா டுமிடப் பெயருங் கூறுவர்.

92. அள்ளல் எனும்பெயர் நரகமும் சேறுமாம்.

93. அழுங்கல் எனும்பெயர் ஆர வாரமும்
இரங்கலும் கேடும் இசைக்கப் பெறுமே.

80. அருச்சுனம் :—மருதமரம், வெளுப்பு.

81. அத்தி :—மரவகை, யானை, கடல், எலும்பு.

82. அந்தில் :—அசைச்சொல், இடம்.

83. அம் :—அசைச்சொல், அழகு, தண்ணீர்.

84. அம்பு :—மேகம், நீர், கணை, மூங்கில்.

85. அகளம் :—தாழி, இறைகூடை.

86. அங்காரகம் :—பூசுவன, நெருப்பு.

87. அஞர் :—அறிவிலார், துயரம்.

88. அந்தகர் :—குருடர், இயமன்.

89. அரக்கு —கள்ளில் ஒரு வகை, சிவப்பு, செந்நிற மெழுகு.

90. அகவல் :—ஆடல், ஆசிரியப்பா.

91. அரங்கம் :—ஆற்றிடைக்குறை, போரிடம், சூதாடுமிடம், சபை, கூத்தாடுமிடம்.

92. அள்ளல் :—நரகம், சேறு.

93. அழுங்கல் :—ஆரவாரம், இரங்கல், கேடு.

94. அறலெனும் பெயரே நீரு நீர்த்திரையும்
விழவும் நுண்மணலும் விளம்புவர் புலவர்.

95. அளேயெனும் பெயரே தயிரும் வன்மீகமும்
உம்மையும் பாளியும் மோர்இன்மைப் பெயருமாம்.

96. அங்கம் எனும்பெயர் உடலும் உறுப்பும்
ஆறங்கமும் கட்டிலும் எலும்பு மாமே.

97. அழுவ மெனும்பெயர் துருக்கமும் பரப்பும்
நாடும் எனவே நவின்றனர் புலவர்.

98. அருகெனும் பெயரே யாளியும், சிங்கமும்
புலியும் யானேயும் புல்லினேர் விகற்பமுமாம்.

99. அத்திரி யெனும்பெயர் மலேயும் குதிரையும்
கழுதையும் ஒட்டகப் பெயரும் கருதுவர்.

100. அறையெனும் பெயர்மலே முழையும் பாறையும்
சிற்றிலும் மொழியும் செப்பப் பெறுமே.

101. அரிலெனும் பெயர்சிறு, தூறும் பிணக்கமும்
குற்றமும் பரலும் கூறுவர் புலவர்.

102. அவலெனும் பெயர்நீர் நிலேயும் பள்ளமும்
முளேயு நெற்பெறு சிற்றுண்டியு மொழிகுவர்.

103. அண்ணே யெனும்பெயர் அறிவிலோன் பெயரும்
பேயின் பெயரும் பேசப் பெறுமே.

104. அகப்பா வெனும்பெயர் மதிலுமுள் ளுயரத்துப்
பொருந்திய மேடையின் பெயரும் புலம்புவர்.

105. அசமெ னும்பெயர் புருவை யாடும்
மூவாட்டை நெல்லின் பெயரு மொழிகுவர்.

94. அறல் :—நீர், நீர்த்திரை, விழவு, நுண்மணல்.

95. அளே :—தயிர், புற்று, உம்மை, இடம், மோர், இன்மைப் பெயர்.

96. அங்கம் :—உடல், உறுப்பு, ஆறங்கம், கட்டில், எலும்பு.

97. அழுவம் :—மதில், பரப்பு, நாடு.

98. அறுகு :—யாளி, சிங்கம், புலி, யானே, புல்லில் ஒருவகை.

99. அத்திரி :—மலே, குதிரை, கழுதை, ஒட்டகம்.

100. அறை :—மலேக்குகை, பாறை, சிற்றில், மொழி.

101. அரில் :—சிறுதூறு, பிணக்கம், குற்றம், பரல்.

102. அவல் :—நீர்நிலே, பள்ளம், சிற்றுண்டி.

103. அண்ணே :—அறிவிலாதவன், பேய்.

104. அகப்பா :—மதிலுண்மேடை.

105. அசம் :—ஆடு, நெல்.

106. அசனி யெனும்பெயர் வச்சிரா யுதமும்
இடியின் பெயரும் இயம்பப் பெறுமே.

107. அல்லெனும் பெயரே இரவும் இருளுமாம்.

108. அரிதம் எனும்பெயர் பசுமையும் திசையும்
பசும்புற் றரையும் பகரப் பெறுமே.

109. அகடெனும் பெயரே வயிறும் புறமுமாம்.

110. அமரல் எனும்பெயர் மிடைதலும், பொலிவுமாம்.

111. அருகல் எனும்பெயர் சுருங்கலுஞ் சார்தலும்.

112. அடுதல் எனும்பெயர் அடர்தலும் கொலையும்
பலபொருள் பாகப் படுத்தலின் பெயருமாம்.

113. அவிர்தல் எனும்பெயர் பீறலும் ஒளியுமாம்.

114. அம்பி யெனும்பெயர் தெப்பமும் தோணியும்
நீர்மே லோடு வனவு நிகழ்த்துவர்.

115. அந்தர மெனும்பெயர் பேத முடிவும்
விண்ணி னிடமும் விளம்பப் பெறுமே.

116. அங்கா ரகனெனும் பெயருதா சனனும்
செவ்வாய்ப் பெயரும் செப்பப் பெறுமே.

117. அடரெனும் பெயரே ஐமை வடிவும்
நெருங்குதற் பெயரு நிகழ்த்தப் பெறுமே.

118. அரங்கெனும் பெயரே மனையின் விகற்பமும்
சபையும் வட்டாடிடமும் போரிடமுமாம்.

119. அயன மெனும்பெயர் ஆண்டிற் பாதியும்
வழியும் எனவே வகுத்தனர் புலவர்.

106. அசனி :—வச்சிரரயுதம், இடி.

107. அல் :—இரவு, இருள்.

108. அரிதம் :—பசுமை, திசை, பசும்புல்.

109. அகடு :—வயிறு, புறம்.

110. அமரல் :—நெருங்குதல், பொலிதல்.

111. அருகல் :—சுருங்கல், சார்தல்.

112. அடுதல் :—அடர்தல், கொலே, பலபொருள், களேப் பாகப்படுத்துதல். (சமைத்தல்)

113. அவிர்தல் :—பீறல் (கிழிக்கை) ஒளிசெய்தல்.

114. அம்பி :—தெப்பம், தோணி, நீர்மேல் செல்வன.

115. அந்தரம் :—வேறுபாடு, முடிவு, ஆகாயம்.

116. அங்காரகன் :—உதாசனன், செவ்வாய்.

117. அடர்: —அச்சவடிவு, நெருங்குதல்.

118. அரங்கு :—மனேவிகற்பம், சபை, சூதாடுமிடம், போர்க்களம்.

119. அயனம் :—வருடப்பாதி, வழி.

120. அமலை யெனும்பெயர் உமையவள் பெயரும்
ஆர வார மும்சபைப் பெயருமாம்.

121. அலவன் எனும்பெயர் நண்டும் பூனையும்
நிலவுங் கடக ராசியும் நிகழ்த்துவர்.

122. அரசெனும் பெயரோர் தருவு மன்னனும்
ராச்சியப் பெயரும் இயம்பப் பெறுமே.

123. அறிக்கை எனும்பெயர் அறிதலின் பெயரும்
பற்று வித்தலின் பெயரும் பகருவர்.

124. அதரெனும் பெயரே புழுதியும் வழியும்
நுண்மணற் பெயரு நுவலப் பெறுமே.

125. அருந்த லெனும்பெயர் அருமையும் பொசித்தலும்.

126. அத்தன் எனும்பெயர் ஈசனும் குருவும்
தந்தையும் எனவே சாற்றினர் புலவர்.

127. அனித்தியம்எனும்பெயர் நிலையாமைபொய்யுமாம்.

128. அண்ணல் எனும்பெயர் தலைவனும் பெருமையும்.

129. அச்சுதன் எனும்பெயர் அழுதிறை பெயருங்
கண்ணனும் அசோகமர்க் கடவுள் பெயருமாம்.

130. அனுவெனும் பெயரே தொடர்ச்சியும் கவுளுமாம்.

131. அமுதம் எனும்பெயர் முத்தியும் பெருமையும்
புனலும் பயசும் புலவ ருணவுடன்
மேகமும் எனவே விளம்புவர் புலவர்.

132 அம்பரம் எனும்பெயர் அம்புடன் ஆனையிற்
பிறகா லுமெனப் பேசுவர் புலவர்.

120. அமலை :—உமை, ஆரவாரம், சபை.

121. அலவன் :—நண்டு, பூனை, சந்திரன், கடக இராசி.

122. அரசு : ஒருமரம், அரசன், இராச்சியம்.

123. அறிக்கை :—அறிதல், பற்று.

124. அதர்:—புழுதி, வழி, நுண்மணல்.

125. அருந்தல் —அருமை, புசித்தல்.

126. அத்தன் :—ஈசன், குரு, தந்தை.

127. அனித்தியம் :—நிலையாமை, பொய்.

128. அண்ணல் :—தலைவன், பெருமை.

129. அச்சுதன் : - அமுது, கண்ணன், அருகன்.

130. அனு:—தொடர்ச்சி, கன்னம்.

131. அமுதம் :—முத்தி, பெருமை, நீர், பால், உணவு, மேகம்.

132. அம்பரம் :—தண்ணீர்.

133. அலையெனும் பெயரே கடலும் கடற்றிரைப்
பெயரும் எனவே பேசப் பெறுமே.

134. அராவல் எனும்பெயர் புரைதலும் குறுகலும்.

135. அரணி யெனும்பெயர் தீக்கடை கோலும்
கவசமு மதிலும் கருதப் பெறுமே.

136. அற்பம் எனும்பெயர் சிறுமையும் நாயுமாம்.

137. அழுக்கா றெனும்பெயர் பொறாமையின் பெயரும்
மனக்கோட் டத்தின் பெயரும் வழங்குவர்.

138. அனங்கம் எனும்பெயர் மல்லிகைப் பெயரும்
இருவாட் சியுமென இயம்புவர் புலவர்.

139. அசையெனும் பெயரீ ரசைகளும் அசைச்சொல்லும்.

140. அமுதெனும் பெயரே பாலும் இன்சுவையும்
தெய்வ வுணவின் விகற்பமும் செப்புவர்.

141. அசோகமெனும் பெயரசோகின் தருவும்
இன்பமும் எனவே இயம்பப் பெறுமே.

142. அசைத்தல் எனும்பெயர் அசைத்தலின் பெயரும்
கட்டுதற் பெயரும் கருதுவர் புலவர்.

அகரவருக்கம் முற்றும்

133. அலே :—கடல், கடலலே.

134. அராவல் :—புரைதல், குறுகல்.

135. அரணி :—தீக்கடைகோல், கலசம், மதில்.

136. அற்பம் :—சிறுமை, நாய்.

137. அழுக்காறு :—பொருமை, புத்தியின்கோணல்.

138. அனங்கம் :—மல்லிகை, இருவாட்சி.

139. அசை :—நேரசை, நிரையசை, அசைச்சொல்.

140. அமுது ;—பால், இன்சுவை, அமுதம்.

141. அசோகு :—அசோகமரம், இன்பம்.

142. அசைத்தல் :—அசைத்தல், கட்டுதல்.

---

# ஆகார வருக்கம்

143. ஆதி யெனும்பெய ரரன்றிரு நாமமு
மாதவனும் ஒற்றியில் வைத்த பொருளும்
அருகனு முதலு நேரோடலு மாமே.

144. ஆரல் எனும்பெயர் அங்கா ரகனும்
கார்த்திகை நாளும் கடிமதில் உறுப்பும்
ஒருமீன் பெயரும் உரைத்தனர் புலவர்.

145. ஆவணம் எனும்பெயர் தெருவும் அங்காடியும்
அடிமை யோலையும் புனர்பூ சமுமாம்.

146. ஆடி யெனும்பெயர் மாதத்தி லொன்றும்
நாடி லுத்திராடமும் கண்ணா டியுமாம்.

147. ஆசை யெனும்பெயர் திசையும் காதலும்
பொன்னும் எனவே புகன்றனர் புலவர்.

148. ஆழி யெனும்பெயர் நேமிப் புள்ளும்
கடலும் வட்ட வடிவுந் தேர்க்காலும்
சக்கிரா யுதமு மோதிரமுங் கரையுமாம்.

149. ஆலம் எனும்பெயர் அறலும் விடமும்
ஆல மரமும் மலர்ந்திடு பூவுமாம்.

150. ஆசார மென்னும் பெயர்நல் லொழுக்கமும்
தூசின் பெயரும் மழைப்பெயருஞ் சொல்லுவர்.

151. ஆர்வம் எனும்பெயர் விருப்பொடு நரகுமாம்.

152. ஆறெனும் பெயரே வழியும் நதியுமோர்
எண்ணும் எனவே இயம்புவர் புலவர்.

143. ஆதி :—அரன், திருமால், ஒற்றியில் வைத்த பொருள், அருகன், முதல், நேரோட்டம்.

144. ஆரல் :—அங்காரகன், கார்த்திகை நட்சத்திரம், மதிலின் உறுப்பு, மீனில்ஒருவகை.

145. ஆவணம் :—தெரு, கடைவீதி, அடிமைஓலை, புனர் பூச நட்சத்திரம்.

146. ஆடி :—ஒருமாதம், உத்திராட நட்சத்திரம் கண்ணாடி.

147. ஆசை :—திசை, காதல், பொன்.

148. ஆழி :—சக்கரவாகப்பறவை, கடல், வட்டவடிவு, தேர்க்கால், சக்கராயுதம், மோதிரம், கரை.

149. ஆலம் :—அறல், விடம், ஆலமரம், பூ.

150. ஆசாரம் :—நல்லொழுக்கம், ஆடை, மழை.

151. ஆர்வம் :—விருப்பு, நரகு.

152. ஆறு :—வழி, நதி, எண்.

153. ஆலயம் எனும்பெயர் தேவர் கோயிலும்
நகரமும் யானைக் கூட்டமும் நவிலுவர்.

154. ஆரை எனும்பெயர் கொத்தளிப்பாய் புரிசையாம்
நீர்செறி யாரையின் பெயரு நிகழ்த்துவர்.

155. ஆடவர் எனும்பெயர் ஆண்பாற் பொதுவும்
இளைஞர் பெயரும் இயம்பப் பெறுமே.

156. ஆர்வல ரெனும்பெயர் அன்புடை யோனும்
கணவனும் எனவே கருதுவர் புலவர்.

157. ஆக மெனும்பெயர் தேகமு மார்புமாம்

158. ஆகார மெனும்பெயர் அசனமு நெய்யுந்
தேகமும் எனவே செப்பப் பெறுமே.

159. ஆம்பல் எனும்பெயர் ஆனையுங் குமுதமும்
இசையின் குழலும் கள்ளு மூங்கிலும்
ஒலியின் பெயரும் உரைத்தனர் புலவர்.

160. ஆரம் எனும்பெயர் அத்தி மரமும்
அணிகலப் பொதுவுந் தரளமு மாலையும்
சந்தனமு மணிவடமும் பதக்கமும்.

161. ஆடல் எனும்பெயர் வென்றியு நடனமும்
உரையா டலுமென வுரைத்தனர் புலவர்

162. ஆர்ப்பெனும் பெயரே ஆரவா ரித்தலும்
அமருஞ் சிரிப்பும் ஆகும் என்ப.

163. ஆரெனும் பெயரே யாத்தியும் கூர்மையும்
தேராழி யுறுப்பு நிறைவும் செப்புவர்.

164. ஆசெனும் பெயரே அற்பமும் குற்றமும்
மெய்புகு கருவியும் விரைவுமோர் கவியுமாம்,

153. ஆலயம் :—கோயில், நகரம், யானைக்கூடம்.

154. ஆரை :—கொத்தளிப்பாய், மதில், நீர்செறியாரை.

155. ஆடவர் :—ஆண்பாற்பொது, இளைஞர்.

156. ஆர்வலர் :—அன்புடையோர், கணவன்.

157. ஆகம் :—சரீரம், மார்பு.

158. ஆகாரம் :—உணவு, நெய், சரீரம்.

159. ஆம்பல் :—யானை, குமுதமலர், புல்லாங்குழல், கள், மூங்கில், ஒலி.

160. ஆரம் :—அத்திமரம், ஆபரணப்பொது, முத்துமாலை, சந்தனம், மணி வடம், பதக்கம்.

161. ஆடல் :—வெற்றி, நடனம், உரையாடல்.

162. ஆர்ப்பு :—பேரொலி, சிரிப்பு.

163. ஆர் :—ஆத்திமரம், கூர்மை, தேராழியுறுப்பு, நிறைதல்.

164. ஆசு :—அற்பம், குற்றம், மெய்க்கவசம், சீக்கிரம், ஒருகவி.

165. ஆற்ற லெனும்பெயர் ஆண்மையு மிகுதியும்
பொறுமையும் சுமத்தலும் பெலமும் பொய்யாமை
ஞானமும் உண்டாக் குதலும் நவிலுவர். [யும்

166. ஆடெனும் பெயரே யாட்டின் விகற்பமும்
மேடவி ராசியும் வென்றியும் விளம்புவர்.

167. ஆகுலம் எனும்பெயர் சத்த வொலியுடன்
வருத்தமும் எனவே வழங்கப் பெறுமே.

168. ஆர்த லெனும்பெயர் உண்டலும் நிறைதலும்
அணிதலின் பெயரு மாகு மென்ப.

169. ஆணையெனும் பெயரி லாஞ்சனையு முண்மையும்
சத்திய வசனமும் ஏவலும் சாற்றுவர்.

170. ஆசினி யெனும்பெயர் மரவயி ரத்தொடு
பலாவினோர் விகற்பமும் விசும்பும் பகருவர்.

171. ஆக்கம் எனும்பெயர் அன்புசெய மிலாபம்
பாக்கிய வியல்பும் பயில்பூந் திருவுமாம்.

172. ஆரி எனும்பெயர் அழகும் கதவுமாம்.

173. ஆணம் எனும்பெயர் அன்பும் குழம்புமாம்

174. ஆகு வெனும்பெயர் எலியின் விகற்பமும்
மூடிகப் பெயரும் மொழியப் பெறுமே.

175. ஆதித் தியரெனும் பெயர்விண் ணவரும்
சூரியர் பெயரும் சொல்லுவர் புலவர்.

176. ஆவரணம் எனும்பெயர் அரணமு மறைவும்
சட்டையுங் கவசமும் தடையும் துகிலுமாம்.

177. ஆதன் எனும்பெயர் அறிவிலோன் பெயரும்
சீவனும் எனவே செப்பப் பெறுமே.

165. ஆற்றல் :—ஆண்மை, மிகுதி, பொறுமை, சுமத்தல், வலிமை, உண்மை, ஞானம், உண்டாக்குதல்.

166. ஆடு :—ஆடு, மேடராசி, வெற்றி.

167. ஆகுலம் :—ஆரவாரம், வருத்தம்.

168. ஆர்தல் :—உண்டல், நிறைதல், அணிதல்.

169. ஆணை :—அடையாளம், உண்மை, சத்தியவசனம், ஏவல்.

170. ஆசினி :—மரவயிரம், ஈரப்பலா, ஆகாயம்.

171. ஆக்கம் :—அன்பு, வெற்றி, இலாபம், செல்வம், இலக்குமி.

172. ஆரி :—அழகு, கதவு.

173. ஆணம் :—அன்பு, குழம்பு.

174. ஆகு :—எலி, பெருச்சாளி.

175. ஆதித்தியர் :—தேவர், சூரியர்.

176. ஆவரணம் :—ஆணம், மறைவு, சட்டை, கவசம், தடை, ஆடை.

177. ஆதன் :—அறிவில்லாதவன், உயிர்.

178. ஆங்கெனும் பெயரே யவ்விடப் பெயரும்
அசைச்சொற் பெயரும் உவமையு மாமே.

179. ஆயம் எனும்பெய ரரிவையர் கூட்டமும்
ஆதா யத்தொடு கவற்றின் ருயமுமாம்.

180. ஆயல் எனும்பெயர் ஆய்தலும் வருத்தமும்.

181. ஆய்தல் எனும்பெயர் தேர்தலு நுணுக்கமும்.

182. ஆலல் எனும்பெயர் நடனமும் ஒலியுமாம்.

183. ஆலெனும் பெயரே யசைச்சொலும் புனலும்
பழமரப் பெயரும் பகருவர் புலவர்.

184. ஆனி எனும்பெயர் கெடுதலின் பெயரும்
மாதத்தி லொன்று மூலநாட் பெயருமாம்.

185. ஆனகம் எனும்பெயர் துந்துமிப் பெயரும்
படகமும் எனவே பகர்ந்தனர் புலவர்.

186. ஆனியம் எனும்பெயர் நாளும் பொழுதுமாம்.

187. ஆசுகம் எனும்பெயர் அம்பும் காற்றுமாம்.

188. ஆவி எனும்பெயர் வாவியும் உயிரும்
புகையு நாற்றமு மூச்சும் புகலுவர்.

189. ஆவெனும் பெயரே இரக்கக் குறிப்பும்
உயிரும் பசுவும் உரைக்கப் பெறுமே.

190. ஆடகம் எனும்பெயர் துவரையும் பொன்னுமாம்.

191. ஆம்பிரம் எனும்பெயர் தேமாப் பெயரும்
புளிமாப் பெயரும் புளிப்பும் புகலுவர்.

178. ஆங்கு :—இடப்பெயர், அசைச்சொல், உவமவுருபு.

179. ஆயம் :—பெண்களின் கூட்டம், இலாபம், சூதாடு கருவி.

180. ஆயல் :—ஆராய்தல், வருத்தம்.

181. ஆய்தல் :—ஆராய்தல், நுண்மை.

182. ஆலல் :—நடனம், ஒலி.

183. ஆல் :—அசைச்சொல், நீர், ஒருமரம்.

184. ஆனி :—கேடு, ஆனிமாதம், மூலநட்சத்திரம்.

185. ஆனகம் :—துந்துமி, படகம்.

186. ஆனியம் :—நாள், பொழுது.

187. ஆசுகம் :—அம்பு, காற்று.

188. ஆவி :—குளம், உயிர், புகை, வாசனை, உயிர்ப்பு.

189. ஆ :—இரக்கக்குறிப்பு, உயிர், பசு.

190. ஆடகம் :—துவரை, பொன்.

191. ஆம்பிரம் :—தேமா, புளிமா, புளிப்பு.

192. ஆரியர் எனும்பெயர் அறிவுடை யோரும்
ஆரிய தேசத் தவரு மாமே.

193. ஆணியெனப்பெயர் எழுத்தாணியும் அழகும்
ஆணி மானவிகற்பமும் சயனமு மாமே.

ஆகார வருக்கமுற்றும்

## இகர வருக்கம்

194. இரவி எனும்பெயர் எழுஞ்சூ ரியனுடன்
மலையும் வாணிகத் தொழிலும் வழங்குவர்.

195. இருளெனும் பெயரே கருமையு மயக்கமும்
நரகமுந் திமிரமு நவின்றனர் புலவர்.

196. இரலை யெனும்பெயர் மானி னேறும்
அசுபதியு மூதுங் கொம்பு மாமே.

197. இறையெனும் பெயரே சிவனும் இல்லிறப்பும்
தலைமையுந் தலைவன் பெயருந் தங்கலும்
புள்ளிறகுங் கைவரையும் சிறுமையும்
குடியிறைப் பெயரும் சொல்லும் கூறுவர்.

198. இடியெனும் பெயரே நென்மா முதலும்
உறுதி வார்த்தை அசனியும் ஓதுவர்.

199. இறாலெனும் பெயர்கார்த் திகையும் இடபமும்
தேன்கூ டுமொரு மீனுஞ் செப்புவர்.

200. இறும்பெனும் பெயரே தாமரைப் பூவும்
மலையும் காடும் வழங்கப் பெறுமே.

201. இலஞ்சி யெனும்பெயர் மகிழமரப் பெயரும்
கொப்புளுந் தடாகமும் கூறுவர் புலவர்.

192. ஆரியர் :—அறிவுடையோர், ஆரியதேசத்தவர்.

193. ஆணி :—எழுத்தாணி, அழகு, ஆணி, மானவிகற்பம், சயனம்.

194. இரவி :—சூரியன், மலை, வாணிகத்தொழில்.

195. இருள் :—கறுப்பு, மயக்கம், ஒருவகைநரகம், இருட்டு.

196. இரலை :—ஆண்மான், அசுவதி நட்சத்திரம், ஊதுகொம்பு.

197. இறை ;—சிவன், வீட்டிறப்பு, தலைமை, தலைவன் பெயர், தங்கல், பறவையின் இறகு, கைரேகை, சிறுமை, குடியிறை.

198. இடி :—நெல் முதலியவற்றின்மா, உறுதிச்சொல், அசனி.

199. இறுல் :—கார்த்திகை, இடபம், தேன்கூடு, மீனில் ஒருவகை.

200. இறும்பு :—தாமரைப்பூ, மலை, காடு.

201. இலஞ்சி :—மகிழமரம், கொப்பூழ், குளம்.

202. இடையெனும் பெயரே இடமும் நுசுப்பும்
நடுவும் எனவே நவிலப் பெறுமே.

203. இகுளை யெனும்பெயர் சுற்றமும் பாங்கியும்.

204. இரதம் எனுபெயர் தேரும் இன்சுவையும்
அரைநாண் புணர்ச்சி பாத ரதமுமாம்.

205. இலம்பக மெனும்பெய ரத்தி யாயமும்
நுதலணிப் பெயருந் தொடையலு நுவலும்.

206. இந்தனம் எனும்பெயர் இசையும் காட்டமும்
நெருப்பிடு கலனு நிகழ்த்துவர் புலவர்.

207. இளியெனும் பெயரோ ரிசையும் யாழ்நரம்பும்
இகழ்ச்சியில் வருக்கப் பெயரும் இயம்புவர்.

208. இலயம் எனும்பெயர் கூத்தின் விகற்பமும்
கூத்தின் பெயருங் கேடுங் கூறுவர்.

209. இறைவை யெனும்பெயர் ஏணிநீர்ப் புட்டிலாம்.

210. இழுக்கம் எனும்பெயர் பிழைத்தல் பொல்லாங்கு
மாம்.

211. இறப்பெனும் பெயரே யிறத்தலும் மிகுதியும்
நடத்தலு மில்லி றப்பும் நவிலுவர்.

212. இலாங்கலி யெனும்பெயர் தென்ன மரமும்
கலப்பைப் பெயரும் வெண்காந்தளும் கருதுவர்.

213. இகுத்தல் எனும்பெயர் கொடுத்தலும் வீழ்த்தலும்
செகுத்தலு மவிர்தலும் இளைத்தலும் செப்புவர்.

214. இல்லெனும் பெயரே யில்லை யென்றலும்
இராசியு மனைவியு மனையும் இடமுமாம்.

202. இடை :—இடம், இடை, நடு.

203. இருளை :—சுற்றம், தோழி.

204. இரதம்:—தேர், இன்சுவை, அரைநாண், புணர்ச்சி, பாதரசம்.

205. இலம்பகம் :—அத்தியாயம், நுதலணி, மாலை.

206. இந்தனம் :—இசை, விறகு, அக்கினிச்சுவாலை.

207. இளி :—ஒருவகை இசை, யாழ்நரம்பு, இகழ்ச்சிக் குறிப்பு.

208. இலயம் :—கூத்தின் விகற்பம், கூத்தின்பெயர், கேடு.

209. இறைவை :—ஏணி, இறைகூடை.

210. இழுக்கம் :—பிழைத்தல், பொல்லாங்கு.

211. இறப்பு:—இறத்தல், மிகுதி, நடத்தல், வீட்டிறப்பு.

212. இலாங்கலி :—தென்னைமரம், கலப்பை, வெண் காந்தள்.

213. இகுத்தல் :—கொடுத்தல், வீழ்த்தல், செகுத்தல், அவிர்தல், இளைத்தல்.

214. இல் :—இல்லை, இராசி, மனைவி, வீடு, இடம்.

215. இராசி யெனும்பெய ரோரையுங் கூட்டமும்.

216. இராசிய மெனும்பெயர் யோனியும் மறைவுமாம்.

217. இபமெனும் பெயரே மரத்தின் கொம்பும்
யானையின் பெயரும் இயம்புவர் புலவர்.

218. இகலெனும் பெயரே பெலமும் சமரமும்
பகையும் எனவே பகரப் பெறுமே.

219. இடமெனும் பெயரிடப் புறமும் விசாலமும்
இடங்களின் விகற்பமும் செல்வமும் இயம்புவர்.

220. இடக்க ரெனும்பெயர் குடத்தின் பெயரும்
மறைத்திடு வார்த்தையும் வழங்கப் பெறுமே.

221. இதழெனும் பெயர்பூ வினிதழு மதரமும்
பனைமடல் போலவும் பகரப் பெறுமே.

222. இயமெனும் பெயரே யுரையும் ஓசையும்
வாத்தியப் பெயரும் வழங்கப் பெறுமே.

223. இருபிறப் பெனும்பெய ரெயிறும் பறவையும்
பார்ப்பெனும் சாதியும் நிலவும் பகருவர்.

224. இருசெனும் பெயரே பண்டியுள் இரும்பும்
செவ்வையும் எனவே செப்புவர் புலவர்.

225. இவர்தல் எனும்பெயர் ஏறலும் விரும்பலும்.

226. இவறல் எனும்பெயர் ஓசையு மறுப்புமாம்.

227. இழுமென லெனும்பெயர் இனிமையும் ஒலியுமாம்.

228. இறத்தல் எனும்பெயர் மிகுத்தலும் கடத்தலும்
மரணமும் எனவே வழங்கப் பெறுமே.

215. இராசி :—இராசிப்பொது, கூட்டம்.

216. இராசியம் :—பெண்குறி, மறைவு.

217. இபம் :—மரக்கொம்பு, யானை.

218. இகல் :—பலம், போர், பகை.

219. இடம் :—இடப்புறம், அகலம், இடங்களின் விகற்பம், செல்வம்.

220. இடக்கர் :—குடம், மறைத்தசொல்

221. இதழ் :—பூவின்இதழ், உ தடு, பனையேடு.

222. இயம் :—சொல், ஓசை, வாத்தியப் பெயர்.

223. இருபிறப்பு:—பல், பறவை, பார்ப்பு, சாதி, நிலம்.

224. இருசு:—வண்டியுளிரும்பு, நேர்மை.

225. இவர்தல் :—ஏறுதல், ஆசை.

226. இவறல் :—ஓசை, மறத்தல்.

227. இழுமெனல் :—இனிமை, ஒலி.

228. இறத்தல் :—மிகுதி, கடத்தல், மரணம்.

229. இறுத்த லெனும்பெயர் தங்கலும் இயம்பலும்
ஒடித்தலும் எனவே யுரைத்தனர் புலவர்.

230. இளமை யெனும்பெயர் தண்மையும் காமமும்
இளமையின் பருவமு மியம்பப் பெறுமே.

231. இரதி யெனும்பெயர் மதனன் றேவியும்
பித்தளைப் பெயரும் பிடியானையுமாம்.

232. இக்கெனும் பெயரே மதுவும் கரும்புமாம்.

233. இறும்பூ தெனும்பெயர் மலையும் அதிசயமும்
சிறுதூறும் குழையுந் தகைமையும் செப்புவர்.

234. இடங்க ரெனும்பெயர் குடமும் தூர்த்தரும்
முதலையு மெனவே மொழிந்தனர் புலவர்.

இகர வருக்கம் முற்றும்

ஆக வருக்கம் 3க்குச் சூத்திரம் 234

## ஈகார வருக்கம்

235. ஈழ மெனும்பெயர் பொன்னின் பெயரும்
சிங்கள தேசமு நறவுஞ் செப்புவர்.

236. ஈகை யெனும்பெயர் ஈங்கையும் கொடுத்தலும்
பொன்னும் எனவே புகன்றனர் புலவர்.

237. ஈடெனும் பெயரே பெலமும் குழைவும்
பெருமையு முவமையும் பேசுவர் புலவர்.

238. ஈமம் எனும்பெய ரெரியிடு கலனும்
மயானமும் விறகும் வழங்கப் பெறுமே

229. இறுத்தல் :—தங்கல், இயம்பல், ஒடித்தல்.

230. இளமை :—தாழ்வு, காமம், இளமைப்பருவம்.

231. இரதி :—மன்மதனின் மனைவி, பித்தளை, பெண்யானை.

232. இக்கு :—தேன், கரும்பு.

233. இறும்பூது :—மலை, அதிசயம், சிறுதூறு, குழை, தகைமை.

234. இடங்கர் :—குடம், விடர், முதலை.

---

235. ஈழம் :– பொன், சிங்களதேசம், தேன்.

236. ஈகை :—இண்டங்கொடி, கொடுத்தல், பொன்.

237. ஈடு :—வலிமை, குழைவு, பெருமை, உவமை.

238. ஈமம் :– எரியிடு கலன், சுடுகாடு, விறகு.

239. ஈண்டெனும் பெயரே யிவ்விடப் பெயரும்
ஈங்கையின் பெயரும் இயம்புவர் புலவர்.

240. ஈர மெனும்பெயர் அன்புங் குளிர்ச்சியும்
பகுத்தலும் எனவே பகரப் பெறுமே.

241. ஈன்ரு னெனும்பெயர் பிரமனும் பிதாவுமாம்.

ஈகார வருக்கம் முற்றும்

ஆக வருக்கம் 4க்குச் சூத்திரம் 241

## உகர வருக்கம்

242. உடுவெனும் பெயரே யொளிவான் மீனும்
பகழியும் அம்புத் தலேயொடு நாவாய்
நடத்திய மரக்கலக் கோலு நவிலுவர்

243. உத்திர மெனும்பெய ரொருநா ளுடனே
சித்திர மாளிகை சேர்ந்த தோருறுப்பே.

244. உத்தி யெனும் பெய ருரகப் பொறியுடன்
திருவினு றுப்பொடு நுண்மைப் பொருளுமாம்.

245. உத்தர மெனும்பெயர் மேலும் வடக்கும்
மறுவார்த் தையுமென வழங்கப்பெறுமே.

246. உலவை யெனும்பெயர் மரத்தின் கோடும்
விலங்கின் மருப்புங் காற்றுந் தழையுமாம்.

247. உந்தி யெனும்பெயர் நீரும்நீர்ச் சுழியும்
தேரின் றட்டும் நாபியும் கடலும்
பெண்கள் விளேயாட லு மந்தியும் பேசுவர்.

248. உப்பெனும் பெயரே மகளிர் விளேயாடலும்
கடலும் இனிமையும் கடல்விளேயு வருமாம்.

239. ஈண்டு :—இவ்விடம், இண்டஞ்செடி.

240. ஈரம் :—அன்பு, குளிர்ச்சி, பகுத்தல்.

241. ஈன்ருன் :—பிரமன், பிதா.

---

242. உடு:—நட்சத்திரம், அம்பு, அம்புத்தலை, மரக்கலம், ஓட்டும்கோல்.

243. உத்திரம் :— உத்திர நட்சத்திரம், மாளிகையின் ஒருறுப்பு.

244. உத்தி:—பாம்பின் படப்பொறி, திருவின் உறுப்பு, நுண்மைப்பொருள்.

245. உத்தரம் :—மேல், வடக்கு, மறுமொழி.

246. உலவை :—மரத்தின்கிளை, விலங்கின்கொம்பு, காற்று, தழை.

247. உந்தி :— நீர், நீர்ச்சுழி, தேரின்உருளை, தொப்புள், கடல், பெண்களின் விளையாட்டிலொன்று, பெண் குரங்கு.

248. உப்பு :—மகளிர் விளையாடல், கடல், இனிமை, கடலிலிருந்து விளையும்பொருள்.

249. உறையெனும் பெயரே நீர்த்துளி முதலாந்
துளியு நீர்நோய் தொலைத்திடு மருந்தும்
பெருமையும் பாலும் பிரையும் விழுமமும்
வெண்கலப் பெயரும் இடைச்சொலு முணவும்
ஊழியுங் காரமும் உவர்நீரு நீளமும்
படையுறை யுடனே நன்னில வூரும்
எண்குறித் திறுதி யெய்வதும் இயம்புவர்.

250. உலகெனும் பெயருயர்ந் தோரும் பூமியும்
திசையு மாகாயமு நாடுஞ் செப்புவர்.

251. உலக்கை யெனும்பெய ரோண நாளு
முரோங்கலு மெனவே யுரைத்தனர் புலவர்.

252. உறுவ னெனும்பெயர் அசோகமர் கடவுளும்
இருடியு மெனவே யியம்பப் பெறுமே.

253. உறையுள் எனும்பெய ரூரு நாடும்
வீட்டின் பெயரும் விளம்புவர் புலவர்.

254. உயவை யெனும்பெயர் கானை யாறுங்
காக்கணங் கருவிளைப் பெயருங் கருதுவர்.

255. உழையெனும் பெயரே யாழி னரம்பும்
இடமும் மானும் இயம்புவர் புலவர்.

256 உம்பல் எனும்பெயர் விலங்கினுண் பெயருங்
குடிவழித் தோன்றலும் யானையுங் கூறுவர்.

257. உவாவெனும் பெயரிளை யோனும் யானையும்
ஈருவா வின்பெயர் தானும் விளம்புவர்.

258. உண்டை யெனும்பெயர் படையின துறுப்பும்
திரண்ட வடிவின் பெயருஞ் செப்புவர்.

249. உறை:—நீர்த்துளி, நீரினுல் உண்டாகும் நோயைத்தீர்க்கும் மருந்து, பெருமை, பாலிடு பிரை, சிறப்பு, வெண்கலம், இடைச்சொல், உணவு, யுகமுடிவு, காரம், உவர்நீர், நீளம், ஆயுதங்களின் உறை, நல்லநிலத்தையுடைய ஊர், ஓரிலக்கக்குறிப்பு.

250. உலகு :—உயர்ந்தோர், பூமி, திசை, ஆகாயம், நாடு.

251. உலக்கை :—திருவோண நட்சத்திரம், உரோங்கல்.

252. உறுவன் :—புத்தர், முனிவன்.

253. உறையுள் :—ஊர், நாடு, வீடு.

254. உயவை :—காட்டாறு, காக்கணஞ்செடி.

255. உழை :—யாழின் நரம்பு, இடம், மான்.

256. உம்பல் :—விலங்கேற்றின்பொது, நல்லகுடியில் தோன்றிய மகன், யானை.

257. உவா :-இளையோன், யானை, பூரணை, அமாவாசை.

258. உண்டை :—படையினது உறுப்பு, திரண்டவடிவு.

259. உளையெனும் பெயரே பரிக்க டிவாளத்
தணிம யிராயவு மஃறிணை மயிரும்
ஆண்பான் மயிரொடு சத்த வொலியுமாம்.

260. உடையெனும் பெயரே செல்வமும் கூறையும்
குடைவேலு முடைமைப் பெயரும் கூறுவர்.

261. உணர்வெனும் பெயரே உளத்தின் தெளிவும்
ஞானமு மெனவே நவிலப் பெறுமே.

262. உரையெனும் பெயரே சத்த வொலியும்
தேய்தலு மொழியுஞ் செப்புவர் புலவர்.

263. உவளக மெனும்பெயர் மதிலும் பள்ளமும்
ஆய ரூருமோர் பக்கமும் வாவியும்.

264. உயிரெனும் பெயரே சீவனுங் காற்றுமாம்.

265. உறழ்வெனும் பெயரிடை யீடு முவமையும்
புணர்வும் செறிவும் புகலப் பெறுமே.

266. உருத்த லெனும்பெயர் தோன்றுதல் சினமுமாம்.

267. உக்கம் எனும்பெய ரிடையின் பக்கமும்
விசிறியு மிடபப் பெயரும் விளம்புவர்.

268. உம்ப ரெனும்பெயர் உயர்நில மேடையும்
தேவரும் விசும்பும் செப்பப் பெறுமே.

269. உரமெனும் பெயரே யூக்கமும் ஞானமும்
பெலமு மருமமும் பேசுவர் புலவர்.

270. உருவெனும் பெயரே நிறமும் வடிவமும்
அட்டையின் பெயரு மாகு மென்ப.

271. உவப்பெனும் பெயரே யுயரமு மகிழ்ச்சியும்.

259. உளை:— குதிரையின் பிடரிமயிர், அஃறிணைப் பொருளின் மயிர், உயர்திணை யாண்பால் மயிர்.

260. உடை :—செல்வம், சீலை, குடை, வேலமரம், உடைமைப்பெயர்.

261. உணர்வு :—மனத்தெளிவு, அறிவு.

262. உரை :—சப்தவோசை, தேய்தல், சொல்.

263. உவளகம் :— மதில், பள்ளம், இடைச்சேரி, ஒரு பக்கம்.

264. உயிர் :—சீவன், காற்று.

265. உறழ்வு :— இடையீடு, மகிழ்ச்சி, புணர்வு, செறிவு

266. உருத்தல் :—தோன்றுதல், கோபம்.

267. உக்கம் :—இடையின்பக்கம், விசிறி, காளை.

268. உம்பர் :—தேவலோகம், தேவர், ஆகாயம்.

269. உரம் :—ஊக்கம், ஞானம், வலி, மருமம்.

270. உரு:—நிறம், வடிவம், அட்டை.

271. உவப்பு :—உயர்வு, மகிழ்ச்சி.

272. உறவி யெனும்பெயர் உயிர்நிலைக் களமும்
நீரூற்றும் உறவும் எறும்பும் உணர்த்துவர்.

273. உறுப்பெனும் பெயரே யுடலு மங்கமும்
படையின துறுப்பும் பகர்ந்தனர் புலவர்.

274. உடலெனும் பெயரே யுடம்பும் பொருளுமாம்.

275. உவணம் எனும்பெயர் கழுகும் பருந்துமாம்.

276. உளர்தல் எனும்பெயர் உதறலும் வருடலும்.

277. உள்ள மெனும்பெயர் நெஞ்சமு நினைவுமாம்.

278. உழப்பெனும் பெயரே வலியு முச்சாகமும்

279. உள்ள மெனும்பெயர் முயற்சியின் பெயரும்
நெஞ்சின் பெயரு நிகழ்த்துவர் புலவர்.

280. உறுகண் எனும்பெயர் நோயும் துன்பமும்
மிடியும் பயமும் விளம்பப் பெறுமே.

281. உஞற்றெனும் பெயரே வழுக்குடன் ஒளிர்ட்சியுந்
தாளாண் மையுமெனச் சாற்றினர் புலவர்.

282. உறுதி யெனும்பெயர் கல்வியும் நன்மையும்

உகர வருக்கம் முற்றும்.

ஆக வருக்கம் 5க்குச் சூத்திரம் 282.

272. உறவி :—உயிர், நீர்ஊற்று, சுற்றம், எறும்பு.

273. உறுப்பு :—உடம்பு, அவயவம், படையின் உறுப்பு.

274. உடல் :—உடம்பு, பொன்.

275. உவணம் :—கழுகு, ஓர்பறவை.

276. உளர்தல் :—உதறல், வருடல்.

277. உள்ளம் :—நெஞ்சு, நினைத்தல்.

278. உழப்பு :—வலிமை, உற்சாகம்.

279. உள்ளம் :—முயற்சி, மனது.

280. உறுகண் :—நோய், துன்பம், வறுமை, அச்சம்.

281. உஞற்று :—தவறு, முயற்சி.

282. உறுதி :—கல்வி, நன்மை.

## ஊகார வருக்கம்

283. ஊக்க மெனும்பெய ருள்ளத்தின் மிகுதியும்
பெலமு முச்சாகமும் பேசப் பெறுமே.

284. ஊழ்எனும் பெயரே பகையும் பழமையும்
மரபும் வெயிலும் விதியும் வழங்குவர்.

285. ஊதிய மெனும்பெயர் லாபமும் கல்வியும்.

286. ஊழ்த்த லெனும்பெயர் பதனழிவுஞ் செவ்வியும்
நினைத்தலும் எனவே நிகழ்த்தப் பெறுமே.

287. ஊசி யெனும்பெயர் எழுத்தாணியுஞ் சூசியும்.

288. ஊறெனும் பெயரே தீண்டலுந், தீமையும்.
கொலையும் இடையூறுங் கூறப் பெறுமே.

289. ஊற்றெனும் பெயரே யூற்றி னுடனே
ஊன்றிய கோலும் உரைத்தனர் புலவர்.

290. ஊர்தி யெனும்பெயர் விமானமுந் தேரும்
யானையும் பரியும் சிவிகையும் பாண்டிலும்.

ஆக வருக்கம் 6க்குச் சூத்திரம் 290

## எகர வருக்கம்

291. என்றாழ் எனும் பெயர் இரவியும் வெயிலும்
கோடைக் காலமும் கூறப் பெறுமே.

292. எல்லெனும் பெயரே யிரவியும் ஒளியும்
இருளு மிகழ்ச்சியும் இயம்புவர் புலவர்.

283. ஊக்கம்:—உள்ளக்கிளர்ச்சி, வலிமை, உற்சாகம்.

284. ஊழ்:—பகை, பழமை, மரபு, வெயில், விதி.

285. ஊதியம்:—ஆதாயம், கல்வி.

286. ஊழ்த்தல்:—பக்குவம்கெடுகை, சமயம், நினைத்தல்.

287. ஊசி:—எழுத்தாணி, இழைவாங்கி.

288. ஊறு:—தீண்டல், தீமை, கொலை, துன்பம்.

289. ஊற்று:—நீர்ஊற்று, ஊன்றுகோல்.

290. ஊர்தி:—விமானம், தேர், யானை, குதிரை, பல்லக்கு, இரண்டு உருளையுடைய வண்டி.

---

291. என்றூழ்:—சூரியன், வெயில், கோடைக்காலம்.

292. எல்:—சூரியன், பிரகாசம், இரவு, இகழ்ச்சி.

293. எலியெனும் பெயரே யெலியின் விகற்பமும்
பூர நாளொடு மதுவும் புகலுவர்.

294. எருவை யெனும் பெயர் கொறுக்கை யுடனே
கழுகுந் தாம்பிரப் பெயரும் கருதுவர்.

295. எறுழெனும் பெயரே தண்டா யுதமும்
பெலமு மெனவே பேசப் பெறுமே.

296. எக்கர் எனும்பெயர் சொரிதலும் குவிதலும்.

297. எகின மென்னும் பெயர் புளி மாவுமன்னமும்
கவரிமாவு நீர்நாயும் புளியின் றருவும் புகலப்பெறுமே.

298. எஃகெனும் பெயரே வேலுங் கூர்மையும்
உருக்கு மெனவே யுரைத்தனர் புலவர்.

299. எள்த லெனும்பெயர் இகழ்தலு நகையுமாம்.

300. எற்றெனும் பெயரே யிரக்கமும் எறிதலும்
அடித்தலும் எத்தன்மைத் தென்றலு மாமே.

301. எற்றுதல் எனும்பெயர் எறிதலும் புடைத்தலும்.

302. எண்ணெனும் பெயரே யெள்ளு மிலக்கமுஞ்
சோதிடப் பெயரும் விசாரமு மெளிமையும்.

303. எழிலெனும் பெயரே யிளமையு மழகுமாம்.

304. எல்லே யெனும்பெயர் அளவையும் இரவியும்

எகர வருக்கம் முற்றும்

ஆக வருக்கம் 7க்குச் சூத்திரம் 304

293. எலி:—எலியில் ஒருவகை, பூரநட்சத்திரம், கள்

294. எருவை:—கொறுக்கை, கழுகு, செம்பு,

295. எறுழ் :—தண்டாயுதம், வலிமை.

296. எக்கர்:—சொரிதல், குவிதல்

297. எகினம்:—புளிமா, அன்னப்பறவை, கவரிமான்
நீர்நாய், புளியமரம்.

298. எஃகு:—வேலாயுதம், கூர்மை, உருக்கு

299. எள்தல்:—இகழ்தல், நகை.

300. எற்று :—இரக்கம், எறிதல், அடித்தல்,
எத்தன்மைத் தென்றல்.

301. எற்றுதல் :—எறிதல், அடித்தல்.

302. எண்.—எள், இலக்கம், சோதிடநூல், ஆலோசனே.

303. எழில்:—இளமை, அழகு.

304. எல்லே:—அளவை, சூரியன்.

# ஏகார வருக்கம்

305. ஏல்வை யெனும்பெயர் வாவியும் பொழுதுமாம்.

306. ஏமம் எனும்பெயர் இன்பமும் வெண்ணீறுஞ்
சேமமும் பொன்னுமே மாப்பு மயக்கும்
காவலும் இரவுங் கருதுவர் புலவர்.

307. ஏறெனும் பெயரிடி யேற்றின் பெயரும்
விலங்கி ளுண்பாற் பெயரு மிடபமும்
அசுபதிப் பெயரு மாகு மென்ப.

308. ஏனல் எனும்பெயர் தினைதினைப் புனமுமாம்.

309. ஏனாதி யெனும்பெயர் மயிர்வினை யோனும்
மந்திரித் தந்திரிப் பெயரும் வழங்குக.

310. ஏந்த லெனும்பெயர் பெருமையு முயரமும்
தலைவனும் எனவே சாற்றினர் புலவர்.

311. ஏதி யெனும்பெயர் ஆயுதப் பொதுவும்
வாளும் எனவே வகுத்தனர் புலவர்.

312. ஏதம் எனும்பெயர் குற்றமும் துன்பமும்

313. ஏணி யெனும்பெயர் எல்லையு முலகமு
மானுங் கண்ணே ணியுமே வழங்குவர்.

314. ஏங்கல் எனும்பெயர் ஒலியும் இரங்கலும்
ஏங்குதற் பெயரும் இயம்புவர் புலவர்.

315. ஏற்றல் எனும்பெயர் எதிர்ந்து போர் செய்தலுங்
கோடலின் பெயருங் கூறுவர் புலவர்.

316. ஏரெனும் பெயரே யழகு முழு பெற்றமும்
உழவுடை யோனும் உரைக்கப் பெறுமே.

305. ஏல்வை:—குளம், காலம்.

306. ஏமம்:—இன்பம், வெண்ணீறு, புதையல், பொன், இறுமாப்பு, காவல், மயக்கம், இரவு.

307. ஏறு:—இடி, விலங்கின் ஆண்பாற்பெயர், இடபம், அச்சுவினிநாள்.

308. ஏனல்:—தினை, தினைதானியம் விளையுமிடம்.

309. ஏனாதி:—நாவிதன், மந்திரி, படைத்தலைவன்.

310. ஏந்தல்:—பெருமை, உயரம், தலைவன்.

311. ஏதி:—ஆயுதங்களின் பொதுப்பெயர், வாள்.

312. ஏதம்:— குற்றம், துன்பம்.

313. ஏணி:—எல்லை, உலகம், மான், ஏணி, (கணுக்களிலே அடிவைத்து மலை முதலியவற்றில் ஏறிச்செல்லும்படி அமைத்துள்ள மூங்கிலுக்குக் கண்ணேணி என்று பெயர்)

314. ஏங்கல்:—சத்தம், அழுதல், ஏங்குதல்.

315. ஏற்றல் :—எதிர்த்துப் போர்செய்தல், கொள்ளல், (ஒருபொருளைப் பெற்றுக்கொள்ளுதல்).

316. ஏர் :—அழகு. உழுமாடு, உழவன்.

317. ஏணியெனும் பெயரிடைச் சொல்லும் ஒலியுமாம்.

318. ஏவ லெனும்பெயர் வியங்கோளும் வறுமையும்.

319. ஏல மெனும்பெய ரேலவி கற்பமும்
மயிர்ச்சாந் துமென வழங்குவர் புலவர்.

ஏகார வருக்கம் முற்றும்

ஆக வருக்கம் 8க்குச் சூத்திரம் 319.

## ஐகார வருக்கம்

320. ஐயம் எனும்பெயர் பிச்சை கொள்கலனும்
பிச்சையும் வெண்ணெயுஞ் சந்தே கமுமாம்.

321. ஐயை யெனும்பெயர் உமையும் துர்க்கையும்
அருந்தவப் பெண்ணும் அரசாளும் காளியும்
புதல்வியும் என்னப் புகன்றனர் புலவர்.

322. ஐயெனும் பெயரே குருவும் அரசனும்
எழிலும் இருமலு மிடைச்சொல்லுங் கோழையும்
தலைவனும் தாரமும் சாற்றப் பெறுமே.

323. ஐயன் எனும்பெயர் குருவுஞ் சாத்துனுந்
தந்தையு முதல்வனு மந்தணன் பெயருமாம்.

324. ஐதெனும் பெயரே நொய்தும் விரைவுமாம்.

ஐகார வருக்கம் முற்றும்

ஆகவருக்கம் 9க்குச் சூத்திரம் 324

317. ஏனை:—இடைச்சொல், சப்தம்.

318. ஏவல் :—வியங்கோள், வறுமை.

319. ஏலம் :—ஏலத்தின் மாறுபாடு, மயிர்ச்சாந்து.

---

320. ஐயம் :—பிச்சையேற்கும் பாத்திரம், பிச்சை, வெண்ணெய், சந்தேகம்

321. ஐயை ;—பார்வதி, துர்க்கை, தவப்பெண், காளி, மகள்.

322. ஐ:—குரு, அரசன், அழகு, இருமல், இடைச்சொல், கோழை, தலைவன், மனைவி.

323. ஐயன் :—குரு, ஐயனர், தந்தை, மூத்தோன், அந்தணன்.

324. ஐது:—நுண்மை, விரைவு (சீக்கிரம்).

# ஒகர வருக்கம்

325. ஒளியெனும் பெயரே யொண்சுட ரோனும்
விதுவும் கனலும் விளக்கொடு கீர்த்தியும்
கேட்டை யுமொளிப் பினிட்டமுங் கிரணமும்.

326. ஒலியெனும் பெயரே ஓசையும் காற்றும்
இடியு மெனவே யியம்பப் பெறுமே.

327. ஒழுக்க மெனும்பெயர் வழியும் குலமும்
ஆசா ரமுமென அறியப் பெறுமே.

328. ஒலியல் எனும்பெயர் ஒண்புனல் யாறும
ணில்லுஞ் சருமமும் உடுத்த ஆடையுமாம்.

329. ஒளிவட்ட மெனும்பெயர் சக்கரா யுதமும்
கண்ணா டியுமெனக் கருதுவர் புலவர்.

330. ஒண்மை யெனும்பெயர் நன்மையு மழகும்
மிகுதியும் ஒழுங்கு மறிவும் விளம்புவர்.

331. ஒதுக்க மெனும்பெயர் மறைவும் நடையுமாம்.

332. ஒன்றெனும் பெயரோ ரெண்ணு முத்தியுமாம்.

333. ஒல்லை யெனும்பெயர் சிறுபொழுதும் விரைவும்
தொல்லையும் எனவே சொல்லுவர் புலவர்.

334. ஒதுங்கல் எனும்பெயர் ஒதுங்குதல் நடையுமாம்.

ஒகர வருக்கம் முற்றும்.

ஆக வருக்கம் 10க்குச் சூத்திரம் 334.

325. ஒளி :—சூரியன், சந்திரன், அக்னி, விளக்கு, புகழ், கேட்டை நட்சத்திரம், மறைவிடம், கிரணம்.

326. ஒலி :—ஓசை, காற்று, இடி.

327. ஒழுக்கம் :—வழி, குலம், சீலம்.

328. ஒலியல் :—நீரையுடைய ஆறு, தோல், ஆடை.

329. ஒளிவட்டம் :—சக்கராயுதம், கண்ணாடி.

330. ஒண்மை :—நன்மை, அழகு, மிகுதி, ஒழுங்கு, அறிவு.

331. ஒதுக்கம் :—மறைப்பு, நடை.

332. ஒன்று :—எண்ணின்முதல், மோட்சம்.

333. ஒல்லை :—சிறுபொழுது, காலவிரைவு, பழமை.

334. ஒதுங்கல் :—ஒதுங்குதல், நடை.

## ஓகார வருக்கம்

335. ஓண மெனும்பெயர் மாதவ ஞளும்
வருபுனல் யாறும் வகுத்தனர் புலவர்.

336. ஓரை யெனும்பெயர் அரிவையர் கூட்டமும்
அவர்விளை யாடலும் விளையாடு கலனும்
இராசியின் பொதுவு மிடைச்சொல் லுமாமே.

337. ஓங்க லெனும்பெய ருயரமு மலையும்
மேடு மூங்கிலுந் தலைவனும் விளம்புவர்.

338. ஓடை யெனும்பெயர் வாவியின் பெயரும்
யானை நுதலணி பட்டமும் கிடங்கும்
ஒருகொடிப் பெயரும் உரைத்தனர் புலவர்.

339. ஓதை யெனும்பெயர் சத்த வொலியும்
புரிசையுள் ளுயர்வும் பொருந்திய மேடையும்
நதியும் நகரமும் நவிலப் பெறுமே.

340. ஓரி யெனும்பெயர் முசுவும் நரியும்
அரிவையர் மயிரொழித் தெல்லா மயிரும்
கொடைதரு மொருவள்ளல் பெயருங் கூறுவர்.

341. ஓவிய ரெனும்பெயர் சித்திர காரரும்
சிற்பநூல் வினைஞரும் செப்பப் பெறுமே.

342. ஓட்ட மெனும்பெயர் மேலுதடும் தோல்வியும்
ஓடுதற் பெயரும் உரைத்தனர் புலவர்.

343. ஓதனம் எனும்பெயர் உணவும் சோறுமாம்.

344. ஓவெனும் பெயரே நீர்த்தகை கதவும்
நீக்கமும் இரக்கக் குறிப்பின் வார்த்தையுமாம்.

335. ஓணம்:—திருவோண நட்சத்திரம், ஆறு.

336. ஓரை:—மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு, விளையாடு கருவிகள், இராசியின் பொது, இடைச்சொல்.

337. ஓங்கல்:—உயர்ச்சி, மலை, மேடு, மூங்கில், தலைவன்.

338. ஓடை:—குளம், யானையின் நெற்றிப்பட்டம், அகழி, ஒருவகைக் கொடி.

339. ஓதை:—எழுத்தொலி, மதிலுண்மேடை, நதி, நகரம்.

340. ஓரி:—ஆண்முசு, நரி, ஆண்மயிர், கடையெழுவள்ளல்களில் ஒருவன்.

341. ஓவியர்:—சித்திரகாரர், சிற்பாசிரியர்.

342. ஓட்டம்:—மேலுதடு, தோற்றல், ஓடுதல்.

343. ஓதனம்:—உணவு, சோறு.

344. ஓ:—மடையடைக்கும் கதவு, நீங்குதல், இரக்கச் சொல்.

345. ஓதிமம் எனும்பெயர் அன்னமும் வெற்பும்
கவரி மாவின் பெயருங் கருதுவர்.

346. ஓதி யெனும்பெயர் வெற்பு மனனமும்
பெண்பான் மயிரு மறிவும் பூனையும்
ஒத்தியு மெனவே யுரைக்கப் பெறுமே.

347. ஒளியெனும் பெயர் யானைக் கூட்டமும்
ஒழுங்கு மெனவே யுரைத்தனர் புலவர்.

ஒகார வருக்கம் முற்றும்.

ஆக வருக்கம் 11 க்குச் சூத்திரம் 347.

## 2வது ககரவருக்கத் தொகுதி

### ககர அகர வருக்கம்

348. கலையெனும் பெயரே கல்வியு நூலு
மானி னேறு மகர விராசியும்
மதியின் பங்கு மரத்தின் கவடு
மாண்முகூப் பெயருங் கால நுட்பமும்
புடைவை யுஞ்செகுமே கலையும் புகலுவர்

349. கனலி யெனும்பெயர் கனலு மருக்கனும்
பன்றியு மெனவே பகரப் பெறுமே.

350. கரமெனும் பெயரே கையுங் கழுதையுங்
கிரணமு நஞ்சுங் குடியிறைப் பெயருமாம்.

351. கழியெனும் பெயரே காலைக் காலமு
மிகுதியுங் கழிமுகப் பெயரும் விளம்புவர்.

352. கவியெனும் பெயரே கவிவல் லோனுங்
குதிரை வாய்ப்பெய் கருவியுங் குரங்கும்
வெள்ளியுங் கவிதை விகற்பமும் விளம்புவர்.

345. ஓதிமம் :—அன்னம், மலை, கவரிமான்.

346. ஓதி :—மலை, சிந்திக்கை, பெண்மயிர், அறிவு, பூனை, ஓந்தி.

347. ஒளி :—யானைக்கூட்டம், ஒழுங்கு.

---

348. கலை:—கல்வி, நூல், ஆண்மான், மகரராசி, மதியின் பங்கு, மரத்தின்கிளை, ஆண்முசு, காலநுட்பம், புடைவை, மேகலை.

349. கனலி :—நெருப்பு, சூரியன், பன்றி.

350. கரம் : கை, கழுதை, கிரணம், விஷம், குடியிறை.

351. கழி :—காலைப்பொழுது, மிகுதி, ஆறு கடலொடு கலக்கும் சங்கமுகம்.

352. கவி :—கவிஞன், கடிவாளம், குரங்கு, சுக்கிரன், கவிவகை.

353. கவையெனும் பெயரே கவருங் காடும்
எள்ளிளங் காயு மாயிலிய நாளுமாம்.

354. கணையெனும் பெயரே யம்புந் திரட்சியும்
பூர நாளும் புகலப் பெறுமே.

355. களிறெனும் பெயரே யத்த நாளும்
எள்ளும் சுறுமுத லிவற்றி னாண்பாலும்
யானையும் புகல்வரி னிதுணர்ந் தோரே.

356. கள்வ னெனும்பெயர் கடக விராசியுங்
கருநிறத் தவனொடு களிறு மெண்டுஞ்
சோரனு முசுவுஞ் சொல்லுவர் புலவர்.

357. கன்னி யெனும்பெயர் பெண்ணு மிளமையு
மழிவிலாப் பொருளுங் குமரி யாறும்
கற்றாழை யினொடு கன்னி யிராசியுந்
துர்க்கையு மெனவே சொல்லப் பெறுமே.

358. கள்ளெனும் பெயர்தேன் மதுவுங் களவுமாம்.

359. கலியெனும் பெயரே கடையுகப் பெயரும்
வலியு மொலியும் வலியோன் பெயருமாம்.

360. கணமெனும் பெயரே கால நுட்பமும்
உடுவுங் கூட்டமும் நோயும் வட்டமும்
திரட்சியின் பெயரின் விகற்பமுஞ் செப்புவர்.

361. கன்ன லெனும்பெயர் கரகமுங் கரும்பும்
நாழிகை வட்டமு நாழிகைப் பெயரும்
சருக்கரைப் பெயருங் கும்பமுஞ் சாற்றுவர்.

362. கடிகை யெனும்பெயர் கதவொடு தாளுந்
துண்டமும் நாழிகைப் பெயருஞ் சொல்லுவர்.

353. கவை :—மரக்கப்பு, காடு, எள்ளிளங்காய், ஆயில்ய நட்சத்திரம்.

354. கணை :—அம்பு, திரட்சி, பூர நட்சத்திரம்.

355. களிறு :—ஹஸ்த நட்சத்திரம், எள், ஆண்சுறு, ஆண்யானை.

356. கள்வன் :—கடகராசி, கரியவன், யானை, நண்டு, திருடன், முசு.

357. கன்னி :—பெண், இளமை, அழிவிலாப் பொருள், குமரியாறு, கற்றாழை, கன்னியாராசி, துர்க்கை.

358. கள் :—தேன், கள், களவு.

359. கலி :–கலியுகம், வலிமை, ஒலி, வலியோன்.

360. கணம் :—காலநுட்பம், விண்மீன், கூட்டம், நோய், வட்டம், திரட்சி.

361. கன்னல் :—கரகம், கரும்பு, நாழிகை வட்டில், நாழிகை, சருக்கரை, கும்பம்.

362. கடிகை :—கதவிடு தாள், துணிக்கை, நாழிகை.

363. கடியெனும் பெயரே காவலும் விரைவும்
அச்சமுங் கூர்மையும் வரைவுஞ் சிறப்பும்
விளக்கமும் புதுமையு மணமு முடுகலும்
பேயு நெற்கரிப்பும் பேசுவர் புலவர்.

364. கழுதெனும் பெயரே காவற் பரணும்
வண்டும் பேயும் வழங்கப் பெறுமே.

365. கம்மெனும் பெயரே ககனமும் பிரமனும்
தலைவனும் வெளுப்பும் புலனும் வாயுவும்
சுவர்க்கமும் புத்தியுஞ் சொல்லுவர் புலவர்.

366. கயமெனும் பெயரே களிறும் ஆழமுங்
குளமும் புனலுங் குறைவுமோர் நோயுமாம்

367. கமல மெனும்பெயர் தாமரை புனலுமாம்.

368. கவந்த மெனும்பெயர் தலைகுறை பிணமும்
நீரும் பேயு நிகழ்த்துவர் புலவர்.

369. கனமெனும் பெயரே மேகமும் பாரமும்
தேகமும் அடைகொடுத் தலுஞ்செம் பொன்னும்
முட்டிய வண்டிலின் முலைக்கன முமாமே.

370. கரக மெனும்பெயர் ஆலாங் கட்டியும்
கங்கையுந் துளியுங் கமண்டல முமாமே.

371. கந்தர மெனும்பெயர் கழுத்து மேகமும்
மலைமுழை யுமென வழங்கப் பெறுமே.

372. ககன மெனும்பெயர் காடுஞ் சேனையும்
விசும்பு மெனவே விளம்பப் பெறுமே.

373. கழையெனும் பெயரே கரும்பு மூங்கிலும்
புனர்த நாட்பெயரும் புகலப் பெறுமே.

363. கடி :—காவல், சீக்கிரம், அச்சம், கூர்மை, விவாகம், நீக்கம், சிறப்பு, விளக்கம், புதுமை, வாசனை, பேய், கரிப்பு.

364. கழுது :—பரண், வண்டு, பிசாசம்.

365. கம் :—ஆகாயம், பிரமன், தலைவன், வெண்மை, ஐம்புலன், காற்று, சுவர்க்கம், புத்தி.

366. கயம் :—யானை, ஆழம், குளம், நீர், குறைவு, ஒரு வியாதி.

367. கமலம் :—தாமரை, நீர்.

368. கவந்தம் :—தலைக்குறைப்பிணம், நீர், பிசாசம்.

369. கனம் :—மேகம், பாரம், உடல், அடைகொடுத்தல், பொன், முலைபாரம்.

370. கரகம் :—மழைக்கட்டி, கங்கை, நீர்த்துளி, கமண்டலம்.

371. கந்தரம் :—கழுத்து, மேகம், மலைக்குகை.

372. ககனம் :—காடு, சேனை, ஆகாயம்.

373. கழை :—கரும்பு, மூங்கில், புனர்பூசநாள்.

374. கயினி யெனும்பெயர் அத்த நாளும்
விதவையு மெனவே விளம்பப் பெறுமே.

375. கடமெனும் பெயரே யானைத் திரளும்
மற்றதன் கொடிறு மதமும் கானமும்
யாக்கை யும்அருஞ் சுரப்பெயருங் கயிறும்
நீதியுங் கும்பமு நெடுமலைச் சாரலும்
எதிர்ப்பை கடன்குட முழவு மியம்புவர்.

376. கவலை யெனும்பெயர் கவர்படு வழியும்
துன்பமுஞ் செந்தினைப் பெயருமோர் கொடியுமாம்.

377. கடக மெனும்பெயர் கங்கணப் பெயரும்
வட்ட வடிவு மலையின் பக்கமும்
படைவீ டுமெனப் பகர்ந்தனர் புலவர்.

378. கட்சி யெனும்பெயர் காடுங் கூடும்
கிடப்பிட முமெனக் கிளத்துவர் புலவர்.

379. கண்டக மெனும்பெயர் வாளுஞ் சுரிகையும்
முள்ளுங் கானமு மொழியப் பெறுமே.

380. கணியெனும் பெயரே மருத நன்னிலமும்
வேங்கை மரமும் விளம்புவர் புலவர்.

381. கங்கெனும் பெயர்கருந் தினைவரம் பருகுமாம்.

382. களமெனும் பெயர்களா மரமுங் கழுத்தும்
கருநிற மும்போர்க் களமும் விடமுமாம்.

383. கடையெனும் பெயரே கதவு முடிவும்
இடமு மெனவே யியம்பப் பெறுமே.

384. கறையெனும் பெயரே கருமையு முரலுங்
குருதி மாசுங் குடியிறைப் பெயருமாம்.

374. கயினி :—அத்த நட்சத்திரம், கைம்பெண்.

375. கடம் :—யானைக்கூட்டம், யானைக்கதுப்பு, யானைமதம், காடு, சரீரம், அருநெறி, கயிறு, நீதி, குடம், நெடுமலைச்சாரல், கடன், குடமுழா.

376. கவலை :—கவர்த்தவழி, துன்பம், செந்தினை, ஒருவகைக்கொடி.

377. கடகம் :—கங்கணம், வட்டவடிவு, மலைப்பக்கம், படைவீடு.

378. கட்சி: —காடு, கூடு, படுக்கை.

379. கண்டகம்:—வாள், கத்தி, முள், காடு.

380. கணி: மருதநிலம், வேங்கைமரம்.

381. கங்கு :—கருந்தினை, வரம்பின் பக்கம்.

382. களம் :—களாமரம், கழுத்து, கறுப்பு, போர்க்களம், விடம்.

383. கடை :—கதவு, முடிவு, இடம்.

384 கறை :—கருமை, உரல், இரத்தம், குற்றம், குடியிறை.

385. கண்ட மெனும்பெயர் கரியின் கச்சையுந்
துண்டமு மெய்புகு கருவியும் வாளுங்
கண்ட சர்க்கரையுந் தேசமுங் கழுத்தும்
இடுதிரைப் பெயரும் இயம்புவர் புலவர்.

386 கதுப்பெனும் பெயரே யிருபான் மயிரும்
கொடிறும் விலங்கின் றிரளுங் கூறுவர்

387 கந்தெனும் பெயரே பண்டி யுளிரும்பும்
கம்பமுந் திரட்சி யாக்கையின் மூட்டும்
ஆதார நிலேயும் காய்க்கு மர முமாம்.

388. கடிப்ப மெனும்பெயர் காதணிப் பொதுவும்
அணிகலச் செப்பும் அக்க மணியும்
வாச்சியத் தொன்றும் பதக்க மெனவே
பகர்ந்தனர் புலவர்.

389. கன்றெனும் பெயரே யொருசார் விலங்கினது
கன்றும் இளமரக் கன்றும் சிறுமையும்
கைவளே விகற்பமுங் கருதப் பெறுமே.

390. கலாப மெனும்பெயர் மேகலேப் பெயரும்
மணிவடப் பெயரு மயிலிற குமாமே.

391. கரண்ட மெனும்பெய ரணிகலச் செப்பும்
நீர்க்காக் கையுமென நிகழ்த்துவர் புலவர்.

392. கரண மெனும்பெயர் மெய்க்கூத்தின் விகற்பமுங்
கல்வியுங் கணிதமும் புலனுங் கருதுவர்

393. கல்லெனும் பெயரே யருவி யு மோசையும்
மலேயுங் கற்பொதுப் பெயரும் வழங்குப.

394. கவிகை யெனும்பெயர் குடையுங் கொடையுமாம்

385. கண்டம் :—யானையின் கச்சை, துண்டம், கவசம், வாள், கண்டசருக்கரை, தேசம், கழுத்து. திரைச்சீலை.

386 கதுப்பு :—ஆண்மயிர், பெண்மயிர், கன்னம், விலங்கின் கூட்டம்.

387 கந்து :—வண்டியுள் இரும்பு, தூண், திரட்சி, யாக்கையின் மூட்டு, பற்றுக்கோடு, காய்க்கின்றமரம்.

388. கடிப்பம் :—காதணிப்பொது, ஆபரணச்செப்பு, அக்கமணி, வாத்தியத்தில் ஒருவகை, பதக்கம்.

389. கன்று:—ஒருசார்விலங்கின்கன்று, மரக்கன்று, சிறுமை, கைவளை.

390. கலாபம் :—மேகலை, மணிவடம், மயிற்றோகை.

391. கரண்டம் :—ஆபரணங்கள் வைக்கும் பெட்டி, நீர்க்காக்கை.

392. கரணம் :—கூத்தின் ஒரு விகற்பம், கலவி, கணிதம், மனம்.

393. கல் :—அருவியின் ஓசை, மலை, கல்.

394. கவிகை :—குடை, ஈதல்.

395. கணிச்சி யெனும்பெயர் மழுவுந் தறிகையுந்
தோட்டியு முளியுஞ் சொல்லுவர் புலவர்.

396. கதையெனும் பெயரே காரணச் சொல்லுந்
தண்டா யுதமொடு வார்த்தையுஞ் சாற்றுவர்.

397. கச்ச மெனும்பெயர் புரோசக் கயிறும்
மரக்காலு மளவும் வழங்கப் பெறுமே.

398. கதவெனும் பெயரே கபாடமும் காவலும்.

399. கறுப்பெனும் பெயரே கருமையும் சினமும்
வெறுத்திடு சினக்குறிப் புமென விளம்புவர்.

400. கம்பலை யெனும்பெயர் நடுக்கமு மச்சமுந்
துன்பமுஞ் சத்த வொலியுஞ் சொல்லுவர்.

401. கம்பம் எனும்பெயர் நடுக்கமும் தூணுமாம்

402. கண்டூ வெனும்பெயர் காஞ்சொறி தினவுமாம்.

403. கந்த மெனும்பெயர் மணமு மைம்புலனும்
கிழங்கு மெனவே கிளத்துவர் புலவர்.

404. கறங்கெனும் பெயரே காற்றாடி வட்டமும்
சுழலுஞ் சத்த வொலியும் சொல்லுவர்.

405. கஞற லெனும்பெயர் பொலிவும் சிறுமையும்.

406. கரிணி யெனும்பெயர் கடகரிப் பெயரும்
பிடியின் பெயரும் பேசுவர் புலவர்.

407. கதலி யெனும்பெயர் காற்றா டியுடனே
வாழையுந் துவசமும் தேற்றா மரமுமாம்.

395. கணிச்சி :—மழு (பழுக்கக்காய்ச்சிய இரும்பு), தறிகை, தோட்டி, உளி.

396. கதை :—காரணச்சொல், தண்டாயுதம், சொல்.

397. கச்சம் :—யானைக்கழுத்திலிடும் கயிறு, மரக்கால், அளவை.

398. கதவு :—கதவு, காவல்.

399. கறுப்பு :—கருமை, சினம், சினக்குறிப்பு.

400. கம்பலை :—நடுக்கம், அச்சம், துன்பம், பேசுதலால் எழும் ஒலி.

401 கம்பம்:—நடுக்கம், தூண்.

402. கண்டூ :—காஞ்சொறி, தினவு.

403. கந்தம் :—வாசனை, ஐம்புலன், கிழங்கு.

404. கறங்கு :—காற்றாடி, சுழற்சி, சத்தம்.

405. கஞறல் :—பொலிவு, சிறுமை.

406. கரிணி :—மதம்பிடித்தயானை, பெண்யானை.

407. கதலி :—காற்றாடி, வாழை, கொடி, தேற்றாமரம்.

408. கடவு ளெனும்பெயர் நன்மையுந் தெய்வமும்
முனிவன் பெயரு மொழியப் பெறுமே.

409. கணக்கெனும் பெயரே கலைகளின் விகற்பமும்
எண்ணின் பெயரும் இயம்புவர் புலவர்.

410. கச்சை யெனும்பெயர் கவசமும் கயிறும்
தழும்பு மெனவே சாற்றினர் புலவர்.

411. கயிலெனும் பெயர்பூணின்கடைப் புணர்வும்
பிடர்த்தலைப் பெயரும் பேசப் பெறுமே.

412. கஞ்ச மெனும்பெயர் கமலமுந் தாளமும்
வெண்கலமும் அப்ப விகற்பமுங் கஞ்சாவும்
கண்ணு டியுமெனக் கருதுவர் புலவர்.

413. கலிங்க மெனும்பெயர் ஊர்க்குருவியும் புடைவை
வானம் பாடியும் கலிங்க தேசமுமாம். [யும்

414. கந்தருவ மெனும்பெயர் பெண்ணோடு குதிரையாம்.

415. ககமெனும் பெயரே புள்ளின் பொதுவும்
அம்பின் பெயரு மாகு மென்ப.

416. கவடெனும் பெயரே புரோசக் கயிறும்
மரத்தின் கவடு மனக்க படமுமாம்.

417. கருமை யெனும்பெயர் கறுப்பும் பெருமையும்
பெலமும் புலவோர் பேசப் பெறுமே.

418. கரேணு வெனும்பெயர் கொலையானை யினொடு
பிடியா னையுமெனப் பேசப் பெறுமே.

419. கனைத்த லெனும்பெயர் ஒலித்தலின் பெயரும்
திரண்ட விருளின் பெயருஞ் செப்புவர்.

408. கடவுள் :—நன்மை, தெய்வம், முனிவன்.

409. கணக்கு :—கலைகளின் விகற்பம், எண்.

410. கச்சை :—கவசம், கயிறு, தழும்பு.

411. கயில் :—ஆபரணக்கடைப்புணர்வு, பிடரி.

412. கஞ்சம்:—கமலம், தாளம், வெண்கலம், அப்ப விகற்பம், கஞ்சா, கண்ணாடி.

413. கலிங்கம்:—ஊர்க்குருவி, புடைவை, வானம்பாடி, கலிங்கநாடு.

414. கந்தருவம்:—பெண், குதிரை.

415. ககம்:—பறவையின் பொதுப்பெயர், அம்பு.

416. கவடு :—யானைக்கயிறு, மரக்கொம்பு, மனக்கபடம்.

417. கருமை :—கறுப்பு, பெருமை, வலிமை.

418. கரேணு :—யானை, பெண்யானை.

419. கனைத்தல் :—ஒலித்தல், இருள்.

420. கடைப்பிடி யெனும்பெயர் மறப்பிலா தவனும்
தேற்றமு மெனவே செப்பப் பெறுமே.

421. கட்டளை யெனும்பெயர் இட்டிகை யியற்றலுந்
தத்துவ விகற்பமு நிறையறி கருவியும்
பிறவின ஒப்பும் ஓரிராசியும் பேசுவர்.

422. கண்ட லெனும்பெயர் கைதைநீர் முள்ளியாம்.

423. கரைதல் எனும்பெயர் ஒலித்தல் கூவுதலுமாம்.

424. கதழ்வெனும் பெயரே சிறப்பும் வேகமுமாம்.

425. களியெனும் பெயரே களிப்பொடு குழம்புமாம்.

426. கத்திகை யெனும்பெயர் சிறுகொடிப் பெயரும்
தொடையல் விகற்பமும் வாசந்தியும் சொல்லுவர்.

427. கந்துக மெனும்பெயர் குதிரையும் பந்துமாம்.

428. கப்பண மெனும்பெயர் கைவேல் விகற்பமும்
இரும்பினிற் புரிந்திடு நெருஞ்சிமுட் பெயருமாம்.

429. கலாமெனும் பெயரே கொடுமையும் சினமுமாம்.

430. கரியெனும் பெயரே களிறுஞ் சாட்சியும்
இருந்தையு மெனவே யியம்புவர் புலவர்.

431. கரீர மெனும்பெயர் மிடாவும் அகத்தியும்
தந்தியின் பல்லடிப் பெயருஞ் சாற்றுவர்.

432. கனவெனும் பெயரே கனவு மயக்கமும்.

433. கட்ட லெனும்பெயர் களைதலும் பிணித்தலும்
தடுத்தலு மெனவே சாற்றினர் புலவர்.

434. கந்த னெனும்பெயர் முருகனும் அருகனும்.

420. கடைப்பிடி :—மறவாமை, தேற்றம்.

421. கட்டளை :—செங்கல் இயற்றும் கருவி, தத்துவ விகற்பம், நிறையறிகருவி, ஒப்பு, ஓரிராசி.

422. கண்டல் :—தாழை, நீர்முள்ளிச்செடி.

423. கரைதல் :—ஒலித்தல், கூவுதல்.

424. கதழ்வு:—சிறப்பு, வேகம்.

425. களி :—களிப்பு, குழம்பு.

426. கத்திகை:—சிறுதுகிற்கொடி, மாலைவகை, குருக்கத்தி.

427. கந்துகம் :—குதிரை, பந்து.

428. கப்பணம் :—கைவேல்வகை, இரும்பினில் செய்த நெருஞ்சிமுள்.

429. கலாம்:—குரூரம், கோபம்.

430. கரி:—யானை, சாட்சி, மரவயிரம்.

431. கரீரம்:—பானை, அகத்தி, யானைப்பல்லடி.

432. கனவு:—கனா, மயக்கம்.

433. கட்டல்:—களைதல், பிணித்தல், தடுத்தல்.

434. கந்தன்:—முருகன், அருகதேவன்.

435. களரி யெனும்பெயர் போர்க்களமும் காடும்
கருமஞ் செய்யிடமுங் கருதுவர் புலவர்.

436. கறங்க லெனும்பெயர் சுழற்றுதலு மொலியும்
வளைதடிப் பெயரும் வழங்கப் பெறுமே.

437. கற்பக மெனும்பெயர் கற்பக தருவும்
சொர்க்கமும் பிரமன் வாழ்நாளுஞ் சொல்லுவர்.

438. கடுத்தல் எனும்பெயர் உவமையும் விரைவுமாம்.

439. கதவ மெனும்பெயர்க் கபாடமும் காவலும்.

440. கரியவ னெனும்பெயர் கண்ணனிந் திரனுடன்
சனியின் பெயரும் சாற்றப் பெறுமே.

441. கரிலெனும் பெயரே கொடுமையுங் குற்றமும்
காழ்த்தலு மெனவே கருதுவர் புலவர்.

442. கலுழி யெனும்பெயர் கானி யாறும்
கலங்கிய நீருங் கருதப் பெறுமே.

443. கவன மெனும்பெயர் காடுங் கலக்கமும்
விரைவு மெனவே விளம்புவர் புலவர்.

444. கழித்த லெனும்பெயர் மிகுதலுஞ் சாதலும்
கடத்தலு மெனவே கருதப் பெறுமே.

445. கழலெனும் பெயரே கழங்குஞ் செருப்பும்
காலுங் காலணிப் பெயருங் கருதுவர்.

446. கழும லெனும்பெயர் மயக்கமும் பற்றும்
நிறைவின் பெயரு நிகழ்த்துவர் புலவர்.

447. கயமெனும் பெயரே மென்மையும் பெருமையும்
களவின் பெயருங் கருதப் பெறுமே.

435. களரி:—போர்க்களம், காடு, தொழில்செய்யுமிடம்.

436. கறங்கல் :—சுழற்றுதல், ஓசை, வளைதடி.

437. கற்பகம்:—கற்பகவிருஷம், சொர்க்கம், பிரமனது வாழ்நாள்.

438. கடுத்தல் :—உவமை, வேகம்.

439. கதவம் :—கதவு, காவல்.

440. கரியவன் :—கண்ணன், இந்திரன், சனி.

441. கரில் :—கொடுமை, குற்றம், உறைதல்.

442. கலுழி :—காட்டாறு, கலங்கியநீர்.

443 . கவனம் :—காடு, கலக்கம், வேகம்.

444 கழித்தல் :—மிகுதல், சாதல், கடத்தல்.

445. கழல் :—கழற்காய், செருப்பு, கால், காலணி.

446. கழுமல் :—மயக்கம், பற்று, நிறைவு.

447. கயம் :—மென்மை, பெருமை, களவு.

448. களப மெனும்பெயர் யானைக் கன்றும்
கலவையுஞ் சாந்தும் கருதப் பெறுமே.

449. கம்புள் எனும்பெயர் சம்பங் கோழியுஞ்
சங்கின் பெயருஞ் சாற்றப் பெறுமே.

450. கண்ணெனும் பெயரே கணுவு மூங்கிலும்
இடத்தின் பெயரும் விழியு மியம்புவர்.

451. கருவி யெனும்பெயர் கவசமும் யாழும்
பலவினைப் பெயருந் தொடர்பு மீட்டமுந்
துணைக்கா ரணமுந் துகிலு மாயுதமும்
கசையும் பல்லியப் பெயருங் கலணையுந்
தொகுதியு மெனவே சொல்லுவர் புலவர்.

452. கடுவெனும் பெயரே கடுமரப் பெயரும்
விடமும் கடுத்தலும் விளம்பப் பெறுமே.

453. கழங்கெனும் பெயரே வேல னுடலுங்
கொடியின் கழலுங் கூறுவர் புலவர்.

454. கலமெனும் பெயரோ ரெண்ணுமா பரணமும்
உண்கல மரக்கல மட்கலம் யாவுமாம்.

455. கஞ்ச னெனும்பெயர் பிரமனுங் குறளனும்

456. கவ்வை யெனும்பெயர் கவலையுந் துன்பமும்
ஆர வாரத்தின் பெயரு மாமே.

457. கரையெனும் பெயர்நீர்க் கரையுஞ் சேர்க்கையின்
சொல்லின் பெயருஞ் சொல்லப் பெறுமே.

458. கண்ணுத லெனும்பெயர் கறைமிடற் றிறையை
நினைத்தலின் பெயரு நிகழ்த்துவர் புலவர். [யும்

ககர வருக்கம் முற்றும்

ஆகச் சூத்திரம் 111.

448. களபம் :—யானைக்கன்று, சந்தனக்கலவை.

449. கம்புள் :—சம்பங்கோழி, சங்கு.

450. கண் :—கணு, மூங்கில், இடம், கண்.

451. கருவி :—கவசம், வீணை, பலவினைப்பெயர், தொடர்பு, ஈட்டம், துணைக்காரணம், ஆடை, ஆயுதம், குதிரைச்சம்மட்டி, பலவகை வாத்தியம், சேணம், கூட்டம்.

452. கடு :—கடுமரம், விஷம், கசப்பு.

453. கழங்கு :—வெறியாட்டு, கழற்கொடி.

454. கலம் :—ஒரெண், அணி, உணவு உண்ணும் பாத்திரம், நாவாய், மண்பாத்திரம்.

455. கஞ்சன் :—பிரமன், குறியன்

456. கவ்வை :—கவலை, துன்பம், ஆரவாரம்.

457. கரை :—நீர்க்கரை, சேர்க்கை, வார்த்தை.

458. கண்ணுதல் :—சிவன், நினைத்தல்.

# ககர ஆகார வருக்கம்

459. காரி யெனும்பெயர் சனியுஞ் சாத்தனுங்
கருமையுங் காகமுங் கரிக்கு ருவியும்
வடுகக் கடவுளுந் தெய்வேந் திரனும்
கடுவுமோர் வள்ளலுங் கருதப் பெறுமே,

460. கால மெனும்பெயர் விடியற் காலமும்
விடிந்த பிற்காலமு முக்கா லமுமாம்.

461. காலெனும் பெயரே காற்றுங் கூற்றுந்
தாளும் பொழுதுந் தறியு மளவையும்
வழியுந் தேரி னுருளும் வாய்க்காலும்
பெலமு மலர்க்காம்பு மிடமும் பிள்ளையும்
முளையு மெனவே மொழிந்தனர் புலவர்.

462. காள மெனும்பெயர் கருமையு நஞ்சும்
ஊது சின்னத்தின் வருக்கமு முரைப்பர்.

463. காரெனும் பெயரே மாரிக் காலமும்
கறுவிய கருமங் கடைமுடி வளவும்
தவிராச் சினமு நீருங் கருங்குரங்கும்
உழவின் பருவமு மேகமுங் கூந்தலுங்
கருமையு மிருளும் வெள்ளாடுங் கருதுவர்.

464. காஞ்சி யெனும்பெயர் காஞ்சி நன்னகரமும்
மேகலைப் பெயருமோர் பண்ணுமோர் மரமுமாம்.

465. காண்டை யெனும்பெயர் கற்பா ழியினெடு
தவத்தோ ரிடமுஞ் சாற்றப் பெறுமே.

466. காந்தார மெனும்பெய ரிசையுங் காடுமாம்.

467. காமர மெனும்பெய ரிசைப் பொதுப்பெயரும்
அத்த நாளு மோரிசையு மடுப்புமாம்.

459. காரி :—சனி, சாத்தன், கருமை, காகம், கரிக்குருவி, வைரவன், இந்திரன், நஞ்சு, ஒருவள்ளல்.

460. காலம் :—விடியற்காலம், விடிந்தபிற்காலம், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலம்.

461. கால் :—காற்று, இயமன், பாதம், பொழுது, தறி, ஒரு அளவை, வழி, தேருருளை, வாய்க்கால், பலம், மலர்க்காம்பு, இடம், பிள்ளை, மூளை.

462. காளம் :—கருமை, விஷம், ஊதுகொம்பு.

463. கார் :—மழைக்காலம், கருதிய கருமம் முடியுமளவும் கொள்ளும் கோபம், நீர், கருங்குரங்கு, உழவின்பருவம், மேகம், கூந்தல், கருமை, இருள், வெள்ளாடு.

464. காஞ்சி :—காஞ்சிபுரம், மேகலை, ஒருபண், ஒருமரம்.

465. காண்டை :—மலைக்குகை, முனிவோர் உறைவிடம்.

466. காந்தாரம் :—இசை, காடு.

467. காமரம் :—இசைப்பொது, அத்த நட்சத்திரம், இசை, அடுப்பு.

468. காளை யெனும்பெயர் பாலைக் கதிபனும்
இளமையோன் பெயரு மெருதும் இயம்புவர்.

469. காய மெனும்பெயர் கறியின் கரிப்பும்
ஆகமும் விசும்பும் பெருங்கா யமுமாம்.

470. காத்திர மெனும்பெயர் களிற்றின் முற்காலும்
ஆக்கையுங் கனமும் கோப முமாமே.

471. காசெனும் பெயரே மணியின் கோவையுங்
குற்றமுங் காசின் விகற்பமும் கூறுவர்.

472. காவியெனும்பெயர் கள்ளும் குவளையும்
காவிக் கல்லுங் கருதப் பெறுமே.

473. காழக மெனும்பெயர் கருநிறந் தூசுமாம்.

474. கான மெனும்பெயர் காடு மிசையுமாம்.

475. காகுளி யெனும்பெயர் மந்த விசையோடு
நாசியி னெழுமொலி தவிசு நவிலுவர்.

476. கான லெனும்பெயர் கடற்கரைச் சோலையும்
மலைசார் சோலைப்பெயரு நல்லொளியும்
பேய்த்தேர்ப் பெயரும் பேசப் பெறுமே.

477. காவெனும் பெயரே கடிமலர்ச் சோலையும்
துலாமுங் காத்தலுந் தோட்சுமைப் பெயருமாம்.

478. காசை யெனும்பெயர் புற்பிடிப் பெயரும்
நாணலும் காசை மரமு நவிலுவர்.

479. காண மெனும்பெயர் பொன்னும் பொற்காசும்
பரியூ ணுஞ்செக்கு மோர்கட் செந்துமாம்.

480. காம்பு எனும்பெயர் மலர்க்காம்பு மூங்கிலும்
பட்டின் விகற்பமும் பகரப் பெறுமே.

468. காளை :—பாலை நிலத்தவன், இளமையோன், எருது.

469. காயம் :—மிளகின் கரிப்பு, உடல், ஆகாயம், பெருங்காயம்.

470. காத்திரம் :—யானையின் முன்கால், உடல், பருமம், கோபம்.

471. காசு :—மணியின்கோவை, குற்றம், காசின் விகற்பம்.

472. காவி :—கள், குவளை, காவிக்கல்.

473. காழகம் :—கருமை, ஆடை.

474. கானம் :—காடு, இசை.

475. காகுளி :—இசை, மூக்கிலிருந்து எழுகின்ற ஓசை, ஆசனம்.

476. கானல் :—கடற்கரைச் சோலை, மலைசார்சோலை, நல்லொளி, பேய்த்தேர்.

477. கா :—வாசனையுடைய மலர்கள் நிறைந்த சோலை ஒரு நிறையளவு, காத்தல், தோட்சுமை.

478. காசை :—புற்பிடி, நாணல், காசைமரம்.

479. காணம் :—பொன், பொற்காசு, குதிரையுணவு' செக்கு, ஒருகண் ஐந்து.

480. காம்பு :—மலர்க்காம்பு, மூங்கில், பட்டின் வகை.

481. காழெனும் பெயரே மணியின் கோவையு
மரத்தின் வயிரமும் விதையும் பரலுமாம்.

482. காழிய ரெனும்பெயர் கடற்கழிப் பரதரும்
ஈரங் கோலியர் பெயரும் இயம்புவர்.

483. கானெனும் பெயரே காடு மணமுமாம்.

484. காப்பு எனும்பெயர் வெண்ணீறுங் காவலும்
தூசுங் கதவும் சொல்லுவர் புலவர்.

485. காத லெனும்பெயர் விருப்பமுங் கோறலும்

486. காலிலி யெனும்பெய ரருணனும் சனியும்
பாம்பு மெனவே பகரப் பெறுமே.

487. காண்ட மெனும்பெயர் காடுந் தீர்த்தமுந்
தூசு நூன்முடிவும் படைக்கலப் பொதுவும்
அம்புங் கோலு மணிகலச் செப்பும்
குதிரை யுங்கமண் டலமு மியம்புவர்.

488. காதை யெனும்பெயர் கதையொடு சொல்லுமாம்

489. காம னெனும்பெயர் கணைவேள் பெயரும்
ஐந்தரு விறைவன் பெயரு மாமே.

490. காம ரெனும்பெயர் கட்ட ழகுடனே
விருப்பமு மெனவே விளம்புவர் புலவர்.

491. காம மெனும்பெயர் விரகமும் விருப்பும்.

ககர ஆகார வருக்கம் முற்றும்

481. காழ் :—மணிக்கோவை, மரவயிரம், விதை, பரல்.

482. காழியர்:—உப்புவாணிகர், வண்ணார்.

483. கான் :—காடு, மணம்.

484. காப்பு :—வெண்ணீறு, காவல், புடைவை, கதவு.

485. காதல் :—விருப்பம், கொல்லுதல்.

486. காலிலி :—சூரியன் தேர்ப்பாகன், சனி, பாம்பு.

487. காண்டம்:—காடு, தீர்த்தம், புடைவை, நூன் முடிவு, படைக்கலப்பொது, அம்பு, கோல், அணிகலச்செப்பு, குதிரை, கமண்டலம்.

488. காதை :—கதை, சொல்.

489. காமன் :—மன்மதன், இந்திரன்.

490. காமர்:—கட்டழகு, விருப்பம்.

491. காமம் ;—காமநோய், ஆசை.

---

# ககர இகர வருக்கம்

492. கிடக்கை யெனும்பெயர் கிளர்புவிப் பெயரும்
சயனமு மென்னச் சாற்றப் பெறுமே.

493. கிழமை யெனும்பெயர் குணமு முரிமையும்
வாரமு மெனவே வழங்குவர் புலவர்.

494. கிளையெனும் பெயரே மூங்கிலும் சுற்றமும்
கிளைத்தலு மோர்பண் பெயருங் கிளத்துவர்.

495. கிட்டி யெனும்பெயர் தலையீற் ருவும்
தாளமு மெனவே சாற்றுவர் புலவர்.

496. கின்னர மெனும்பெயர் கின்னர மிதுனமும்
யாழின் பெயரு நீர்ப்பறவையு மாந்தையும்.

497. கிடுகெனும் பெயரே தேர்மரச் சுற்றும்
பரிசையு மெனவே பகரப் பெறுமே.

498. கிளரெனும் பெயரே கிளர்ந்தெழு கிரணமுங்
கோட்டு மலர்ப்பூந் தாதுங் கூறுவர்.

499. கிஞ்சுக மெனும்பெயர் முண்முருக் குடனே
செந்நிறப் பெயருஞ் செப்பப் பெறுமே.

500. கிள்ளை யெனும்பெயர் கிளியுங் குதிரையும்.

501. கிருட்டின னெனும்பெயர் கேசவன் பெயரும்
அருச்சுனன் பெயரு மாகு மென்ப.

502. கிருத்திம மெனும்பெயர் தொழிலுஞ் சருமமும்
பூதமும் பொய்யும் புகலப் பெறுமே.

503. கிம்புரி யெனும்பெயர் கிரீட விகற்பமும்
களிற்றின் மருப்பின் பூணுங் கருதுவர்.

492. கிடக்கை:—பூமி, படுக்கை.

493. கிழமை :—குணம், உரிமை, வாரம்.

494. கிளை :—மூங்கில், உறவு, கிளைத்தல், ஏழிசையி ளொன்று.

495. கிட்டி:—தலையீற்றுப்பசு, கைத்தாளம்.

496. கின்னரம் :—கின்னரமிதுனம், வீணை, நீர்வாழ் பறவை, ஆந்தை.

497. கிடுகு :—தேர்மரச் சுற்று, கேடகம்.

498. கிளர்:—கிரணம், பூந்தாது.

499. கிஞ்சுகம் :—முண்முருக்கு, சிவப்பு.

500. கிள்ளை :—கிளி, குதிரை.

501. கிருட்டினன் :—மகாவிட்டுணு, அருச்சுனன்.

502. கிருத்திமம் ;—தொழில், தோல், பூதகணம், பொய்.

503. கிம்புரி:—கிரீடவகையுள் ஒன்று, யானைக்கொம்பிற் பூண்.

504. கிழியெனும் பெயரே கிழிபடு துகிலும்
இருநிதிப் பெயரு மெழுது படமுமாம்.

505. கிருட்டி யெனும்பெயர் பன்றியின் பெயரும்
ஓரீற் ருவும் உரைக்கப் பெறுமே.

## ககர ஈகார வருக்கம்

506. கீர மெனும்பெயர் கிளியும் பாலுமாம்.

507. கீச கமெனும் பெயர் மூங்கிலுங் குரங்குமாம்.

508. கீத மெனும்பெயர் இசையுடன் வண்டுமாம்.

509. கீலால மெனும்பெயர் நீருங் காடியும்
உதிரமு மெனவே யுரைக்கப் பெறுமே.

510. கீழெனும் பெயரே கிழக்குங் கீழ்மையும்
கீழ்ப்படு சாதியு மிடமுங் கிளத்துவர்.

## ககர உகர வருக்கம்

511. குருதி யெனும்பெயர் குசனும் சிவப்பும்
உதிரமு மெனவே யுரைக்கப் பெறுமே.

512. குலமெனும் பெயரி ரேவதியுங் கூட்டமும்
வருண விகற்பமு மனையுங் கோயிலும்.

513. கும்ப மெனும்பெயர் கும்ப விராசியும்
வெங்கரி நெற்றியுங் குடமும் விளம்புவர்.

514. கும்பி யெனும்பெயர் யானையும் சேறும்
நிரயமு மெனவே நிகழ்த்தப் பெறுமே.

504. கிழி:—ஆடை, சங்கநிதி, பதுமநிதி, எழுதுபடம்.

505. கிருட்டி :—பன்றி, தலையீற்றுப்பசு.

---

506. கீரம் :—கிளி, பால்.

507. கீசகம் :—மூங்கில், குரங்கு.

508. கீதம் :—இசை, வண்டு.

509. கீலாலம் :—நீர், காடி, இரத்தம்.

510. கீழ்:—கிழக்கு, கீழ்மை, கீழ்சாதி, இடம்.

---

511. குருதி :—செவ்வாய், செந்நிறம், இரத்தம்.

512. குலம் :—இரேவதி நாள், கூட்டம், சாதி, வீடு, கோயில்.

513. கும்பம் :—கும்பராசி, யானை மத்தகம், குடம்.

514. கும்பி :—யானை, சேறு, நரகம்.

515. குமுத மெனும்பெயர் மிகும்பே ரோசையும்
அடுப்பு நெய்தலு மோர்திசை யானையுமாம்.

516 குண்டெனும் பெயரே குதிரை ஆண்பெயரும்
ஆழமும் கொலையுந் தாழ்வு மாமே.

517 குயிலெனும் பெயரே கோகிலமுந் துளையும்
உரையுங் கருமுகிற் பெயரும் ஓதுவர்.

518 குவலைய மெனும்பெயர் குவளையும் புவியுமாம்.

519. குமரி யெனும்பெயர் அழிவிலா மாதரும்
உமையுந் துர்க்கையு மழிவிலாப் பொருளும்
சத்த மாதாக்களிற் சாற்று மோரணங்கும்
கற்று ழையுமோர் நதியுங் கருதுவர்.

520. குருகெனும் பெயரே கொல்லுலை மூக்கும்
கோழியுங் கைவளை யுங்குருக் கத்தியும்
நாரைப் பெயரொடு மூல நாளும்
புள்ளின் பொதுவும் வெண்மையும் இளமையும்.

521. குன்றெனும் பெயரே வருண னும்
சிறுமலைப் பெயர்பெரு மலையுஞ் செப்புவர்

522. குருவெனும் பெயரே குரவனு நிறமும்
அரசனும் வியாழமும் பாரமும் பெருமையும்
தாளத்தி னிருமாத் திரையுமோர் நோயுமாம்.

523 குடியெனும் பெயரே கோத்திர விகற்பமும்
குலத்தின் பெயருமூர்ப் பொதுவும் புருவமும்.

524. குறிஞ்சி யெனும்பெயர் மலைச்சார்பு நிலமும்
அந்நில யாழுமோர் மரமு மாமே.

525. குவடெனும் பெயர்மரக் கோடுஞ் சயிலமும்
மலையி னுச்சியும் வழங்கப் பெறுமே.

515. குமுதம் :—பேரொலி, அடுப்பு, ஆம்பல், தென் மேற்றிசை, யானை.

516. குண்டு :—ஆண்குதிரை, ஆழம், கொலை, தாழ்வு.

517. குயில் :—கோகிலம், துளை, உரை, கருமையான மேகம்.

518. குவலையம் :—குவளைமலர், பூமி.

519. குமரி :—கன்னி, உமை, துர்க்கை, அழிவிலாப் பொருள், சப்தமாதர்களுள் ஒருத்தி, கற்றாழை, ஒரு நதி.

520. குருகு :—உலைமூக்கு, கோழி, கைவளை, குருக்கத்தி, நாரை, மூலநாள், பறவைப்பொது, வெண்மை, இளமை.

521. குன்று :—சதய நட்சத்திரம், சிறியமலை, பெரியமலை.

522. குரு :—ஆசிரியன், நிறம், அரசன், வியாழன், பாரம், பெருமை, தாளத்தின் இரண்டு மாத் திரை, நோய்.

523. குடி :—கோத்திர விகற்பம், குலப்பெயர், ஊர்ப் பொது, புருவம்.

524. குறிஞ்சி :—குறிஞ்சி நிலம் (மலையும், மலையைச் சார்ந்த இடமும்), குறிஞ்சியாழ், குறிஞ்சி மரம்.

525. குவடு :—மரக்கிளை, மலை, மலையின் உச்சி.

526. குறும்பொறை யெனும்பெயர் குறிஞ்சி யூரும்
காடு மெனவே கருதுவர் புலவர்.

527. குடிஞை யெனும்பெயர் கூகையும் யாறும்
புட்பொதுப் பெயரும் புகலப் பெறுமே.

528. குளமெனும் பெயரே நுதலும் பொய்கையும்
சருக்கரைப் பெயருஞ் சாற்றுவர் புலவர்.

529. குழையெனும் பெயரே சேறுந் துவாரமும்
தளிருங் குண்டலப் பெயருஞ் சாற்றுவர்.

530. குடமெனும் பெயரே கும்பமும் பசுவும்
கொட்டிக் கைகள் குவித்தாடு கூத்தும்
நகரு மக்காரமு நவிலப் பெறுமே.

531. குணுங்க ரெனும்பெயர் தோற்கரு வியருடன்
புலைஞரு மெனவே புகன்றனர் புலவர்.

532. குஞ்ச மெனும்பெயர் குறளைச் சொல்லும்
நாழியுங் குறளு நவிலப் பெறுமே.

533. குரலெனும் பெயரே வாசிக் கோவையும்
கிண்கிணி மாலையும் கிளர்நெற் கதிரும்
கோதையர் மயிரும் யாழ்நரம் பிலொன்றும்
புள்ளின் சிறகும் புகன்றனர் புலவர்.

534. குணிலெனும் பெயர்கவ ணுங்குறுந் தடியுங்
கடிப்பெனும் பணையுங் கருதப் பெறுமே.

535. குளிரெனும் பெயரே குடமுழவும் ஞெண்டும்
குளிர்ச்சியு மிலைமூக் கரியுங் கருவியுங்
கவணு மழுவுங் கருதப் பெறுமே.

536. குரையெனும் பெயரே குதிரைப் பெயரும்
ஒலியுமிடைச் சொல்லு முரைக்கப் பெறுமே.

526. குறும்பொறை:—குறிஞ்சி நிலத்தூர், காடு.

527. குடிஞை:—கோட்டான், ஆறு, பறவைப் பொது.

528. குளம்:—நெற்றி, பொய்கை, சர்க்கரை.

529. குழை:—சேறு, துளை, தளிர், குண்டலம்.

530. குடம்:—கும்பராசி, பசு, ஒருவகைக்கூத்து, பட்டணம், வெல்லக்கட்டி.

531. குணுங்கர்:—தோற்கருவியாளர், புலைஞர்.

532. குஞ்சம்:—குறளைச் சொல், நாழி, குறுமை.

533. குரல்:—குதிரைக்கிங்கிணிமாலை, கிண்கிணிமாலை, நெற்கதிர், பெண்மயிர், யாழ்நரம்பிலொன்று, பறவையிறகு.

534. குணில்:—கல்லெறியுங் கருவி, குறுந்தடி, பறையடிக்கும் குறுந்தடி.

535. குளிர்:—முழவுவாத்தியவகை, நண்டு, குளிர்ச்சி, இலைமூக்கரியும் கத்தி, கவண், மழு.

536. குரை:—குதிரை, ஒலி, இடைச்சொல்.

537. குலையெனும் பெயர்காய்க் கொத்துஞ்செய்கரையும்
அம்பின் குதையும் விற்குதையு மாமே.

538. குய்யெனும் பெயரே குளிர்மணப் புகையுடன்
கறிகரித் தலின்பெயர் தானுங் கருதுவர்.

539. குடம்பை யெனும்பெயர் முட்டையும் கூடுமாம்.

540. குஞ்சி யெனும்பெயர் குன்றியின் புதலும்
பறவை யிளமையு மாண்பான் மயிருமாம்

541. குழலெனும் பெயரே துளையுடைப் பொருளும்
இசையின் குழலும் இருபான் மயிருமாம்.

542. கும்பச னெனும்பெயர் செந்தமிழ் முனியும்
துரோண சாரியன் பெயருஞ் சொல்லுவர்.

543. குடுமி யெனும்பெயர் மலையி னுச்சியும்
வென்றியு மாண்பான் மயிரும் விளம்புவர்.

544. குயமெனும் பெயரே யிளமையு முலையுங்
கொடுவா ளெனவுங் கூறப் பெறுமே.

545. குட்ட மெனும்பெயர் குளமு மாழமுந்
தொழுநோ யெனவுஞ் சொல்லுவர் புலவர்.

546. குணமெனும் பெயரே கும்பமு மியல்புங்
கயிறுங் குணத்தின் விகற்பமும் கருதுவர்.

547. குல்லை யெனும்பெயர் வெட்சியுந் துளசியும்
கஞ்சா வின்பெய ரதனையுங் கருதுவர்.

548. குத்தி யெனும்பெயர் அடக்கமு மண்ணுமாம்.

549. குபேர னெனும்பெயர் வயிச்சிர வணனோடு
மதியின் பெயரும் வழங்கப் பெறுமே.

537. குலை :—காய்க்கொத்து, செய்கரை, அம்பின்அடி, வில்லினடி.

538. குய் :—நறும்புகை, தாளித்திடுகறி.

539. குடம்பை :—முட்டை, கூடு.

540. குஞ்சி :—குன்றிப்புதர், இளம்பறவை, ஆடவர் மயிர் (குடுமி).

541. குழல் :—உட்டொளைப்பொருள், வேய்ங்குழல், ஆண்மயிர், பெண்மயிர்.

542. கும்பசன் :—அகத்தியன், துரோணுசாரியன்.

543. குடுமி :—மலையினுச்சி, வெற்றி, ஆண் மயிர்.

544. குயம் :—இளமை, முலை, அரிவாள்.

545. குட்டம் :—குளம், ஆழம், தொழுநோய்.

546. குணம் :—குடம், இயல்பு, கயிறு, குணவிகற்பம்.

547. குல்லை :—வெட்சி, துளசி, கஞ்சா.

548. குத்தி :—அடக்கம், மண்.

549. குபேரன் :—வயிச்சிரவணன், சந்திரன்.

550. குறளெனும் பெயரே குறளர்தம் பெயரும்
பாரிடப் பெயரும் குறுமையும் பகருவர்.

551. குறடெனும் பெயரே திண்ணையும் பலகையும்.

552. குற்ற லெனும்பெயர் கோறலும் பறித்தலும்.

553. குந்த மெனும்பெயர் குருந்தமும் வியாதியும்
கைவேல் குதிரைப் பெயருங் கருதுவர்.

554. குயிறல் எனும்பெயர் கூவலும் குடைதலும்
செறிதலும் செய்தலும் செப்பப் பெறுமே.

555. குவவெனும் பெயரே குவிதலுந் திரட்சியும்
பெருமையு மெனவே பேசப் பெறுமே.

556. குய்யம் எனும்பெயர் யோனியு மறைவுமாம்.

557. குரங்கெனும் பெயரே வளைவும் வானரமும்
மிருகப் பொதுவின் பெயரும் விளம்புவர்.

## ககர ஊகார வருக்கம்

558. கூற்றெனும் பெயரே கூற்றனும் வார்த்தையும்.

559. கூளியெனும்பெயர் குடும்பமுங் கூட்டமும்
பேயுஞ் சேனைத் தலைவனும் பேசுவர்.

560. கூட மெனும்பெயர் மலையின் குவடும்
கூட்டமு மறைவு மனவஞ் சனையும்
கொல்லன் சம்மட் டியையுங் கூறுவர்.

561. கூல மெனும்பெயர் பாகலும் பசுவும்
வரம்பும் விலங்கின் வாலு நீர்க்கரையும்
தெருவும் பலபண்ட முமங்கா டியுமாம்.

550. குறள் :—குள்ளர், பூதம், குறுமை.

551. குறடு :—திண்ணை, பலகை.

552. குற்றல் :—கோறல், பறித்தல்.

553. குந்தம் :—குருந்தமரம், ஒருநோய், கைவேல், குதிரை.

554. குயிறல் :—அழைத்தல், குளித்தல், நெருங்கல், செய்தல்.

555. குவவு :—குவிதல், திரண்டவடிவு, பெருமை.

556. குய்யம் :—பெண்குறி, மறைவு.

557. குரங்கு :—வளைவு, வானரம், மிருகங்களின் பொதுப்பெயர்.

P31:44
119598

558. கூற்று :—இயமன், சொல்.

559. கூளி:—குடும்பம், கூட்டம், பேய், சேனைத்தலைவன்.

560. கூடம் :—மலையினுச்சி, கூட்டம், மறைவு, வஞ்சகம், கொல்லன், சம்மட்டி.

561. கூலம் :—பாகல், பசு, சிறுவரம்பு, விலங்கின்வால், நீர்க்கரை, தெரு, பலபண்டம், கடைவீதி.

562. கூளிய ரெனும்பெயர் பூதகண வீரரும்
கொலைத்திற லோரு நட் பாளருங் கூறுவர்.

563. கூந்த லெனும்பெயர் மயிலின் றேகையும்
கோதையர் குழலுங் கூறப் பெறுமே.

564. கூவிர மெனும் பெயர் தேரின் கொடிஞ்சியுந்
தேரு மெனவே செப்புவர் புலவர்.

565. கூத்த னெனும்பெய ருயிரின் பெயரும்
நடிப்போன் பெயரு நவிலப் பெறுமே.

566. கூழெனும் பெயரே பலவகை யுணவும்
நெற்பயிர் முதலவுங் கனகமு நிகழ்த்துவர்.

567. கூரெனும் பெயரே கூர்மையு மிகுதியும்.

568. கூர லெனும்பெயர் மாதர் தம்மயிரும்
புள்ளின் சிறகும் புகலப் பெறுமே.

569. கூழை யெனும் பெயர் கொடும்படை யுறுப்பும்
புட்சிறகு பெண்பான் மயிரும் புகலுவர்.

## ககர எகர வருக்கம்

570. கெழுவுத லெனும்பெயர் மயக்கமும் பற்றுமாம்

571. கெதியெனும் பெயர்பர கெதிநடை விரைவுமாம்.

—ககர எகர வருக்கம் முற்றும்.

562. கூளியர் :—பூதகணவீரர், கொலையாளிகள், சிநேகிதர்.

563. கூந்தல் :—மயிலின் தோகை, பெண்களின்கூந்தல்.

564. கூவிரம் :—தேரின் கொடிஞ்சி, தேர்.

565. கூத்தன் :—உயிர், நடிகன்.

566. கூழ் :—பலவகையுணவு, நெற்பயிர், பொன்.

567. கூர்:—கூர்மை, மிகுதி.

568. கூரல் :—பெண்கள் மயிர், பறவையிறகு.

569. கூழை:—கொடிய படையுறுப்பு, பெண்கள் மயிர், பறவை யிறகு.

---

570. கெழுவுதல்:—மயக்கம், பற்று.

571. கெதி:—பரகதி, நடை, விரைவு.

## ககர ஏகார வருக்கம்

572. கேடக மெனும்பெயர் ஊர்ப்பொதுப் பெயரும்
பரிசையும் பலகையும் பகர்ந்தனர் புலவர்.

573. கேச மெனும்பெயர் பெண்பான் மயிரும்
ஆண்பான் மயிரு மஃறிணை மயிருமாம்.

574. கேழெனும் பெயரே நிறமும் ஒளியும்
உவமையு மெனவே யுரைத்தனர் புலவர்.

575 கேசர மெனும்பெயர் மகிழமரப் பெயரும்
பூந்தாது மெனவே புகலப் பெறுமே.

576. கேது வெனும்பெயர் ஒன்பான் கிரகமும்
துவசமு நெருப்புஞ் சொல்லுவர் புலவர்.

577. கேவல மெனும்பெயர் தனிமையு முத்தியும்.

578. கேட்டை யெனும்பெயர் புரந்தர னும்
அசைச்சொற் பெயரு மூதேவி யுமாமே.

579. கேள்வி யெனும்பெயர் கல்வியும் செவியுமாம்.

580. கேகய மெனும்பெயர் மயிலுமோர் பண்ணும்
அசுண மாவின் பெயரு மாமே.

ககர ஏகார வருக்கம் முற்றும்.

## ககர ஐகார வருக்கம்

581. கையெனும் பெயரலங் கரித்தலுஞ் சிறுமையும்
தானையி னுறுப்பும் தங்கையும் செங்கையும்
ஒழுக்கமு மிடமுங் குற்றமுஞ் சார்புமாம்.

572. கேடகம்:—ஊர்ப் பொதுப் பெயர், கேடகம், பலகை.

573. கேசம்:—பெண்மயிர், ஆண்மயிர், அஃறிணை, மயிர்.

574 கேழ் :—நிறம், ஒளி, ஒப்பு.

575. கேசரம்:—மகிழ மரம், மகரந்தம்.

576. கேது :—நவக்கிரகங்களுள் ஒரு கிரகம், கொடி, நெருப்பு.

577. கேவலம்:—தனிமை, மோட்சம்.

578. கேட்டை:—ஒரு நட்சத்திரம், அசைச்சொல், மூதேவி.

579. கேள்வி:—கல்வி, காது.

580. கேகயம் :—மயில், ஒருபண், அசுணப்புள்.

---

581. கை :—ஒப்பனை, சிறுமை, படைவகுப்பு, தங்கை, கைத்தலம், ஒழுக்கம், இடம், குற்றம், சார்பு.

582. கைத்த லெனும்பெயர் கைப்புஞ் சினமுமாம்.

583. கைக்கிளை யெனும்பெய ரொருதலைக் காமமும்
இசையின் விகற்பமு மியம்பப் பெறுமே.

ககர ஐகார வருக்கம் முற்றும்.

## ககர ஒகர வருக்கம்

584. கொடி றெனும் பெயரசுரர் குருவி னுளுங்
கவுளியின் பெயருங் கருவிப் பற்றுமாம்.

585. கொக்கெனும் பெயரே குதிரையு மூலமும்
பேகமுஞ் செந்நாயு மாமரமும் பேசுவர்.

586. கொன்னெனும் பெயரே, ஓரசைச் சொல்லும்
பெருமையுங் காலமும் வறிது மச்சமும்
பயனி லாததும் பகருவர் புலவர்.

587. கொற்றி யெனும்பெயர் கோவிளங் கன்றும்
துர்க்கையுங் கொத்தியுஞ் சொல்லப் பெறுமே.

588. கொண்மூ வெனும்பெயர் மேகமா காயமுமாம்.

589. கொந்தள மெனும்பெயர் கோதையர் மயிரும்
குருளையுங் கருங்குழற் கொத்து மாமே.

590. கொடிய னெனும்பெயர் கொடியவன் பெயரும்
கேதுவின் பெயருங் கிளர்த்தப் பெறுமே.

591. கொம்மை யெனும்பெயர் கொங்கையும் பெலமும்
இளமையும் அங்கை குவித்துக் கொட்டலும்
வட்ட வடிவுந் திடரும் வழங்குவர்.

582. கைத்தல் :—கைப்பு, சினம்.

583. கைக்கிளை :—ஒருதலைக்காமம், இசைவகையுள் ஒன்று.

---

584. கொடிறு:—பூச நட்சத்திரம், கவுளி, கருவிப்பற்று.

585. கொக்கு :—குதிரை, மூலநட்சத்திரம், தவளை, செந்நாய், மாமரம்.

586. கொன் :—அசைச்சொல், பெருமை, காலம், பயனின்மை, பயம்.

587. கொற்றி :—பசுவின்இளங்கன்று, துர்க்கை, கொத்தி.

588. கொண்மூ :—மேகம், ஆகாயம்.

589. கொந்தளம் :—பெண்மயிர், குருளை, மாதர் குழற்கொத்து.

590. கொடியன் :—துன்மார்க்கன், கேது.

591. கொம்மை :—முலை, வலி, இளமை, கைகுவித்துக் கொட்டல், வட்டவடிவு, திடர்.

592. கொண்டை யெனும்பெயர் இரந்தையின் கனியும்
மயிர்முடிப் பெயரும் வழங்கப் பெறுமே.

593. கொற்ற மெனும்பெயர் அரசியற் பெயரும்
வெற்றியின் பெயரும் விளம்புவர் புலவர்.

594. கொல்லெனும் பெயர்கொலை யேவலு
மசைச்சொல்லும்
ஐயமும் வருத்தமும் செங்கொல்லும்
கருங்கொல்லும்.

595. கொடியெனும் பெயரே யொழுங்கும் வல்லியும்
துவசமுங் காக்கையின் பெயருஞ் சொல்லுவர்.

ககர ஒகர வருக்கம் முற்றும்.

## ககர ஓகார வருக்கம்

596. கோடை யெனும்பெயர் மேற்றிசைக் காற்றும்
குதிரையும் வெயிலும் வெண்காந்தளுங் கூறுவர்.

597. கோவெனும் பெயரே குலிசமுந் தலைவனும்
அம்பும் பூமியும் அறலுங் கிரணமும்
சுவர்க்கமும் விழியுஞ்சூழ் பெருந்திசையும்
மலையும் பதவும் வானமு மிரக்கமும்
குறிப்பின் வார்த்தையுங் கூறுவர் புலவர்.

598. கோளெனும் பெயரே யொன்பான் கிரகமும்
வலியுங் கொள்கையுங் கொலையு மிடையூறும்
குறளையின் புன்சொல்லுங் கூறப் பெறுமே.

599. கோல மெனும்பெயர் கொழுந்து நீரோட்டமும்
பாக்கும் பீர்க்கும் பன்றியு மழகும்
இரந்தையு இரந்தைக் கனிக்கும் இயம்புவர்.

592. கொண்டை :—இலந்தைக்கனி, மயிர்முடி.

593. கொற்றம் :—அரசியல், வெற்றி.

594. கொல் :—கொலையேவல், அசைச்சொல், ஐயம், வருத்தம், செம்பொன், இரும்பு.

595. கொடி :—ஒழுங்கு, வல்லி, கொடி, காக்கை.

---

596. கோடை :—மேல்காற்று, குதிரை, வெயில், வெண்காந்தள்.

597. கோ :—வச்சிராயுதம், அரசன், அம்பு, பூமி, நீர், கிரணம், சுவர்க்கம், கண், திசை, மலை, புல், ஆகாயம், இரக்கம்.

598. கோள் :—நவக்கிரகங்கள், வலிமை, கொள்கை, கொலை, இடையூறு, புறங்கூறல்.

599. கோலம் :—நீரோட்டம், பாக்கு, பீர்க்கு, பன்றி, அழகு, இலந்தை, இலந்தைக்கனி.

600. கோட்ட மெனும்பெயர் கோயிலு நாடும்
கோட்டமும் வளைவும் உண்கலனு மான்கொட்டிலும்
குரவு மனக்கோட்ட முமெனக் கூறுவர்.

601. கோத்திர மெனும்பெயர் குடியு மலையும்
புவனியு மெனவே புகன்றனர் புலவர்.

602 கோடெனும் பெயரே மலையின் குவடும்
வார்புனற் கரையும் விலங்கின் மருப்பும்
மரத்தின் பணையு மூதுங் கொம்பும்
சங்கின் பெயருஞ் சாற்றப் பெறுமே.

603. கோச மெனும்பெயர் மதிலுறுப்பு முட்டையும்
பொத்தகமும் பொருள் பொருந்து பெட்டகமும்
ஆண்குறிப் பெயரு மாகு மென்ப.

604. கோட்டி யெனும்பெயர் கோபுர வாயிலும்
ஈட்டு பலசபையு மியம்பப் பெறுமே.

605. கோதை யெனும்பெயர் மடந்தையர் குழலுஞ்
சேரனு முடும்புஞ் சிறந்த கைக்கட்டியும்
மாலையுங் காற்றின் பெயரும் வழங்குவர்.

606. கோணெனும் பெயரே வளைவும் கூனுமாம்.

607. கோடக மெனும்பெயர் முடியின துறுப்பும்
குதிரையும் புதுமையுங் கூறப் பெறுமே.

608. கோர மெனும்பெயர் கொடுமையும் வட்டிலும்
சோழன் குதிரையுஞ் சொல்லப் பெறுமே.

609. கோசிக மெனும்பெயர் பட்டும் கூறையும்
சாம வேத முமெனச் சாற்றுவர்.

600. கோட்டம் :—கோயில், நாடு, கோட்டம், வளைவு, உண்ணும்பாத்திரம், ஆன்கொட்டில், குராமரம், கோணல்.

601. கோத்திரம்:—குடி, மலை, பூமி.

602. கோடு: –மலையுச்சி, நீர்க்கரை, விலங்கின்கொம்பு, மரப்பணை, ஊதுகொம்பு, சங்கு.

603 கோசம்:–மதிலுறுப்பு. முட்டை, புத்தகம், பொக்கிஷம், ஆண்குறி.

604. கோட்டி:—கோபுரவாயில், கூட்டம்.

605. கோதை:—பெண்கள் கூந்தல், சேரன், உடும்பு, வில்லாளர் கையிற் பூணும் தோலுறை, மாலை, காற்று.

606. கோண்:–வளைவு, கூன்.

607. கோடகம்:–முடியுறுப்பு, குதிரை, புதுமை.

608. கோரம்:—கொடுமை, வட்டில், சோழன் குதிரை.

609. கோசிகம்:–பட்டு, புடைவை, சாமவேதம்.

610 கோடிக மெனும்பெயர் கூறையின் பெயரும்
பூவின் றட்டும் புகலப் பெறுமே.

611. கோடர மெனும்பெயர் குரங்கும் குதிரையும்
மரத்தின் கோடும் எட்டிமரச் செறிவுமாம்.

612. கோகுல மெனும்பெயர் குயிலொடு குரங்கும்
பல்லியு மெனவே பகர்ந்தனர் புலவர்.

613. கோளி யெனும்பெயர் கொளிஞ்சி மரமும்
அத்தியால் பூவாது காய்க்கு மரமுமாம்.

614. கோழி யெனும்பெயர் சோழ னுறையூரும்
ஆண்டலைப் புள்ளு மாமென வுரைப்பர்.

615. கோண மெனும்பெயர் குதிரையு மூக்கும்
அங்குச முங்கூன் வாளு மாமே.

616. கோடி யெனும்பெயர் தூசும் புதுமையும்
ஒரெண் பெயரு முரைக்கப் பெறுமே.

617. கோண லெனும்பெயர் கூனலும் வளைதலும்
மாறுபடு குணத்தின் பெயரும் வழங்கும்.

618. கோலெனும் பெயரே யாழி னரம்பும்
அம்புந் துலாமுந் தூரிகைக் கோலும்
அஞ்சனக் கல்லு மளந்திடு கோலும்
குதிரை மத்திகையுந் திரட்சியு மீட்டியும்
இறைமுறை நடத்தல் வாட்கோலு மியம்புவர்.

ககர ஓகார வருக்கம் முற்றும்.

610. கோடிகம்:—ஆடை, பூந்தட்டு.

611. கோடரம்:—குரங்கு, குதிரை, மரக்கொம்பு, எட்டிமரம்.

612. கோகுலம்:—குயில், குரங்கு, பல்லி.

613. கோளி:—கொளிஞ்சி, அத்தி, ஆல், பூவாது காய்க்கும் மரம்.

614. கோழி:—உறையூர், ஆண்டலைப்பறவை.

615. கோணம்:—குதிரை, மூக்கு, அங்குசம், வளைந்தவாள்.

616. கோடி:—ஆடை, புதுமை, ஒரெண்.

617. கோணல்:—கூன், வளைவு, மாறுபாடு.

618. கோல்:—யாழினரம்பு, பாணம், துலாக்கோல், எழுதுகோல், மையெழுதுகோல், அளக்கும் கோல், குதிரைச்சம்மட்டி, திரண்டவடிவு, ஈட்டி, வாட்கோல்.

—

## ககர ஔகார வருக்கம்

619. கௌசிக மெனும்பெய ரோரிசையுடன்
கூகையும் சுடர்நிலைத் தண்டும் பட்டுமாம்.

620. கௌவை யெனும்பெயர் கள்ளும் துன்பமும்
எள்ளிளங் காயும் பழிச்சொலு மோசையும்.

621. கௌந்தி யெனும்பெயர் பாண்டவ ரன்னையும்
அருந்த வப்பெண் பெயரு மாமே.

622. கௌட மெனும்பெய ரொருதே சத்துடன்
ஒருகொடிப் பெயரு முரைக்கப் பெறுமே.

# 3வது சகர வருக்கத் தொகுதி

### சகர வருக்கம்

623. சம்பு வெனும்பெயர் சங்கரன் றிருமால்
நான்முக னவன ரியுமோர் புல்லுஞ்
சூரியன் பெயருஞ் சொல்லப் பெறுமே.

624. சத்தி யெனும்பெயர் வேலும் பெலமும்
உமையுந் துவசமுங் குடைமுற் காரமும்.

625. சமனெனும் பெயரே யியமனு நடுவுமாம்

626. சதியெனும் பெயரே தாள வொத்துடன்
உரோகிணிப் பெயருங் கற்பாட் டியுமாம்.

627. சந்தி யெனும்பெய ரந்திப் பொழுது
மூங்கிலுஞ் சதுக்கமு மொழியப் பெறுமே.

619. கௌசிகம்:—ஓரிசை, கூகை, விளக்குத்தண்டு, பட்டு.

620. கௌவை:—கள்ளு, துன்பம், எள்ளிளங்காய், பழிச்சொல்.

621. கௌந்தி:—குந்தி, கவுந்தி.

622. கௌடம்:—ஒருதேசம், ஒருவகை மூலிகைக் கொடி.

---

623. சம்பு:—சங்கரன், திருமால், பிரமன், நாவல், நரி, புல், சூரியன்.

624. சத்தி:—வேல், பலம், உமை, கொடி, குடை, ஓராயுதம்.

625. சமன்:—இயமன், நடுவு.

626. சதி:—தாளவொத்து, உரோகிணி நட்சத்திரம், கற்புடையவள்.

627. சந்தி:—மாலை, மூங்கில், நான்கு தெரு கூடுமிடம்.

628. சரியெனும் பெயர்கை வளையும் வழியுமாம்.

629. சரண மெனும்பெயர் தாளுங் கரமுஞ்
சார்பு மெனவே சாற்றுவர் புலவர்.

630. சடையெனும் பெயர்கோ டீரமும் வேருமாம்.

631. சவியெனும் பெயரே யழகும் பெலமும்
மணிக்கோவை வடமு மொளியும் வழங்கும்.

632. சரமெனும் பெயரே தனிமணி வடமும்
அம்புஞ் சமரும் கொறுக்கச் சியுமாம்.

633. சலாகை யெனும்பெயர் சவளப் பெயரோடு
நாரா சமுநன் மணியு நவின்றனர்.

634. சகுனி யெனும்பெயர் நிமித்தம் பார்ப்பவனும்
பறவையின் பொதுவும் பகரப் பெறுமே.

635. சத்திர மெனும்பெயர் அன்ன சாலையும்
கைவிடாப் படையுங் கவின்பெறு குடையும்
குடையின திரும்பும் வேள்வியும் கூறுவர்.

636. சடமெனும் பெயரே பொய்யுஞ் சரீரமும்
கொடுமையு மெனவே கூறப் பெறுமே.

637. சகுந்த மெனும்பெயர் புள்ளின் பொதுவும்
கழுகு மெனவே கருதுவர் புலவர்.

638. சகுன மெனும்பெயர் புட்பொதுப் பெயரும்
நிமித்தமும் கிழங்கு நிகழ்த்தப் பெறுமே.

639. சடில மெனும்பெயர் சடையு நெருக்கமும்

640. சக்கிரி யெனும்பெயர் தராபதி யரவுடன்
மிக்கசீர் முகுந்தன் செக்கான் குயவனும்.

628. சரி :—கைவளை, வழி.

629. சரணம் :—கால், கை, அடைக்கலம் புகுதல்.

630. சடை :—முடி, வேர்.

631. சவி:—அழகு, வலிமை, மணிக்கோவை, வடம், ஒளி.

632. சரம் :—மணிவடம், கூம்பு, போர், கொறுக்கை.

633. சலாகை :—ஈட்டி, நாராசம், நன்மணி.

634. சகுனி :—சகுனம் பார்ப்பவன், பறவை.

635. சத்திரம் :—அன்னசாலை, கைவிடாப்படை, குடை, இரும்பு, யாகம்.

636. சடம்:—பொய், உடல், கொடுமை.

637. சகுந்தம்:—பறவைப்பொது, கழுகு.

638. சகுனம்:—பறவைப்பொது, நிமித்தம், கிழங்கு.

639. சடிலம் :—சடை, நெருக்கம்.

640. சக்கிரி :—அரசன், பாம்பு, திருமால், செக்கான், குயவன்.

641. சசியெனும் பெயரே மதியும் கற்பூரமும்
இந்திரன் மனைவியும் வெண்மையு மியம்புவர்.

642. சங்க மெனும்பெய ரன்புஞ் சபையும்
வென்றியுங் கவிஞரு மோரெண் பெயரும்
கணைக்கால் சங்கின் பெயருங் கருதுவர்.

643. சண்ட னெனும்பெயர் சூரியன் யமனுடன்
நபுஞ்சகன் பெயரு நவிலப் பெறுமே.

644. சக்கர மெனும்பெயர் சுதரி சனமும்
சக்கர யூகமும் சகதலப் பெயரும்
தேரி னுருளும் பெருமையும் பிறப்பும்
நேமிப் புள்ளுங் கடலும் சகடமும்
வட்டமுந் திகிரி வரையுஞ் செப்புவர்.

645. சத்திய மெனும்பெயர் சபதமு மெய்யுமாம்.

646. சந்த மெனும்பெயர் நிறமும பிராமமுஞ்
சாந்தமு மினம்பெறு கவிதையுஞ் சாற்றுவர்.

647. சலமெனும் பெயரே பொய்யுங் கோபமும்
புள்ளின் பெயரு நடுக்கமும் புகலுவர்.

648. சயமெனும் பெயரே சருக்கரை வென்றியாம்

649. சரப மெனும்பெயர் சிம்புள்வரையாடுமாம்.

650. சராவ மெனும்பெயர் விளக்கின் தகளியும்
சலாகையு மெனவே சாற்றினர் புலவர்

651. சமழ்த்த லெனும்பெய ரழித்தலு நாணமும்.

641. சசி:—சந்திரன், கற்பூரம், இந்திராணி, வெண்மை.

642. சங்கம்:—அன்பு, சபை, வெற்றி, புலவன், ஓரெண், கணைக்கால், சங்கு.

643. சண்டன்:—சூரியன், இயமன், பேடி.

644. சக்கரம் :—சுதர்சனசக்கரம், சக்கரயூகம், பூமி, தேரின் உருளை, பெருமை, பிறப்பு, சக்கரவாகப் பறவை, கடல், சகடம், வட்டம், சக்கரம், மலை.

645. சத்தியம் :—சபதம், உண்மை.

646. சந்தம்:—நிறம், அழகு, சந்தனம், செய்யுள்.

647. சலம் :—பொய், தணியாக் கோபம், ஒரு பறவையின் பெயர், நடுக்கம்.

648. சயம் :—சருக்கரை, வென்றி.

649. சரபம் :—எண்காற்பறவை, மலையாடு.

650. சராவம் :—அகல், சலாகை.

651. சமழ்த்தல் :—வருத்தம், வெட்கம்.

652. சயிந்தவ மெனும்பெயர் கலையும் குதிரையும்
இந்துப் பின்பெயர் தானு மியம்புவர்.

653. சகமெனும் பெயரே புள்ளின் சிறகும்
இலையு மோரி லக்கமு மியம்பப் பெறுமே.

சகர அகர வருக்கம் முற்றும்.

## சகர ஆகார வருக்கம்

654. சான்ரு ரெனும்பெயர் சார்புளெனும் பெயரும்
அருக்கனு மிருக சீரிடமு மாமே.

655. சாதக மெனும்பெயர் பூதமுஞ் சனனமும்
வானம் பாடிப் புள்ளும் வழங்குவர்.

656. சாமி யெனும்பெயர் தலைவனு மரசனும்
குரவனும் வியாழமுங் கூறுவர் புலவர்.

657. சாம மெனும்பெயர் பச்சை நிறமும்
யாமமு மிரவுமோர் வேதமு மியம்புவர்.

658. சானு வெனும்பெயர் மலையின் பக்கமும்
மலையு முழந்தாட் பெயரும் வழங்கும்.

659. சார லெனும்பெயர்மலையின் பக்கமும்
மருத யாழ்த்திறத் தோரோசையும் வழங்கும்.

660. சானகி யெனும்பெயர் சீதையு மூங்கிலும்.

661. சாம்ப லெனப்பெயர் பழம்பூவும் சாம்பரும்
முற்றுத லெனவு மொழியப் பெறுமே.

662. சால மெனும்பெயர் ஆச்சா மரமும்
மதிலுஞ் சாளரப் பெயரும் வலையுமாம்.

652. சயிந்தவம் :—கலே குதிரை, இந்துப்பு.

653. சகம் :—பறவை இறகு, இலே, ஓரிலக்கம்.

---

654. சான்ருர் :—துணே, சூரியன், மிருகசீர்ஷநட்சத்திரம்.

655. சாதகம்:— பூதம், சனனம், வானம்பாடி.

656. சாமி :—தலேவன், அரசன், ஆசான், குரு.

657. சாமம் :—பசுமை, யாமம், இரவு, சாமவேதம்.

658. சானு :—மலேச்சாரல், மலே, முழந்தாள்.

659 சாரல் :—மலேச்சாரல், மருதயாழ்த்திறத்து ஓரோசை.

660. சானகி :—சீதை, மூங்கில்.

661. சாம்பல் :—பழம்பூ, சாம்பர், முற்றுதல்.

662. சாலம் :—ஆச்சாமரம், மதில், சாளரம்.

663. சாலேக மென்னும் பெயர்பூ வரும்பும்
வாதா யனமும் வகுக்கப் பெறுமே.

664. சாதி யெனும்பெயர் பிரம்புந் தேறலும்
தேனும் தேக்குஞ் சிறுசண் பகமும்
சாதியின் விகற்பமுஞ் சாற்றப் பெறுமே.

665. சாறெனும் பெயரே தாழமரக் குலையும்
வேரியு முயர்திரு விழாவு மாமே.

666. சாலி யெனும்பெயர் நெற்பொதுப் பெயரும்
வேரியு மருந்ததிப் பெயரும் விளம்புவர்.

667. சார்ங்க மெனும்பெயர் விற்பொதுப் பெயரும்
மாயோன் சிலையும் வகுத்து ரைத்தனரே.

668. சாப மெனும்பெயர் சபித்தலும் சிலையுமாம்.

669. சாக மெனும்பெயர் சாகினி விகற்பமும்
தேனீப் பெயரும் வெள்ளாடுந் தேக்குமாம்.

670. சாகினி யெனும்பெயர் தழைத்திடு சேம்பொடு
கீரையின் விகற்பமும் கிளத்தப் பெறுமே.

671. சாரங்க மெனும்பெயர் மானும் வண்டுமாம்

672. சாரிகை யெனும்பெயர் சூறையும் சுங்கமும்
நாகண வாய்ப்புட் பெயரு நவிலுவர்.

673. சாய லெனப்பெயர் மெய்ப்பாட் டினழகும்
மேன்மையு மெனவே விளம்பப் பெறுமே.

674. சாகர மெனும்பெயர் துயிலொழிந் திடுதலும்
ஏழ்கடற் பெயரும் இயம்புவர் புலவர்.

663. சாலேகம் :—பூ அரும்பு, சாளரம்.

664. சாதி :—பிரம்பு, கள், தேன், தேக்குமரம், சிறுசண்பகம், சாதி விகற்பம்.

665. சாறு:—தாழமரத்தின்குலை, கள், திருவிழா.

666. சாலி :—நெல்லின் பொதுப்பெயர், கள், அருந்ததி.

667. சார்ங்கம் :—வில்லின் பொதுப்பெயர், திருமாலின் வில்.

668. சாபம் :—சபித்தல், வில்.

669. சாகம் :—கீரைவகை, தேனீ, வெள்ளாடு, தேக்கமரம்.

670. சா்கினி :—சேம்பு, கீரைவகை.

671. சாரங்கம் :—மான், வண்டு.

672. சாரிகை:—சுழற்காற்று, சுங்கம், நாகணவாய்ப்புள்.

673. சாயல்:—மெய்ப்பாட்டினழகு, மேன்மை.

674. சாகரம் :—விழித்தெழுதல், கடல்.

675. சாலை யெனும்பெயர் குதிரைப் பந்தியும்
அறப்புற மடமும் அரசர்தங் கோயிலும்
வழிநடைச் சாலையும் வழங்கப் பெறுமே.

676. சால்பெனும் பெயர்சான் ருண்மையு மியல்புமாம்.

677. சாந்த மெனும்பெயர் சந்தனமும் பொறுமையும்.

678. சாம்பு வெனும்பெயர் பறையொடு பொன்னுமாம்.

679. சார்பெனும் பெயரே சார்தலு மிடமுமாம்.

680. சாத்த னெனும்பெயர் அய்யனும் அருகனும்
புத்தனு மெனவே புகலுவர் புலவர்.

681. சாத மெனும்பெயர் மெய்மையும் பூதமும்.

682. சாலெனும் பெயரே யுழவின் சாலும்
நீர்பெய் பசான மு நிகழ்த்துவர் புலவர்.

சகர ஆகார வருக்கம் முற்றும்.

## சகர இகர வருக்கம்

683. சிவையெனும் பெயரே நவையிலா வுமையுடன்
கொல்ல னுலையும் பெரும் நரியுமாம்.

684. சிதமெனும் பெயரே செயமுறப் படுதலும்
ஞானமும் வெளுப்பும் வான் மீனுமாம்.

685. சிந்தெனும் பெயரே நீருங் கடலும்
நதியுங் குறளும் யாப்பின் முச்சீரும்
ஓர்தேச முமென வுரைத்தனர் புலவர்.

675. சாலை :—குதிரைப்பந்தி, தருமசாலை, அரண்மனை, வழிநடைச்சாலை.

676. சால்பு :—சான்றாண்மை, இயல்பு.

677. சாந்தம் :—சந்தனம், பொறுமை.

678. சாம்பு :—பறை, பொன்.

679. சார்பு :—சார்தல், இடம்.

680. சாத்தன் :—அரிஹரபுத்திரன், அருகன், புத்தன்.

681. சாதம் :—உண்மை, பூதம்.

682. சால் :—உழவின்சால், தண்ணீர் நிரப்பும் பானை.

---

683. சிவை:—உமை, கொல்லனுலை, கிழட்டு நரி.

684. சிதம்:—செயமுறப்படுதல், ஞானம், வெளுப்பு, வால் நட்சத்திரம்.

685. சிந்து:— நீர், கடல், நதி, குள்ளம், முச்சீர், ஒருதேசம்.

686. சிதரெனும் பெயரே சீலைத் துணியுந்
துவலையு முறியும் வண்டுஞ் சொல்லுவர்.

687. சிமைய மெனும்பெயர் சிகரமுங் குடுமியும்.

688. சிலையெனும் பெயரே மலையும் பாறையும்
வில்லு மெனவே விளம்புவர் புலவர்.

689. சினையெனும் பெயரே செழுமரக் கோடுங்
கருவின் பெயரு முட்டையு முறுப்புமாம்.

690. சிலீமுக மெனும்பெயர் அம்பும் வண்டும்
முலைக்கணின் பெயரு மொழியப் பெறுமே.

691. சிமிலி யெனும்பெயர் உறியுங் கீழ்வீடும்
குடுமியு மெனவே கூறுவர் புலவர்.

692. சிக்க மெனும்பெயர் சீப்புங் குடுமியும்
உறியு மெனவே யுரைத்தனர் புலவர்.

693. சிந்துர மெனும்பெயர் திலகமும் வெட்சியும்
செந்நிறப் பொருள்களுஞ் செங்குடைப் பெயரும்
மதகரிப் பெயர்புளி மாவும் வழங்கும்.

694. சிரக மெனும்பெயர் கரகமும் வட்டிலுஞ்
சென்னியிற் கோடுஞ் செப்பப் பெறுமே.

695. சிதலை யெனும்பெயர் செல்லொடு துணியுமாம்.

696. சிகண்டி யெனும்பெயர் பாலையாழ்த் திறத்தின்
ஓசையும் அலியு மயிலு மாமே.

697. சில்லி யெனப்பெயர் சிள்வீடும் வட்டமும்
தேருரு ளுஞ்சிறு கீரையும் செப்புவர்.

686. சிதர்:—சீலைத்துணி, மழைத்துவலை, உறி, வண்டு.

687. சிமையம்:—மலையுச்சி, உச்சி.

688. சிலை:—மலை, பாறை, வில்.

689. சினை:—மரக்கிளை, கர்ப்பம், முட்டை, உறுப்பு.

690. சிலீமுகம்:—அம்பு, வண்டு, முலைக்கண்.

691. சிமிலி:—உறி, குடுமி, சிள்வண்டு.

692. சிக்கம்:—சீப்பு, குடுமி, உறி.

693. சிந்துரம்:—திலகம், வெட்சி, சிவப்புப்பொருள்கள், செங்குடை, யானை, புளியமரம்.

694. சிரகம்:—கரகம், வட்டில், தலைக்கவசம்.

695. சிதலை:—கறையான், துணி.

696. சிகண்டி:—பாலையாழ்த்திறத்து ஓரோசை, அலி, மயில்.

697. சில்லி:—சிள்வண்டு, வட்டம், தேருருள், சிறுகீரை.

698. சிறை யெனும் பெயரே புள்ளி னிறகும்
காவலு மோர்பா லிடமும் கரையுமாம்.

699. சிவப்பெனும் பெயரே செம்மையும் சினமும்
சினக்குறிப் புமெனச் செப்புவர் புலவர்.

700. சில்லை யெனும்பெயர் பகண்டைப் புள்ளும்
சிள்வீடுங் கிலுகிலுப் பையுஞ் செப்புவர்.

701. சிகரி யெனும்பெயர் மலையு மெலியும்
கருநா ரையுங் கோபுரமுங் கருதுவர்.

702. சித்த மெனும்பெயர் திடமும் உளமுமாம்.

703. சித்திர னெனும் பெயர் சித்திர காரனுந்
தச்சனு மெனவே சாற்றப் பெறுமே.

704. சிகியெனும் பெயரே மயிலும் கேதுவும்
நெருப்பு நூபுரமு நிகழ்த்தப் பெறுமே.

705. சித்திர மெனும்பெயர் சித்திர கவிதையும்
மெய்போற் பொய்யை யுரைத்தலு மழகும்
துணித்த பலபொரு ளுமதி சயமுஞ்
செய்சொல் வடிவுங் காடுமா மணக்குமாம்

706. சித்திர பானு வெனும்பெயர் நெருப்புஞ்
சூரியன் பெயரு மோராண்டுஞ் சொல்லுவர்.

707. சிலம்பெனும் பெயரே மலையு மோசையும்
பரிபுரப் பெயரும் பகர்ந்தனர் புலவர்.

708. சிகர மெனும்பெயர் திரையுந் திவலையு
மலையி னுச்சியும் சென்னியுங்
கவரி மாவின் பெயருங் கருதுவர்.

698. சிறை:—பறவையின் இறகு, காவல், இடம், கரை.

699. சிவப்பு:—செம்மை, கோபம், கோபக்குறிப்பு.

700. சில்லை:—பகண்டைப்பறவை, சிள்வண்டு, கிலுகிலுப்பை.

701. சிகரி:—மலை, எலி, கருநாரை, கோபுரம்.

702. சித்தம்:— திடம், உளம்.

703. சித்திரன்:—சித்திரகாரன், தச்சன்.

704. சிகி:—மயில், கேது, நெருப்பு, நூபுரம்.

705. சித்திரம்:—சித்திரகவி, மெய்போல் பொய்கூறல், அழகு, பலபொருள், அதிசயம், சித்திரம், காடு, ஆமணக்கு.

706. சித்திரபானு:—நெருப்பு, சூரியன், ஓராண்டு.

707. சிலம்பு:—மலை, ஓசை, பரிபுரம்.

708. சிகரம்:—அலை, துளி, மலையினுச்சி, தலை, கவரிமான்.

709. சிகழிகை யெனும்பெயர் மயிர்முடிப் பெயரும்
மாலையின் பெயரும் வழங்கப் பெறுமே.

710. சிதட னெனும்பெயர் குருடனு மூடனும்

711. சிரமெனும் பெயர்நெடுங் காலமுஞ் சென்னியும்.

712. சிவமெனும் பெயரே முத்தியும் பெருமையும்
குறுணியின் பெயருங் கூறப் பெறுமே.

713. சித்தெனும் பெயரே செயமும் ஞானமுமாம்.

சகர இகர வருக்கம் முற்றும்.

## சகர ஈகார வருக்கம்

714. சீதம் எனும்பெயர் மேகமும் பாலும்
குளிர்ச்சியும் புனலுங் கூறுவர் புலவர்.

715. சீவனெனும்பெயர் வியாழமு முயிரும்.

716. சீரு ளெனும்பெயர் செல்வமுஞ் செம்பும்
ஈயமு மெனவே இயம்பப் பெறுமே.

717. சீவனி யெனும்பெயர் செவ்வழி யாழ்த்திறத்
தோரிசைப் பெயரு முயிர்தரு மருந்துமாம்.

718. சீரெனும் பெயரே செல்வமுங் கீர்த்தியும்
பாரமு மழகும் பகர்ந்திடு சீர்மையும்
தாள வொத்துந் தடியுங் கரத்தண்டுஞ்
சொற்சீர் எனவுஞ் சொல்லுவர் புலவர்.

719. சீப்பெனும் பெயரே கதவின் ருழும்
மயிர்வார் சீப்பும் வழங்கப் பெறுமே.

709. சிகழிகை:—மயிர்முடி, மாலை.

710. சிதடன்:—குருடன், மூடன்.

711. சிரம்:—நெடுங்காலம், தலை.

712. சிவம்:—மோட்சம், பெருமை, குறுணி.

713. சித்து:—வெற்றி, ஞானம்.

---

714. சீதம்:—மேகம், பால், குளிர்ச்சி, நீர்.

715. சீவன்:—பிரகஸ்பதி, உயிர்.

716. சீருள்:—செல்வம், செம்பு, ஈயம்.

717. சீவனி:—செவ்வழி யாழ்த்திறத்தின் ஓரோசை, உயிர் தரும் மருந்து.

718. சீர்:—செல்வம், மிகுபுகழ், கனம், அழகு, சிறப்பு, தாளவொத்து, தடி, கரத்தண்டு, சொற்சீர்.

719. சீப்பு:—கதவின் தாழ், மயிர்சீவும்சீப்பு.

720. சீகர மெனும்பெயர் திரையுந் திவலையும்
கவரி மாவுங் கருதுவர் புலவர்.

721. சீல மெனும்பெய ரொழுக்க முங் குணமும்
தருமமு மெனவே சாற்றுவர் புலவர்.

722. சீதை யெனும்பெயர் உழுபடைச் சாலும்
இராமன் றேவியு மியம்பப்பெறுமே.

சகர ஈகார வருக்கம் முற்றும்.

## சகர உகர வருக்கம்

723. சுந்தரி யெனும்பெயர் உமையுந் துர்க்கையும்
சூரனு மெனவே சொல்லுவர் புலவர்.

724. சுக்கை யெனும்பெ யர்வான் மீனெடு
மாலையு மெனவே வகுத்தனர் புலவர்.

725. சுசியெனும் பெயரே கோடைக் காலமும்
சுத்தமுங் கனலின் பெயருஞ் சொல்லுவர்.

726. சுதையெனும் பெயரே சுண்ணச் சாந்தும்
மறிகட லமுதமும் புதல்வியும் வழங்குவர்.

727. சுடரெனும் பெயரே சூரியன் மதிகனல்
விளக்கு மொளியும் விளம்பப் பெறுமே.

728. சுவவெனும் பெயர்சுவர்க் கத்தின் பெயரும்
புள்ளின் மூக்குஞ் சுண்டனும் புகலுவர்.

729. சுண்ட னெனும்பெயர் சூரனுஞ் சதையமும்.

720. சீகரம் :—அலை, மழைத்துளி, கவரிமான்.

721. சீலம் :—ஒழுக்கம், குணம், தருமம்.

722. சீதை :—கலப்பை, இராமனது தர்ம பத்னி.

---

723. சுந்தரி :—உமை, துர்க்கை, மூஞ்சூறு.

724. சுக்கை:—நட்சத்திரம், மாலை.

725. சுசி:—கோடைக்காலம், சுத்தம், நெருப்பு.

726. சுதை:—சுண்ணச் சாந்து, அமிர்தம், மகள்.

727. சுடர்:—சூரியன், சந்திரன், நெருப்பு,
விளக்கு, ஒளி.

728. சுவவு:—தேவலோகம், பறவைமூக்கு, மூஞ்சூறு

729. சுண்டன்:—மூஞ்சூறு, சதயநாள்.

730. சும்மை யெனும்பெயர் ஊர்ப்பொதுப் பெயரும்
நென்முதற் போரும் நிறைந்த நீர்நாடுஞ்
சுமையொடு சத்த வொலியுஞ் சொல்லுவர்.

731. சுவலெனும் பெயரே தோளின் மேலும்
மேடுங் குரகதக் குசையின் மயிரும்
பிடர்த்தலைப் பெயரும் பேசப் பெறுமே.

732. சுருங்கை யெனும்பெயர் கரந்த கற்படையும்
நுழைவா ய்தலுமென நுவலப் பெறுமே.

733. சுரிய லெனும்பெயர் ஆண்பான் மயிரும்
பெண்பால் மயிரும் பேசுவர் புலவர்.

734. சுரையெனும் பெயரே யுட்டுளை வடிவும்
ஆவின் முலையும் நறவும் அலாபுமாம்.

735. சுடிகை யெனும்பெயர் சுட்டியும் குடமும்
உச்சியு மெனவே மொழியப் பெறுமே.

736. சுரிகை யெனும்பெய ருடைவா ளுடனே
மெய்புகு கருவியும் விளம்புவர் புலவர்.

737. சுகமெனும் பெயரே யின்பமுங் கிளியுமாம்.

738. சுரர்குரு வெனும்பெயர் தேவர் மந்திரியும்
இந்திரன் பெயரும் இயம்பப் பெறுமே.

739. சுவேத மெனும்பெயர் வெண்மையும் வெயர்வுமாம்.

740. சுவாமி யெனும்பெயர் முருகனும் வியாழமும்
குருவுந் தலைவனுங் கூறுவர் புலவர்.

730. சும்மை:—ஊர்ப்பொது, நெற்போர், நீர்நாடு, சுமை, சத்தம்.

731. சுவல்:—தோளின்மேல், மேடு, குதிரையின் பிடரிமயிர், பிடரி.

732. சுருங்கை:—கோட்டையில் கள்ளவழி, நுழைவாயில்.

733. சுரியல்:—ஆண்மயிர், பெண்மயிர்.

734. சுரை:—உட்டொளை, பசுவின்முலை, கள், சுரைக்கொடி.

735. சுடிகை:—நெற்றிச்சுட்டி, கிரீடம், உச்சி.

736. சுரிகை:—உடைவாள், கவசம்.

737. சுகம்:—இன்பம், கிளி.

738. சுரர்குரு:—பிரகஸ்பதி, இந்திரன்.

739. சுவேதம்:—வெண்மை, வியர்வை.

740. சுவாமி:—முருகன், பிரகஸ்பதி, ஆசிரியன், தலைவன்.

741. சுருதி யெனும்பெயர் வேதமும் ஒலியுமாம்.

742. சுரமெனும் பெயரே வழியுங் காடும்
அருநெறிப் பெயரும் பாலை நிலமுமாம்.

சகர உகர வருக்கம் முற்றும்.

## சகர ஊகார வருக்கம்

743. சூர னெனும்பெயர் சூரியன் பெயரும்
தீரனு மருகனு நாயையுஞ் செப்புவர்

744. சூரெனும் பெயரே தெய்வமு நோயும்
வஞ்சமு மஞ்சா மையுமே வழங்கும்.

745. சூழி யெனும்பெயர் கரிமுக படாமும்
வாவியு மெனவே வகுத்துரைத் தனரே.

746. சூதக மெனும்பெயர் பிறப்பின் பெயரும்
ஆசூ சப்பெயர் தானு மாமே.

747. சூத்திர மெனும்பெயர் நூற்பா வகவலும்
நூற்கும் வெண்ணூலும் நுவல்பல் பொறியுமாம்.

748. சூத னெனும்பெயர் சூதாடு பவனும்
சூது சேருளத்தனும் தேர்ப்பா கனுமாம்.

749. சூத மெனும்பெயர் பரதா ரத்தொடு
மாமர மெனவும் வழங்குவர் புலவர்.

750. சூழலெனும்பெயர் விசாரமு மிடமுமாம்.

சகர ஊகார வருக்கம் முற்றும்.

741. சுருதி :—வேதம், ஒலி.

742. சுரம் :—வழி, காடு, அரியவழி, பாலைநிலம்.

---

743. சூரன் :—சூரியன், தீரன், அருகன், நாய்.

744. சூர் :—தெய்வம், நோய், வஞ்சம், அஞ்சாமை.

745. சூழி :—யானைமுகபடாம், குளம்.

746. சூதகம் :—பிறப்பு, அசுத்தம், (தீட்டு).

747. சூத்திரம் :—இலக்கணசூத்திரம், பஞ்சுநூல், இயந்திரம்.

748. சூதன் :—சூதாடுபவன், கபடமனத்தன், தேர்ப்பாகன்.

749. சூதம் :—பிறர்மனைவி, மாமரம்.

750. சூழல் :—ஆராய்தல், இடம்.

751. செவ்வி யெனும்பெயர் பொழுதும் பருவமும்

752. செல்லெனும் பெயரே யிடியு மேகமும்
முன்னிலே யேவலுஞ் சிதலு மொழிந்தனர்.

753. செந்தெனும் பெயரே சீவனுஞ் சிவப்பும்
ஓரியு மணுவும் நரகத்தி லொன்றுமாம்.

754. செப்ப மெனும்பெயர் நடுநிலேப் பெயரும்
தெருவுஞ் செவ்வையு நெஞ்சமுஞ் செப்புவர்.

755. செம்புல மெனும்பெயர் வன்பாலே நிலமும்
பொருக ளமுமெனப் புகன்றனர் புலவர்.

756. செய்ய லெனும்பெயர் சேறு மொழுக்கமும்
காவலு மெனவே கருதப் பெறுமே.

757. செம்ம லெனும்பெயர் சீவனும் செயினனும்
தலேவனுஞ் சிறுவனும் வீரனும் பெருமையும்
பழம்பூ வுமெனப் பகர்ந்தனர் புலவர்.

758. செவிலி யெனும்பெயர் முன்பிறந் தாளும்
வளர்த்த கைத்தாயும் வகுத்தனர் புலவர்.

759. செழுமை யெனும்பெயர் வளமையும் கொழுப்பும்
வனப்பு மாட்சிமையும் வழங்குவர் புலவர்.

760. செடியெனும் பெயரே யொளியுஞ் செறிவும்
பாவமுங் குணமின் மைப்பெயரும் பகர்ந்தனர்.

761. செத்தெனும் பெயரே செம்மையு முவமையும்
அசைச்சொலு முறுப்புங் கருத்துஞ் சந்தேகமும்.

762. செட்டி யெனும் பெயர் முருகன் பெயரும்
வணிகனு மெனவே வழங்கப் பெறுமே.

751. செவ்வி:—பொழுது, பருவம்.

752. செல்:—இடி, மேகம், முன்னிலையேவல், கறையான்.

753. செந்து:—உயிர், சிவப்பு, நரி, அணு, ஒருநரகம்.

754. செப்பம்:—நடுநிலை, தெரு, செம்மை, மார்பு.

755. செம்புலம்:—பாலைநிலம், போர்க்களம்.

756. செய்யல் :—சேறு, ஒழுக்கம், காவல்.

757. செம்மல் :—உயிர், அருகதேவன், தலைவன், புதல்வன், வீரன், பெருமை, பழம்பூ.

758. செவிலி :—அக்காள், வளர்த்ததாய்.

759. செழுமை :—வளமை, கொழுப்பு, அழகு, மாட்சிமை.

760. செடி :—ஒளி, செறிவு, பாவம், குணமின்மை.

761. செத்து :—செம்மை, உவமை, அசைச்சொல், உறுப்பு, கருத்து, சந்தேகம்.

762. செட்டி :—முருகன், வியாபாரி.

763. செச்சை யெனும்பெயர் வெள்ளாட் டேறுடு
வெட்சி செஞ்சாந்தும் விளம்புவர் புலவர்.

764. செவியெனும் பெயரே கேள்வியுங் காதுமாம்.

765. செம்மை யெனும்பெயர் சிவப்புஞ் செவ்வையும்.

766. செப்பெனும் பெயர்பணிச் செப்புஞ் செப்பலும்.

767. செய்யெனும் பெயரே செய்தொழிற் பெயரும்
ஒழுக்கமு மெனவே யுரைக்கப் பெறுமே.

768. செயிரெனும் பெயரே சினமும் குற்றமும்.

சகர எகர வருக்கம் முற்றும்.

## சகர ஏகார வருக்கம்

769. சேயெனும் பெயரே சிவப்புஞ் செவ்வேளும்
செவ்வாய்க் கிரகமும் சிறுவனு நீளமும்
தூரமு மிளமையுஞ் சொல்லுவர் புலவர்.

770. சேடி யெனும்பெயர் விஞ்சையர் நகரமும்
சிலதியு மெனவே செப்பப் பெறுமே.

771. சேக்கை யெனும்பெயர் முலையும் சயனமும்
விலங்கு துயிலிடமும் விளம்புவர் புலவர்.

772. சேட னெனும்பெயர் அனந்தனும் பாங்கனும்
இளையோன் பெயருட னடிமையு மியம்புவர்.

773. சேணெனும் பெயரே யகலமு நீளமும்
உயரமு மெனவே யுரைக்கப் பெறுமே.

763. செச்சை :—வெள்ளாட்டுக்கடா, வெட்சி, சாந்தின்குழம்பு.

764. செவி :—கேள்வி, காது.

765. செம்மை :—சிவப்பு, செவ்வை.

766. செப்பு :—ஆபரணங்கள் வைக்கும் செப்பு, சொல்.

767. செய் :—செய்தொழில், ஒழுக்கம்.

768. செயிர் :—சினம், குற்றம்,

---

769. சேய் :—சிவப்பு, முருகன், அங்காரகன், புதல்வன், நீளம், தூரம், இளமை.

770. சேடி :—வித்தியாதரர் உலகு, தோழி.

771. சேக்கை :—முலை, படுக்கை, விலங்குதூங்குமிடம்.

772. சேடன்:—அனந்தன் என்னும் பாம்பு, தோழன், இளைஞன், அடிமை.

773. சேண்:—அகலம், நீளம், உயரம்.

774. சேடெனும் பெயரே சிறப்பு நன்மையும்
அழகுந் திரட்சியு மிளமையு மாமே.

775. சேதக மெனும்பெயர் சேறு செந்நிறமுமாம்.

776. சேவ லெனும்பெயர் புள்ளி ஞண்பாலும்
காவலுஞ் சேறுஞ் சாவலும் கருதுவர்.

777. சேவக மெனும்பெயர் யானை துயிலிடமும்
வீரமு மெனவே விளம்புவர் புலவர்.

778. சேதார மெனப்பெயர் தேமாவும் வெட்சியும்
பொன்னின் பெயரும் புகன்றனர் புலவர்.

## சகர ஐகார வருக்கம்

779. சைவ மெனும்பெயர் புராணத்திலொன்றும்
சிவசம யத்தின் விகற்பமும் செப்புவர்.

## சகர ஒகார வருக்கம்

780. சொல்லெனும் பெயரே கீர்த்தியும் வார்த்தையும்
நெல்லும் பல்கலைப் பெயரு நிகழ்த்துவர்.

781. சொர்க்க மெனும்பெயர் சுவர்க்கமு முலையுமாம்.

## சகர ஓகார வருக்கம்

782. சோதி யெனும்பெய ரொருநாள் மீனும்
அருகனும் அரனும் ஆதித்தனும் விளக்கும்
தாரா கணமும் விளம்புவர்.

774. சேடு:—சிறப்பு, நன்மை, அழகு, திரட்சி, இளமை.

775. சேதகம்:—சேறு, செந்நிறம்.

776. சேவல்:—பறவைகளின் ஆண், காவல், சேறு, ஆண்கோழி.

777. சேவகம்:—யானை தூங்குமிடம், வீரம்.

778. சேதாரம்:—தேமா, வெட்சி, பொன்.

779. சைவம்:—18 புராணங்களில் ஒன்று, சிவசமயம்.

780. சொல்:—கீர்த்தி, வார்த்தை, நெல், பலகலை.

781. சொர்க்கம்:—சுவர்க்கம், மூலை.

782. சோதி:—சுவாதி நட்சத்திரம், சிவன், சூரியன், தீபம், நட்சத்திரக் கூட்டம்.

## சகர ஔகார வருக்கம்

783. சௌரி யெனும்பெயர் சனியுங் கன்னனும்
இயமனுங் கண்ணனும் யமுனை நதியுமாம்.

784. சௌரிய மெனும்பெயர் வீரமும் களவுமாம்.

# 4 வது ஞகர வருக்கத் தொகுதி

785. ஞமலி யெனும்பெயர் நாயும் மயிலும்
கள்ளு மெனவே கருதப் பெறுமே.

## ஞகர ஆகார வருக்கம்

786. ஞாளி யெனும்பெயர் நறவு நாயுமாம்.

787. ஞாட்பெனும் பெயரே பாரமும் கூட்டமும்
செருவு மெனவே செப்புவர் புலவர்.

788, ஞான மெனும்பெயர் கல்வியு மறிவுந்
தத்துவ நூலுஞ் சாற்றப் பெறுமே.

789. ஞாங்க ரெனும்பெயர் பக்கமு மேலும்
வேலு மெனவே விளம்பப் பெறுமே.

ஞகர ஆகார வருக்கம் முற்றும்.

## ஞகர எகர வருக்கம்

790. ஞெள்ள லெனும்பெயர் தெருவு மேன்மையும்
பள்ளமு மெனவே பகர்ந்தனர் புலவர்.

791. ஞெரே லெனும்பெயர் விரைவு மொலியுமாம்.

783. சௌரி:—சனி, கன்னன், இயமன், கண்ணன், யமுனைநதி.

784. சௌரியம்:—வீரம், களவு.

785. ஞமலி :—நாய், மயில், கள்.

786. ஞாளி :—கள், நாய்.

787. ஞாட்பு :—பாரம், கூட்டம், போர்.

788. ஞானம் :—கல்வி, அறிவு, தத்துவநூல்.

789. ஞாங்கர் :—பக்கம், மேல், வேலாயுதம்.

---

790. ஞெள்ளல்:—வீதி, மேன்மை, பள்ளம்.

791. ஞெரேல்:—வேகம், சத்தம்.

792. ஞெமிர்த லெனும்பெயர் முறிதலும், பரத்தலும்.

793. ஞெகிழி யெனும்பெயர் நெருப்புறு விறகும்
தீயுடன் அனற்பொறி சிலம்பு மாமே.

ஞகர எகர வருக்கம் முற்றும்

## ஞகர ஒகர வருக்கம்

794. ஞொள்க லெனும்பெயர் நொய்படு வனவும்
இளைத்தலு மச்சக் குறிப்பொடு சோம்புமாம்.

ஞகர ஒகர வருக்கம் முற்றும்

ஞகர வருக்கத் தொகுதி முற்றும்

# 5வது தகர வருக்கத் தொகுதி

## தகர அகர வருக்கம்

795. தரணி யெனும்பெயர் தருகதிர் இரவியும்
நிலமுஞ் சயிலமு நிகழ்த்துவர் புலவர்.

796. தமமெனும் பெயரே ராகுவு மிருளுமாம்.

797. தண்டெனும் பெயரே தடியு மிதுனமுஞ்
சிவிகையின் பெயரும் செருமிகு தானையும்
வரம்பும் வீணையுங் குழாயும் வழங்குவர்.

798. தழலெனும் பெயரே கிளிகடி கருவியும்
நெருப்பு மெனவே நிகழ்த்துவர் புலவர்.

799. தண்ணடை யெனும்பெயர் மருத நிலவூரும்
நாடு மெனவே நவிலப் பெறுமே.

792. ஞெமிர்தல்:—முறிதல், பரத்தல்.

793. ஞெகிழி:—தீயுறுவிறகு, தீப்பொறி, சிலம்பு.

---

794. ஞொள்கல்:—சோம்பல், இளைத்தல், அச்சக்குறிப்பு.

---

795. தரணி:—சூரியன், பூமி, மலை.

796. தமம்:—ராகு, இருட்டு,

797. தண்டு:—தடி, மிதுனராசி, பல்லக்கு, சேனை, எல்லை, வீணை, குழாய்.

798. தழல்:—கிளியோட்டும் கருவி, நெருப்பு.

799. தண்ணடை:—மருத நிலத்து ஊர், நாடு.

800. தண்ட மெனும்பெயர் தண்டா யுதமும்
சேனையும் யானை செல்வழியுந் தெண்டித்தலும்.

801. தடமெனும் பெயரே மலையும் பொய்கையும்
பெருமையு மகலமு மலையடி வழியும்
வளைவுங் குளக்கரைப் பெயரும் வழங்குவர்.

802. தடியெனும் பெயரே தனுவு முலக்கையும்
தசையு முடும்புந் தண்டா யுதமும்
வயலொடு மின்னும் வகுத்தனர் புலவர்.

803. தனஞ்செய னெனும்பெயர் சவ்விய சாசியும்
மெய்யின் மாருத விகற்பத்தி ளென்றும்
நெருப்பு மெனவே நிகழ்த்துவர் புலவர்.

804. தளிம மெனும்பெயர் சயனமு மெத்தையும்
அழகின் பெயரு மாகு மென்ப.

805. தத்தை யெனும்பெயர் முன்பிறந் தாளும்
கிளியு மெனவே கிளத்துவர் புலவர்.

806. தனுவெனும் பெயரே சடமும் சிறுமையும்
வில்லின் பெயரு மோரிராசியும் விளம்புவர்.

807. தளையெனும் பெயரே தமிழ்நூற் பாதமு
மலர்முகை முறுக்கு மாண்பான் மயிரும்
தொடரொடு சிலம்புந் தொடையலுஞ்
[சொல்லுவர்.

808. தனமெனும் பெயர்சந் தனமும் பொன்னும்
முத்திறப் பொருளு முலையுமான் கன்றுமாம்.

809. தவிசெனும் பெயரே மெத்தையுந் தடுக்கும்
பலகையும் பீடமும் பகர்ந்தனர் புலவர்.

800. தண்டம்:—தண்டாயுதம், சேனை, யானை செல்லும்வழி, தண்டித்தல்.

801. தடம்:— மலை, பொய்கை, பெருமை, அகலம், மலைவழி, வளைவு, குளக்கரை.

802. தடி:—வில், உலக்கை, ஊன், உடம்பு, தண்டாயுதம், வயல், மின்னல்.

803. தனஞ்செயன்:—அருச்சுனன், தசவாயுவிலொன்று, தீ.

804. தளிமம் :—படுக்கை, மெத்தை, அழகு.

805. தத்தை :—அக்காள், கிளி.

806. தனு :—உடல், சிறுமை, வில், தனுர்ராசி.

807. தளை :—அறுவகைச் செய்யுளுறுப்புக்களில் ஒன்று, மலர்முகை, ஆண்மயிர், காற்சிலம்பு, தொடர்பு, மாலை.

808 தனம் :—சந்தனம் பொன், முப்பொருள், முலை, பசுவின்கன்று.

809. தவிசு :—மெத்தை, தடுக்கு, பலகை, பீடம்.

810. தளமெனும் பெயரே தாழியும் சாந்தமும்
படையும் பூவிதழ்ப் பெயரும் பகர்ந்தனர்.

811. தண்ண மெனும்பெயர் தரித்தடா மழுவும்
ஒருகட் பறையு முரைக்கப் பெறுமே.

812. தட்டை யெனும்பெயர் கரடிகைப் பறையும்
கிளிகடி கருவியுந் தினைத்தாளு முண்டமும்
மூங்கிலு மெனவே மொழிந்தனர் புலவர்.

813. தம்ப மெனும்பெயர் மெய்புகு கருவியும்
கம்பமும் பற்றுக் கோடுங் கருதுவர்.

814. தண்மை யெனும்பெயர் தாழ்வும் எளிமையும்
குளிர்ச்சியும் புலவோர் கூறப்பெறுமே.

815. தகடெனும் பெயரே ஐமை வடிவும்
இலையு மெனவே யியம்புவர் புலவர்.

816. தராவெனும் பெயரே சங்கும் மதுகமும்.

817. தரும ராச னெனும்பெயர் யமனும்
அருகனும் புத்தனும் பாண்டு மைந்தனுமாம்.

818. தட்டெனும் பெயரே நடுவட் டேரும்
திரிகையும் பரிசையும் பகுத்தலும் தடுத்தலும்
வட்டமும் பூத்தட்டு முதலவும் வழங்கும்.

819. தன்மை யெனும்பெயர் தன்மை யினிடமும்
இயல்பு மெனவே இயம்புவர் புலவர்.

820. தளியெனும் பெயரே துளியும் கோயிலும்
தள நடத் தியசமர்த் தலமும் புகலுவர்.

821. தகையெனும் பெயரே பெருமையு மழகும்
அன்பும் பண்பு மியல்பு மாமே.

810. தளம் :—சாடி, சாந்து, படை, பூவிதழ்.

811. தண்ணம் :—மழுவாயுதம், ஒருகட்பறை.

812. தட்டை : ஒருவகைப்பறை, கிளியோட்டும் கருவி, தினைத்தாள், மொட்டை, மூங்கில்.

813. தம்பம் :—கவசம், தூண், பற்றுக்கோடு.

814. தண்மை :—தாழ்வு, எளிமை, குளிர்ச்சி.

815. தகடு :—தகட்டு வடிவு, இலை.

816. தரா:—சங்கு, இலுப்பைமரம்.

817. தருமராசன் :—இயமன், அருகன், புத்தன், தருமபுத்திரன்.

818. தட்டு:—தேர்நடு, திரிகை, கேடகம், பகுத்தல், தடுத்தல், வட்டம், பூந்தட்டு.

819. தன்மை:—தன்மையிடம், இயல்பு.

820. தளி:—துளி, கோயில், போர்க்களம்.

821. தகை :—பெருமை, அழகு, அன்பு, பண்பு, இயல்பு.

822. தபுத லெனும்பெயர் சாதலும் கேடுமாம்.

823. தமிழெனும் பெயரே தமிழின் விகற்பமும்
நீர்மையு மினிமையு நிகழ்த்தினர் புலவர்.

824. தன்ன மெனும்பெயர் சிறுமையான் கன்றுமாம்

825. தபன னெனும்பெயர் தழலு மருக்கனும்.

826. தலமெனும் பெயரே பச்சை நிறமும்
இலையும் புவியும் இயம்புவர் புலவர்.

827. தசும்பெனும் பெயரே குடமு மிடாவுமாம்.

828. தட்ட லென்பெய ரொத்தறுத்த லினுடனே
தடுத்தலின் பெயருஞ் சாற்றப் பெறுமே.

829. தலையெனும் பெயரே இடமும் சென்னியும்
விசும்பு முதன்மையும் விளம்பப் பெறுமே.

830. தவவெனும் பெயரே மிகுதியும் குறைவுமாம்.

831. தந்தெனும் பெயரே சாத்திரப் பெயரும்
நூலின் பெயரு நுவலப் பெருமே

832. தகைமை யெனும்பெயர் அழகும் பெருமையும்
இயல்பு மெனவே யியம்பப் பெறுமே.

833. தனியெனும் பெயரொப் பின்மைப் பெயருந்
தனிமையின் பெயருஞ் சாற்றப் பெறுமே.

834. தன்னை யெனும்பெயர் முன்பிறந் தானும்
அன்னையும் செவிலியு மாகு மென்ப.

தகர அகர வருக்கம் முற்றும்.

822. தபுதல் :—சாதல், கேடு.

823. தமிழ் :—தமிழின் விகற்பம், நீர்மை, இனிமை.

824. தன்னம் :—சிறுமை, பசுவின்கன்று.

825. தபனன் :—நெருப்பு, சூரியன்.

826. தலம் :—பச்சைநிறம், இலை, பூமி.

827. தசும்பு :—குடம், இறைகூடை.

828. தட்டல் :—ஒத்தறுத்தல், தடுத்தல்.

829. தலை :—இடம், தலை, ஆகாயம், முதன்மை.

830. தவ :—மிகுதி, குறைவு.

831. தந்து :—சாத்திரம், நூல்.

832. தகைமை :—அழகு, பெருமை, இயல்பு.

833. தனி :—ஒப்பின்மை, தனிமை.

834. தன்னை :—முன்பிறந்தவன், தாய், செவிலி.

---

## தகர ஆகார வருக்கம்

835. தாணு வெனும்பெயர் சங்கரன் பெயரும்
தூணு மலையு நிலையுஞ் சொல்லிய
ஆவு ரிஞ்சுதறிப் பெயரு மாமே.

836. தாதி யெனும்பெயர் அடிமையும் பரணியும்.

837. தால மெனும்பெயர் கூந்தற் கமுகொடு
ஞாலமும் பனையு முண்கலமு நாவுமாம்.

838. தாரை யெனும்பெயர் வழியும் விழியும்
ஒழுங்குஞ் சின்னமு முரைக்கப் பெறுமே.

839. தாம மெனும்பெயர் தாரும் பூவும்
மணிவடப் பெயரு நகரமுங் கயிறும்
ஒளியுங் கொன்றையு மிருப்பிடப் பொதுவுமாம்.

840. தார மெனும்பெயர் தராவும் நாவும்
வல்லிசைப் பெயரும் வாழ்க்கைத் துணைவியும்
அரும்பண்டப் பெயரும் யாழ்நரம் பிலொன்றும்
வெள்ளியு மெனவே விளம்பப் பெறுமே.

841. தானை யெனும்பெயர் சேனையுந் துகிலும்
ஆயுதப் பொதுவு மாகு மென்ப.

842. தாரெனும் பெயர்பூந் தாமமு மலரும்
மாவினுக் கணியுங் கிண்கிணி மாலையும்
ஒழுங்கோடு தூசிப் படையையு முரைப்பர்.

843. தாழெனும் பெயரே கதவிடு தாழும்
பதமு முயற்சியும் பகரப் பெறுமே.

844. தாறெனும் பெயர்மரக் குலையு மளவும்
விற்குதைப் பெயரு முட்கோலும் விளம்புவர்.

835. தாணு :—சங்கரன், தூண், மலை, நிலை, குற்றி.

836. தாதி :—அடிமை, பரணி நட்சத்திரம்.

837. தாலம்:—கூந்தற்கமுகு, பூமி, பனைமரம், உண்கலம், நாக்கு.

838. தாரை :—வழி, விழி, ஒழுங்கு, அடையாளம்.

839. தாமம்:—மாலை, பூ, மணிவடம், நகரம், கயிறு, ஒளி, கொன்றைமரம், இருப்பிடம்.

840. தாரம்:—தரா (ஓர் உலோகம்), நாக்கு, வல்லிசை, மனைவி, அரும்பண்டம், வீணையின் ஒரு நரம்பு, வெள்ளி.

841. தானை:—சேனை, ஆடை, ஆயுதப்பொது.

842. தார்:—பூமாலை, பூ, கிண்கிணிமாலை, ஒழுங்கு, கொடிப்படை.

843. தாழ்: —தாழ்ப்பாள், பாதம், முயற்சி.

844. தாறு:—வாழை முதலியவற்றின்குலை, அளவு, அம்பின் அடிப்பாகம், முட்கோல்.

845. தாதெனும் பெயரே யெழுவகைத் தாதும்
பொன்முத லேழும் புவிமுத லைந்தும்
காவிக் கல்லுங் கருதப் பெறுமே.

846. தாண்டவ மெனும்பெயர் தாவலும் கூத்துமாம்.

847. தான மெனுபெயர் தருமக் கொடையும்
பல்வகை யுதவியு மதமு நீராடலுஞ்
சுவர்க்கமும் புலவோர் சொல்லப் பெறுமே.

848. தாழை யெனும்பெயர் நாளிகேரமும்
கைதையின் பெயருங் கருதப் பெறுமே.

849. தாவெனும் பெயரே பகையும் கெடுதலும்
பெலமும் வருத்தமும் தாண்டுதற் பெயருமாம்.

850. தாம்பெனும் பெயரே தாமணிக் கயிறுமாம்.

851. தாபர மெனும்பெயர் மரமுடன் மலைபோல்
நிற்பன யாவையு முடம்பு நிகழ்த்துவர்.

852. தாசி யெனும்பெய ரியம னுளும்
தொழும்பு செய்பெண்ணின் பெயருஞ் சொல்வர்.

853. தாடெனும் பெயரே தலைமையும் வலியுமாம்.

854. தாளி யெனும்பெயர் தாளிப் புதலும்
பனையு மெனவே பகர்ந்தனர் புலவர்.

தகர ஆகார வருக்கம் முற்றும்.

## தகர இகர வருக்கம்

855. திங்க ளெனும்பெயர் மதியு மாதமுமாம்.

856. திகையெனும் பெயரே திசையுஞ் சுணங்குமாம்.

845. தாது:—எழுவகைத்தாது, பொன்முதலிய எழுவகைஉலோகம், மண்முதலிய ஐவகைப் பூதம், காவிக்கல்.

846. தாண்டவம் :—தாண்டுதல், கூத்து.

847. தானம் :—தருமம்செய்தல், பலவகைஉதவி, யானைமதம், நீராடல், தேவலோகம்.

848. தாழை :—தென்னை, தாழை.

849. தா :—பகை, கெடுதல், வலிமை, துன்பம், தாண்டுதல்.

850. தாம்பு :—தாமணிக்கயிறு.

851. தாபரம் :—மரப்பொது, மலைபோல் நிற்பனவெல்லாம், உடல்.

852. தாசி :—பரணிநட்சத்திரம், பணிப்பெண்.

853. தாடு :—தலைமை, வலிமை, 'தாடுடைய தருமனார்' (தேவாரம்).

854. தாளி :—தாளிப்புதல், பனை.

---

855. திங்கள் :—சந்திரன், மாதம்.

856. திகை :—திக்கு, தேமல்,

857. திதியெனும் பெயர்நிலை பேறும் பக்கமும்
காத்தலு மெனவே கருதுவர் புலவர்.

858. திணையெனும் பெயரே குலமும் ஒழுக்கமும்
ஐந்திணைப் பெயரு மாகு மென்ப.

859. திட்டை யெனும்பெயர் திண்ணையு முரலும்
மேடு மெனவே விளம்புவர் புலவர்.

860. திகிரி யெனும்பெயர் தேருந் தேராழியும்
மலையு மூங்கிலும் வட்ட வடிவும்
சக்கரமு நேமிப் புள்ளும் சாற்றுவர்.

861. திலமெனும் பெயரே யெள்ளு மஞ்சாடியும்.

862. திருவெனும் பெயரே சிறப்பும் செல்வமும்
கமலையு மெனவே கருதப் பெறுமே.

863. திரிதல் எனும்பெய ருலாவலுங் கெடலுமாம்.

864. திளைத் தலெனுபெய ரனுபவப் பெயரும்
நிறைவின் பெயரும் நெருங்குதற் பெயருமாம்.

தகர இகர வருக்கம் முற்றும்.

## தகர ஈகார வருக்கம்

865. தீயெனும் பெயரே தீமையும் கனலும்
நரகமும் எனவே நவிலப் பெறுமே.

866. தீவினை எனும்பெயர் பாவமும் கொடுமையும்.

867. தீர்த்த மெனும்பெயர் திருவிழா வுடனே
புண்ணிய தீர்த்தப் பெயரும் புகலுவர்.

868. தீர்த்த னெனும்பெயர் தேவனும் குருவுமாம்.

தகர ஈகார வருக்கம் முற்றும்,

857. திதி:—நிலைபெறுதல், பிரதமை முதலிய திதி, காத்தல்.

858. திணை:—குலம், ஒழுக்கம், ஐந்திணை.

859. திட்டை:—திண்ணை, உரல், மேடு.

860. திகிரி:—தேர், தேருருளை, மலை, மூங்கில், வட்டவடிவு, சக்கராயுதம், சக்கரவாகப்பறவை.

861. திலகம்:—எள், மஞ்சாடிமரம்.

862. திரு:—சிறப்பு, செல்வம், இலக்குமி.

863. திரிதல்:—உலாவல், கெடுதல்.

864. திளைதல்:—அனுபவித்தல், நிறைதல், நெருங்கல்.

---

865. தீ:—தீங்கு, நெருப்பு, நரகம்.

866. தீவினை:—பாவம், கொடுமை.

867. தீர்த்தம்:—திருவிழா, புண்ணிய நீர்.

868. தீர்த்தன்:—தேவன், குரு.

---

## தகர உகர வருக்கம்

869. துணங்கற லென்னும் பெயர்திரு விழாவும்
இருளு மெனவே யியம்புவர் புலவர்.

870. துடியெனும் பெயரே கால நுட்பமும்
சிற்றேல முமேழ் மாதர் நிருத்தமும்
சிறுபறை யுங்கூ தாளமும் செப்புவர்.

871. துத்தி யெனும்பெயர் முலையின் சுணங்கும்
பாம்பின் படத்தின் பொறியுமோர் புதலுமாம்.

872. துண்ட மெனும்பெயர் சாரைப் பாம்பும்
கண்டமு முகமு மூக்குங் கருதுவர்.

873. துருத்தி யெனும்பெயர் ஆற்றிடைக் குறையும்
சருமமு மெனவே சாற்றுவர் புலவர்,

874. துகளெனும் பெயர்நுண் பொடியுங் குற்றமும்.

875. துவக்கெனும் பெயரே தோலும் பிணக்குமாம்.

876. துத்த மெனும்பெயர் யாழி னரம்பும்
எழுவகை யினோர்வி கற்பமும் வயிறும்
பாலுமோர் மருந்தும் பகரப் பெறுமே.

877. துப்பெனும் பெயரே துணைக்கா ரணமும்
அரக்கு மாயுதமும் பெலமும் பவளமும்
நெய்யும் பொலிவும் அனுபவப் பெயருமாம்.

878. துரோண மெனும்பெயர் தும்பையுஞ் சிம்புளும்
பதக்கொடு காகமுஞ் சிலையும் பகருவர்.

879. துணியெனும் பெயரே துண்டமுஞ் சீரையும்
சோதிநாட் பெயரும் சொல்லுவர் புலவர்.

869. துணங்கறல் :—திருவிழா, இருள்.

870. துடி:—கால நுட்பம் ஏலவகை, சப்த கன்னிகைகள் ஆடல், சிறுபறை, தூதுவளை.

871. துத்தி:—முலையின் மேலுள்ள தேமல், பாம்பின் படப்பொறி, ஒருசெடி.

872. துண்டம்:—சாரைப்பாம்பு, கழுத்து, முகம், மூக்கு.

873. துருத்தி:—ஆற்றிடைக்குறை, தோல்.

874. துகள்:—தூளி, குற்றம்.

875. துவக்கு:—தோல், பிணக்கு.

876. துத்தம்:—யாழின் ஒருநரம்பு, இசை யேழனுள் இரண்டாவது, வயிறு, பால், கண்மருந்து.

877. துப்பு :—துணைக்காரணம், அரக்கு, ஆயுதம், வலிமை, பவழம், நெய், பொலிவு, அனுபவம்.

878. துரோணம் :—தும்பைச்செடி, எண்காற்புள், (சரப்புள்), பதக்கு, காகம், வில்.

879. துணி :—துண்டம், மரவுரி, சுவாதி நட்சத்திரம்.

880. தும்பி யெனும்பெயர் சுரையும் யானையும்
வண்டு மதுவும் வழங்கப் பெறுமே.

881. துளியெனும் பெயர்மழைத் துளிபெண் ணுமையாம்.

882. துஞ்ச லெனப்பெயர் நிலைபேறு முறக்கமும்
மரணமு மெனவே வழங்கப் பெறுமே.

883. துணையெனும் பெயரே யுழவும் சகாயமும்
உவமையு முவமையும் உரைத்தனர் புலவர்.

884. தும்பெனும் பெயரே தோடுஞ் சிம்புளும்.

885. துவையெனும் பெயர்பிண் ணாக்கும் இறைச்சியும்
பருகுவ புளிங்கறிப் பெயரும் பகருவர்.

886. துனியெனும் பெயரே புலவி நீடுதலும்
கோபமும் வரியுங் கூறுவர் புலவர்.

887. துன்ன லெனும்பெயர் குறுகலுஞ் செறிவுமாம்.

888. துணங்கை யெனும்பெயர் திருவிழா வுடனே
மெய்க்கூத் ததனவும் விளம்புவர் புலவர்.

889. துளும்ப லெனும்பெய ரலைதலுந் திமிறலும்.

890. துணித லெனும் பெயர் துணிபடற் பெயரும்
தெளிவு மெனவே செப்பப் பெறுமே.

தகர உகர வருக்கம் முற்றும்.

880. தும்பி:—சுரை, யானை, வண்டு, தேன்.

881. துளி:—மழைத்துளி, பெண்ணுமை.

882. துஞ்சல்:—நிலைபேறு, நித்திரை, சாவு.

883. துணை:—உழவு, உதவி, உவமை.

884. தும்பு:—தோடு, சிம்புள், (சரபப்புள்).

885. துவை:—பிண்ணுக்கு, இறைச்சி, பருகுவன, புளிங்கறி.

886. துனி:—புலவிநீட்டம், சினம், வரி.

887. துன்னல்:—குறுகல், நெருங்கல்.

888. துணங்கை:—திருவிழா, மெய்க்கூத்து.

889. துளும்பல்:—அலைதல், திமிறல்.

890. துணிதல்:—வெட்டுண்ணுதல், தெளிவு.

## தகர ஊகார வருக்கம்

891. தூம்பெனும் பெயரே யுட்டுளை வடிவும்
நீர்நுழை யிடமு மரக்காலு மூங்கிலும்.

892. தூசெனும் பெயரே தூசிப் படையும்
புரோசைக் கயிறும் புடவையு மியானையும்.

893. தூவெனும் பெயரே சுசியு மிறைச்சியும்
பற்றுக் கோடும் பகரப் பெறுமே.

894. தூரிய மெனும்பெயர் பேரெரு துடனே
முரசமு மெனவே மொழியப் பெறுமே.

895. தூக்கெனும் பெயரே யுறியுந் துலாமும்
கூத்து மாராய்தலுங் கூறுசொற் கலையுமாம்.

896. தூங்க லெனும்பெயர் துயிலும் சோம்புங்
குறைவுந் தந்தியுங் கூத்தின் பெயருமாம்.

கர ஊகார வருக்கம் முற்றும்.

## தகர எகர வருக்கம்

897. தெய்வெனும் பெயரே கொலையுந் தெய்வமும்.

898. தென்னெனும் பெயரே தெற்கு மழகும்
கற்புட னிசையு மிலாங்கலிப் பெயருமாம்.

899. தெவ்வெனும் பெயரே பகையுஞ் சமருமாம்.

900. தெவிட்ட லெனும்பெயர் நிறைதலு மொலியும்
கான்றலு மடைத்திடற் பெயருங் கருதுவர்.

901. தெய்வ மெனும்பெயர் புத்தேளும் வாசமுமாம்.

தகர எகர வருக்கம் முற்றும்.

891. தூம்பு:—உட்டொளை வடிவு, நீர்நுழையிடம், மரக்கால், மூங்கில்.

892. தூசு:—கொடிப்படை, யானைக்கழுத்திடுகயிறு, புடைவை, யானை.

893. தூ:—சுத்தம், இறைச்சி, பற்றுக்கோடு.

894. தூரியம்:—எருது, முரசு.

895. தூக்கு:—உறி, துலாம், கூத்து, ஆராய்தல், பாட்டு.

896. தூங்கல்:—தூக்கம், சோம்பல், குறைவு, யானை, கூத்து.

---

897. தெய்:—கொல்லல், தெய்வம்.

898. தென்:—தெற்கு, அழகு, கற்பு, இசை, தென்னை.

899. தெவ்:—பகை, போர்.

900. தெவிட்டல்:—நிறைதல், சத்தம், உமிழ்தல், அடைத்தல்.

901. தெய்வம்:—கடவுள், வாசம்.

---

## தகர ஏகார வருக்கம்

902. தேளெனும் பெயரே தெறுக்கா லுடனே
விரிச்சிக ராசியும் அனுடமும் விளம்புவர்.

903. தேசிக னெனும்பெயர் குருவும் வணிகனும்
தேசாந் திரியையுஞ் செப்பப் பெறுமே.

904. தேமெனும் பெயரே தித்திப்பும் வாசமும்
தேசமுந் திசையு மிடமுஞ் செப்புவர்.

905. தேசிக மெனும்பெயர் திசைச்சொல்லு மொளியும்
அரும் பொன்னுங் கூத்தின் விகற்பமும் அழகுமாம்.

906. தேர்தல் எனும்பெயர் கொள்கையின் பெயரும்
ஆராய் தலுமே யாகும் என்ப.

907. தேனெனும் பெயரே வண்டு மதுவுமாம்.

தகர ஏகார வருக்கம் முற்றும்.

## தகர ஐகார வருக்கம்

908. தைத்த லெனும்பெயர் துன்னத்தின் பெயரும்
தைத்திடு தொழிலுஞ் சாற்றப் பெறுமே.

909. தைய லெனும்பெயர் பெண்ணுட னழகுமாம்.

910. தையெனும் பெயரே பூச நாளும்
மகர மாதத்தின் பெயரும் வழங்கும்.

தகர ஐகார வருக்கம் முற்றும்.

902. தேள்:—தேள், விருச்சிகராசி, அனுஷநட்சத்திரம்.

903. தேசிகன்:—குரு, வணிகன், தேசாந்திரி.

904. தேம்:—இனிமை, வாசனை, தேசம், திசை, இடம்.

905. தேசிகம் :—திசைச்சொல், ஒளி, பொன், கூத்துவகையுள் ஒன்று, அழகு.

906. தேர்தல் :—கொள்ளுதல் ஆராய்தல்.

907. தேன் :—வண்டு, தேன்.

---

908. தைத்தல்:—ஊசித்துளை, தைத்தல்.

909. தையல்:—பெண், அழகு.

910. தை:—பூசநட்சத்திரம், தைமாதம்.

---

# தகர ஒகர வருக்கம்

911. தொழுவெனும் பெயரே யிரேவதி நாளும்
உழலைத் தொழுவு முரைத்தனர் புலவர்.

912. தொடுவெனும் பெயரே தோட்டமும் வஞ்சமும்
மருத நிலமும் வழங்கப் பெறுமே.

913. தொய்யி லெனும்பெயர் சேறும் இன்பமும்
துயரு முலைமேற் றெய்யிலு முழுவுமாம்.

914. தொத்தெனும் பெயர்பூங் கொத்துந்
[தொழும்புமாம்.

915. தொறுவெனும் பெயரே தோழமு நிரையும்
தொகுதியு மெனவே சொல்லுவர் புலவர்.

916. தொடியெனும் பெயர்கை வளையு மோர்பலமும்
கங்கணப் பெயருங் கருதப் பெறுமே.

917. தொங்க லெனும் பெயர்பீலிக் குஞ்சமும்
வெண்குடைப் பெயரு மாலையுந் தூக்கமும்.

918. தொண்டை யெனும்பெயர் யானைத் துதிக்கையும்
ஆதொண்டை யினெடு கோவையு மாமே.

919. தொண்டெனும் பெயரே தொழும்பும் பழமையும்
ஒன்பது நுழைவழிப் பெயரு மோதுவர்.

920 தொட்ட லெனும்பெயர் தோண்டுதற் பெயரும்
தொடுதற் பெயரும் உணவும் சொல்லுவர்.

911. தொழு:—இரேவதி நட்சத்திரம், தொழுமரம்.

912. தொடு:—தோட்டம், வஞ்சம், மருதநிலம்.

913. தொய்யில்:—சேறு, இன்பம், துன்பம், மகளிரின் தனங்களில் வரிக்கோல மெழுதும் சந்தனக் குழம்பு, உழவு.

914. தொத்து:—பூங்கொத்து, அடிமை.

915. தொறு:—மாட்டுத்தொழுவம், பசுக்கூட்டம், கூட்டம்.

916. தொடி:—கைவளை, ஒருபலம், கங்கணம்.

917. தொங்கல்:—பீலிக் குஞ்சம், வெண்குடை, மாலை, தூக்கு.

918. தொண்டை:—யானைத் துதிக்கை, ஆதொண்டைச் செடி, கோவைக்கொடி.

919. தொண்டு:—அடிமை, பழமை, ஒன்பது, ஒடுக்கவழி,

920. தொட்டல்:—தோண்டுதல், கையால் தொடுதல், உணவு.

921. தொடுத்தல் எனும்பெயர் பிணித்தலும் வளைத்தலும்
பற்றுத லெனவும் பகரப் பெறுமே.

922. தொழுதி யெனும்பெயர் புள்ளொலியுங் கூட்டமும்.

தகர ஒகர வருக்கம் முற்றும்.

## தகர ஓகார வருக்கம்

923. தோணி யெனும்பெயரி ரேவதி நாளும்
நீருஞ் சேறு மெயில துறுப்பும்
தெப்பமு மோடமும் பகழியுஞ் செப்புவர்.

924. தோட்டி யெனும்பெயர் அங்குசப் படையும்
கதவு மெனவே கருதப் பெறுமே.

925. தோன்ற லெனும்பெயர் சுதனு நாதனுமாம்.

926. தோலெனும் பெயரே தோல்வியும் யானையும்
கேடகப் பலகையுங் கிளத்திடு சருமமும்
இயாப்பினோர் வனப்பும் இயம்புவர் புலவர்.

927. தோற்ற மெனும்பெயர் ஏற்றமும் பிறப்பும்
ஆற்றலும் உண்டாக்குதலும் உயர்ச்சியுந்
தோன்றுதற் பெயரும் சொல்லப் பெறுமே.

928. தோடெனும் பெயரே பனைமடல் போலவும்
பூவி னிதழும் தொகுதியும் புகலுவர்.

929. தோளெனும் பெயரே துணையும் புயமுமாம்.

930. தோரை யெனும்பெயர் மூங்கி லரிசியும்
கைவரை யோடுநெல் விகற்பமும் கருதுவர்.

தகர ஓகார வருக்கம் முற்றும்.

921. தொடுத்தல்:—பிணித்தல், வளைத்தல், பற்றுதல்.

922. தொழுதி:—பறவைகளின் சத்தம், கூட்டம்.

---

923. தோணி —இரேவதி நட்சத்திரம், நீர், சேறு, மதிலுறுப்பு, தெப்பம், மரக்கலம், அம்பு.

924. தோட்டி:—அங்குசம், கதவு.

925. தோன்றல்:—புதல்வன், தலைவன்.

926. தோல்:—தோல்வி, யானை, கேடகப்பலகை, தோல், எண்வகை வனப்பினுளொன்று.

927. தோற்றம்:—ஏற்றம், பிறப்பு, ஆற்றல், உண்டாக்குதல், உயர்ச்சி, தோன்றுதல்.

928. தோடு:—பனையேடு போல்வன, பூவினிதழ், கூட்டம்.

929. தோள்:—துணை, புயம்.

930. தோரை:—மூங்கிலரிசி, கைரேகை, ஒருவகைநெல்.

---

## தகர ஔகார வருக்கம்

931. தௌவை யெனும்பெயர் தாயுமுன் பிறந்தாளு
மூதேவியுஞ் சாற்றப் பெறுமே.

தகர ஔகார வருக்கம் முற்றும்.

# 6வது நகர வருக்கத் தொகுதி

## நகர அகர வருக்கம்

932. நந்தி யெனும்பெயர் ஈசனு மிடபமும்
சிறுபே ரிகையொடு செக்கான் பெயருமாம்.

933. நலமெனும் பெயரே நல்லுப காரமும்
சுகமும் விருச்சிக ராசியும் சொல்லுவர்.

934. நவமெனும் பெயரே யொன்பதுங் கேண்மையும்
புதுமையுங் கார்கா லமுமெனப் புகலுவர்.

935. நடையெனும் பெயரே வழியு மொழுக்கமும்.

936. நகமெனும் பெயரே மரப்பொதுப் பெயரும்
உகிரு மலையும் உரைக்கப் பெறுமே.

937. நவிர மெனும்பெயர் மலையி னுச்சியும்
மலையும் புன்மையும் வகுத்தனர் புலவர்.

938. நயந்தோ னெனும்பெயர் நட்புடை யோனும்
கணவனு மெனவே கருதப் பெறுமே.

939. நகையெனும் பெயரே மகிழ்ச்சியும் ஒளியும்
எயிறும் சிரிப்பும் இயம்புவர் புலவர்.

940. நவிரெனும் பெயரே யாண்பான் மயிரும்
தக்கேசி யிசையு மருதயாழ்த் திறமும்
வாளா யுதமும் வழங்கப் பெறுமே.

931. தௌவை:—தாய், முன்பிறந்தவள், மூதேவி.

---

932. நந்தி:—சிவன், இடபம், சிறுபேரிகை, செக்காட்டி.

933. நலம்:—நல்லுபகாரம், சுகம், விருச்சிகராசி.

934. நவம் :—ஒன்பது, உறவு, புதுமை, கார்காலம்.

935. நடை:—வழி, ஒழுக்கம்.

936. நகம்:—மரப்பொது, நகம், மலை.

937. நவிரம்:—மலையின் உச்சி, மலை, புன்மை.

938. நயந்தோன்:—நண்பன், கணவன்.

939. நகை:—மகிழ்ச்சி, ஒளி, பல், சிரிப்பு.

940. நவிர்:—ஆண்மயிர், தக்கேசிப்பண், மருதயாழ்த் திறம், வாள்.

941. நனையெனும் பெயரே பூவின் முகையும்
நறவு மெனவே நவிலுவர் புலவர்.

942. நவிய மெனும்பெயர் மழுவும் குடாரியும்.

943. நயமெனும் பெயரே நன்மையுஞ் சுகமுமாம்.

944. நரையெனும் பெயரே ஆனி னேறும்
வெண்ணிறக் குதிரையு மிகுபெரு நாரையும்
கவரியுந் தவள நிறமும் கருதுவர்.

945. நளியெனும் பெயரே சீதமுஞ் செறிவும்
பெருமையு முரைப்பர் பெரிது ணர்ந்தோரே.

946. நரந்த மெனும்பெயர் நாரத்தை மரமும்
கத்தூ ரியுமெனக் கருதப் பெறுமே.

947. நந்தெனும் பெயரே நத்தையுஞ் சங்குமாம்.

948. நடலை யெனும்பெயர் வஞ்சமும் பொய்யுமாம்.

949. நந்த லெனும்பெயர் ஆக்கமும் கேடுமாம்.

950. நகரெனும் பெயரே நகரமும் வீடுமாம்.

951. நத்த மெனும்பெயர் நகரின் கெடுதியும்
இரவும் பணிலமு மிருளும் இயம்புவர்.

952. நன்றெனும் பெயரே நன்மையும் பெரிதுமாம்.

953. நட்ட மெனும்பெயர் நடனமும் கேடுமாம்.

954. நவிலல் எனும்பெயர் பண்ணுதல் சொல்லுதல்.

955. நக்க லெனும்பெயர் நகையுந் தின்றலும்.

941. நனை:—பூவின்மொட்டு, தேன்.

942. நவியம் :—மழு, கோடாலி.

943. நயம் :—நன்மை, இன்பம்.

944. நரை :—இடபம், வெண்மைநிறக்குதிரை, பெருநாரை, கவரிமான், வெண்மை.

945. நளி :—குளிர்ச்சி, கூட்டம், பெருமை.

946. நரந்தம் :—நாரத்தைமரம், கத்தூரி.

947. நந்து :—நத்தை, சங்கு.

948. நடலை :—வஞ்சனை, பொய்.

949. நந்தல் :—ஆக்கம், கேடு.

950. நகர் :—நகரம், வீடு.

951. நத்தம் :—நகரின்கெடுதி, இரவு, சங்கு, இருள்.

952. நன்று:—நன்மை, பெரிது.

953. நட்டம்:—நடனம், கேடு.

954. நவிலல்:—செய்தல், சொல்லுதல்.

955. நக்கல்:—சிரிப்பு, தின்றல்.

956. நக்க னெனும்பெயர் சிவனும் அருக்கனும்
நின்மா ணியுமென நிகழ்த்துவர் புலவர்.

957. நன்பெனும் பெயரே அகலமுந் தெளிவுமாம்.

958. நயனெனும் பெயரே இன்பமும் மகிழ்வும்
பயனு நன்மையும் பகரப் பெறுமே.

நகர அகர வருக்கம் முற்றும்.

## நகர ஆகார வருக்கம்

959. நாழி யெனும்பெயர் உட்டுளை வடிவும்
அளக்கு நாழியும் பூரட் டாதியும்
நாழிகைப் பெயரு நவின்றனர் புலவர்.

960. நாக மெனும்பெயர் நன்மத யானையும்
வெற்புங் கடவுள ருலகுங் காரீயமும்
ஒருமரப் பெயரும் குரங்கும் பாம்பும்
நற்றூசும் புன்னைப் பெயரு நவிலுவர்.

961. நாவிதன் எனும்பெயர் பூர நாளும்
கார்த்திகை நாளு மயிர்வினை ஞனுமாம்.

962. நாஞ்சில் எனும்பெயர் கலப்பைப் படையும்
எயிலு றுப்புமென வியம்பப் பெறுமே.

963. நாட்ட மெனும்பெயர் நயனமும் வாளும்
பண்ணின் விகற்பமும் பகரப் பெறுமே.

964. நாரி யெனும்பெயர் நறவும் பன்னடையும்
பெண்ணுஞ் சிலைநாண் பெயரும் பேசுவர்.

965. நாப்பண் எனும்பெயர் நடுவட் டேரும்
நடுவு மெனவே நவிலப் பெறுமே.

956. நக்கன் :—சிவன், சூரியன், திகம்பரன்.

957. நன்பு :—அகலம், தெளிவு.

958. நயன் :—இன்பம், களிப்பு, பயன், நன்மை.

---

959. நாழி :—உட்டொளைப்பொருள், அளக்கும்படி, பூரட்டாதி நட்சத்திரம், நாழிகை.

960. நாகம்:—மதங்கொண்டயானை, மலை, தேவலோகம், காரீயம், ஒருமரப்பெயர், குரங்கு, பாம்பு, நல்லாடை, புன்னைமரம்.

961. நாவிதன்:—பூரநட்சத்திரம், கார்த்திகை நட்சத்திரம், அம்பட்டன்.

962. நாஞ்சில்:—கலப்பை, மதிலுறுப்பு.

963. நாட்டம்:—கண், வாளாயுதம், ஒருவகைப்பண்.

964. நாரி:—கள், பன்னாடை, பெண், வில்லின்நாண்.

965. நாப்பண்:—தேர்நடு, இடை.

966. நான மெனும்பெயர் ஞானமும் பாசமும்
பூசு வனவும் புனலா டுதலும்
கத்தூ ரியுமெனக் கருதப் பெறுமே.

967. நாடி யெனும்பெயர் நாழிகை நரம்புமாம்.

968. நாகெனும் பெயரே யீனு விளமையும்
இளமரக் கன்றும் சங்கும் நத்தையும்
ஒருசார் விலங்கின் பெண்பாலு மோதுவர்.

969. நாணெனும் பெயரே மாதர் மங்கலமும்
பூணு மிலச்சையுங் கயிறும் புகலுவர்.

970. நாரெனும் பெயரே அன்பும் கயிறுமாம்.

971. நாறுதல் எனும்பெயர் உண்டாதல் மணமுமாம்.

972. நான்முகன் எனும்பெயர் அருகனும் பிரமனும்.

நகர ஆகார வருக்கம் முற்றும்.

## நகர இகர வருக்கம்

973. நிறையெனும் பெயர்துலா ராசிப் பெயரும்
துலேயு நீர்ச்சாலு மழியா நிலேமையும்.

974. நிசியெனும் பெயரே கங்குற் பொழுதும்
மஞ்சளும் பொன்னும் வகுக்கப் பெறுமே.

975. நிதம்ப மெனும்பெயர் மலேயின் பக்கமும்
அல்குலின் பெயரு மாகு மென்ப.

976. நியமம் எனும்பெயர் நியதியு நகரமும்
தெருவும் அங்காடியுந் தேவரா லயமும்
நிச்சயப் பெயரும் நிகழ்த்துவர் புலவர்.

966. நானம்:—அறிவு, பாசம், பூசுவன, நீராடுதல், கத்தூரி.

967. நாடி:—நாழிகை, நரம்பு.

968. நாகு:—இளமை, மரக்கன்று, சங்கு, நத்தை, ஒருவகை விலங்கின் பெண்பால்.

969. நாண்:—மாதர் மங்கலம், ஆபரணம், வெட்கம், கயிறு.

970. நார்:—அன்பு, கயிறு.

971. நாறுதல்:—உண்டாதல், மணம்.

972. நான்முகன்:—அருகன், பிரமன்.

---

973. நிறை:—துலாராசி, தராசு, நீர்ச்சால், அழிவின்மை.

974. நிசி:—இரவு, மஞ்சள், பொன்.

975. நிதம்பம்:—மலைப்பக்கம், அல்குல்.

976. நியமம்:—நியதி, நகரம், தெரு, கடைவீதி, கோவில், நிச்சயம்.

977. நிருமித்த லென்னும் பெயரா ராய்தலும்
படைத்தலு மெனவே பகர்ந்தனர் புலவர்.

978. நிறமெனும் பெயரே நிறங்களு மார்பும்
காந்தியு மெனவே கருதுவர் புலவர்.

979. நிரப்பு எனும்பெயர் குறைபாடும் வறுமையும்.

980. நிழற்ற லெனும்பெயர் நிழற்செய லுடனே
நுணுக்க மெனவே நுவன்றனர் புலவர்.

நகர இகர வருக்கம் முற்றும்.

## நகர ஈகார வருக்கம்

981. நீலி யெனும்பெயர் பாலைக் கிழத்தியும்
கருநிற முமொரு புதலுங் கருதுவர்.

982. நீரெனும் பெயரே நீர்மையும் புனலும்
பூராட நாளும் புகலப் பெறுமே.

983. நீப மெனும்பெயர் உத்திரட் டாதியும்
நிமித்தமும் கடம்பு நிகழ்த்துவர் புலவர்.

984. நீவி யெனும்பெயர் ஆடையுந் துடைத்தலும்
நெருங்கிய கொய்சகப் பெயரு நிகழ்த்துவர்.

நகர ஈகார வருக்கம் முற்றும்.

## நகர உகர வருக்கம்

985. நுதலெனும் பெயரே நெற்றியும் புருவமும்.

986. நுணங்க லெனும்பெயர் நுண்மையுந் தேமலும்.

977. நிருமித்தல்:—ஆராய்தல், படைத்தல்.

978. நிறம்:—நிறங்கள், மார்பு, ஒளி.

979. நிரப்பு:—குறைபாடு, வறுமை.

980. நிழற்றல்:—நிழற்செயல், நுணுக்கம்.

---

981. நீலி:—துர்க்கை, கறுப்பு, ஒருவகைபுற்சாதி.

982. நீர்:—தன்மை, தண்ணீர், பூராடநட்சத்திரம்.

983. நீபம்:—உத்திரட்டாதிநட்சத்திரம், காரணம், கடம்பு.

984. நீவி:—ஆடை, துடைத்தல், கொய்சகம், (கொசுவம்).

---

985, நுதல்:—நெற்றி, புருவம்.

986. நுணங்கல்:—நுண்மை, தேமல்.

987. நுனியெனும் பெயரே நுண்மையும், நுனியுமாம்.

988. நுணவை யெனும்பெயர் நுண்பிண் டியினுடன்
எண்ணுே லேயுமென இயம்பப் பெறுமே.

989. நுவணை யெனும்பெயர் தினையின் பிண்டியும்
நூலு நுண்மையு நுவன்றனர் புலவர்.

நகர உகர வருக்கம் முற்றும்.

## நகர ஊகார வருக்கம்

990. நூலோ ரெனும்பெய ரந்தண ருடனே
மந்திரி யர்பெயர் புலவோரும் வழங்குவர்.

991. நூழி லெனும்பெயர் யானையுங் கோறலும்
கொடியின் பெயரும் கொடிக்கொற் றூனும்
பொடியின் பெயரும் புகன்றனர் புலவர்.

992. நூலெனும் பெயரே வேத நூலொடு
சாத்திர விகற்பமும் தந்தும் பேசுவர்.

993. நூன மெனும்பெயர் குறைவு நிச்சயமுமாம்.

நகர ஊகார வருக்கம் முற்றும்.

## நகர எகர வருக்கம்

994. நெறியெனும் பெயரே நீதியும் வழியுமாம்.

995. நெற்றி யெனும்பெயர் நெடும்படை யுறுப்பும்
நுதலு மெனவே நுவன்றனர் புலவர்.

996. நெய்தலென் பெயரோர் நிலமும் கடலும்
நெய்தற் பூவொடு சாப்பறை நிகழ்த்துவர்.

நகர எகர வருக்கம் முற்றும்.

987. நுனி :—நுண்மை, நுனி.

988. நுணவை :—மா, எண்ணெய்.

989. நுவணை :—தினைமா, கல்விநூல், நுட்பம்.

---

990. நூலோர் :—அந்தணர், மந்திரிகள், புலவர்.

991. நூழில் :—யானை, கொல்லல், படர்கொடி, கொடிக்கொத்தான், தூள்.

992. நூல் :—மறைநூல், சாத்திரவகை, பஞ்சுநூல்.

993. நூனம் :—குறைவு, நிச்சயம்.

---

994. நெறி :—நீதி, வழி.

995. நெற்றி :—படையுறுப்பு, நுதல்.

996. நெய்தல் :—நெய்தல்நிலம், கடல், நெய்தற்பூ, சாப்பறை.

---

## நகர ஏகார வருக்கம்

997. நேத்திர மெனப்பெயர் பட்டின் விகற்பமும்
கண்ணு மெனவே கருதப் பெறுமே.

998. நேய மெனும்பெயர் நெய்யும் எண்ணெயும்
அன்பின் பெயரு மாமென வுரைப்பர்.

999. நேமி யெனும்பெயர் திகிரியும் வண்டிலும்
பூமியும் புணரியும் புகலப் பெறுமே.

1000. நேரெனும் பெயரே கொடுத்தலும் பாதியும்
தனிமையும் நிகரும் நுட்பமுடன் பரஞ்சமமு
மிகுதியுந் தலைப்படல் விலையுமாம்.

நகர ஏகார வருக்கம் முற்றும்.

## நகர ஒகர வருக்கம்

1001. நொச்சி யெனும்பெயர் சிந்து வாரமும்
சிற்றூரு மதிலும் எயில் காத்தலுமாம்.

1002. நொடியெனும் பெயர்கை நொடியும் வார்த்தையும்.

1003. நொறிலெனும் பெயரே நுடக்கமும் விரைவும்
ஒடுக்கமு மெனவே யுரைக்கப் பெறுமே.

நகர ஒகர வருக்கம் முற்றும்.

## நகர ஓகார வருக்கம்

1004. நோனமை யென்னும் பெயர்பொ றுமையும்
தவம்பண்ணு மையுஞ் சாற்றுவர் புலவர்.

1005. நோக்கெனும் பெயரே யழகும் விழியுமாம்.

997. நேத்திரம் :—பட்டின்வகை, கண்.

998. நேயம் :—நெய், எண்ணெய், அன்பு.

999. நேமி :—சக்கரம். வண்டி, பூமி, கடல்.

1000. நேர் :—கொடுத்தல், பாதி, தனிமை, ஒப்புமை, நுட்பம், மேலானது, சமம், மிகுதி, தலைப்படல் விலை.

---

1001. நொச்சி :—நொச்சிச்செடி, சிற்றூர், மதில், மதில்காத்தல்.

1002. நொடி :—கைநொடி, வார்த்தை.

1003. நொறில் :—நுடக்கம், சீக்கிரம், ஒடுக்கம்.

---

1004. நோனுமை :—பொறுமை, தவம்செய்யாமை.

1005. நோக்கு :—அழகு, விழி.

1006. நோற்ற லெனும்பெயர் பொறையும் தவமுமாம்.

1007. நோஞ ரெனும்பெயர் தவமில் லோருடன்
பகைஞர்தம் பெயரும் பகர்ந்தனர் புலவர்.

நகர ஓகார வருக்கம் முற்றும்.

## நகர ஔகார வருக்கம்

1008. நௌவிய மெனும்பெயர் மரக்கலப் பெயரும்
மானு மெனவே வழங்கப் பெறுமே.

நகர ஔகார வருக்கம் முற்றும்.

# 7 வது பகர வருக்கத் தொகுதி

## பகர அகர வருக்கம்

1009. பருதி யெனும்பெயர் பரிவே டத்துடன்
வட்ட வடிவு மிரவியு நேமியும்.

1010. பகலெனும் பெயர்பகற் போதும் பிரிவும்
நடுவும் பரணி நாளும் இயம்புவர்.

1011. பச்சை யெனும்பெயர் பசுமையும் புதனும்
தோலும் இலாபமு மரகத மணியுமாம்.

1012. பங்கெனும் பெயரே பகுத்தலும் சனியும்
முடமும் பாதியும் மொழிந்தனர் புலவர்.

1013. பக்க மெனும்பெய ரருகு மிறகுந்
திதியு மண்மையுஞ் செப்பப் பெறுமே.

1006. நோற்றல் :—பொறுமை, தவம்.

1007. நோனர் :—தவம் செய்யாதவர், பகைவர்.

---

1008. நௌவியம் :—கப்பல், மான்.

---

1009. பருதி :—பரிவேடம் (சந்திர சூரியர்களைச்சுற்றிக் காணப்படும் ஊர்கோள் வட்டம்) வட்டவடிவு, சூரியன், சக்கராயுதம்.

1010. பகல் :—பகற்காலம், பிரிதல், நடு, பரணிநட்சத் [திரம்.

1011. பச்சை :—பசுமை, புதன், தோல், இலாபம், மரகதமணி.

1012. பங்கு :—பகுத்தல், சனி, முடம், பாதி.

1013. பக்கம் :—சமீபம், இறகு, பிரதமை முதலியதிதி, அண்மை.

1014. பதமெனும் பெயரே பாதமும் சோறும்
வரிசையும் விழாவும், வழியும் வார்த்தையும்
உணவு மீரமுஞ் செவ்வியுஞ் சேமமும்
பொழுது மெனவே புகன்றனர் புலவர்.

1015. பணியெனும் பெயரே பணமுடைப் பாம்பும்
தொழிலுந் தொழில்படு கலனுஞ் சொல்லுவர்.

1016. பயமெனும் பெயரே பாலும் சலிலமு
மச்சமும முதுமி லாபமு மாமே.

1017. பரவை யெனும்பெயர் பரப்புங் கடலுமாம்.

1018. பயோதர மெனும்பெயர் மேகமு முலையுமாம்.

1019. பனியெனும் பெயரே துன்பமு நடுக்கமும்
அச்சமுங் குளிர்ச்சியு மிமமு மாமே.

1020. பகவ னெனும்பெயர் பரமனு மாலும்
பிரமனும் அருகனும் குருவும் புத்தனும்.

1021. பண்ணவ னெனும்பெயர் முனியும் தேவனும்
குருவுந் திறலோன் பெயருங் கூறுவர்.

1022. பசுவெனும் பெயர்வெண் பெற்றமு முயிருமாம்.

1023. படியெனும் பெயரே பகையும் குணமும்
புவனமு முலகமும் புகலப் பெறுமே.

1024- படப்பை யெனும்பெயர் நாடு நகரமும்
தோட்டமும் பசுநிரைப் பெயருஞ் சொல்லுவர்.

1025. பட்டெனும் பெயரே பட்டின் விகற்பமும்
சிற்றூர்ப் பெயரும் துகிலுஞ் செப்புவர்.

1014. பதம் :—கால், சோறு, வரிசை, விழா, வழி, சொல், உணவு, ஈரம், சமயம், சேமம், பொழுது.

1015. பணி :—படத்தை உடைய பாம்பு, தொழில், ஆபரணம்.

1016. பயம்:—பால், தண்ணீர், அச்சம், அமுது, இலாபம்.

1017. பரவை :—பரப்பு, கடல்.

1018. பயோதரம் :—மேகம், முலே.

1019. பனி :—துன்பம், நடுக்கம், அச்சம், குளிர்ச்சி, பனி.

1020. பகவன் :—சிவன், திருமால், பிரமன், அருகன் குரு, புத்தன்.

1021. பண்ணவன் :—இருடி, தேவன், குரு, பதினைந் தாண்டுள்ளவன். '' திறலோன் யாண்டே பதினைந்தாகும் '' (பன்னிருபாட்டியல், 230.)

1022. பசு :—பசுமாடு, உயிர்.

1023. படி :—பகை, குணம், பூமி, உலகம்.

1024. படப்பை:—நாடு, நகரம், தோட்டம், பசுக்கூட்டம்.

1025. பட்டு :—பட்டின்வகை, சிற்றூர், ஆடை.

1026. பள்ளி யெனும்பெயர் தவத்தோ ரிடமும்
துயிறலும் பாயலுஞ் சிற்றூர்ப் பெயரும்
கோயிலின் பெயருங் கூறப் பெறுமே.

1027. பட்ட மெனும்பெயர்மேம்படு பதவியும்
வழியுங் கவரி மாவுந் துகிலும்
வாயிலு மதகரி முகபடாமும்
விலங்கு துயிலிடமும் படமும் விளம்புவர்.

1028. பதுக்கை யெனும்பெயர் பாறையு மேடும்
சிறுதூ றுமெனச் செப்புவர் புலவர்.

1029. பதலை யெனும்பெயர் மலையுந் தாழியும்
ஒருகட் பரந்த வாய்ப்பறையு மோதுவர்.

1030. பணையெனும் பெயரே பருத்தலு மூங்கிலும்
மருத நிலமும் வயலு முரசமும்
குதிரையின் பந்தியு மரத்தின் கொம்புமாம்.

1031. பண்ணை யெனும்பெயர் வயலும் வாவியும்
சபையு மகளிர் விளையா டிடமும்
விலங்கு துயிலிடமும் விளம்புவர் புலவர்.

1032. படுவெனும் பெயரே மரத்தின் குலையும்
மதுவும் நன்மையும் வாவியுமாமே.

1033. பயம்பெனும் பெயரே பகடுபடு குழியும்
நீர்நிலைப் பெயரு நிகழ்த்தினர் புலவர்.

1034. பங்க மெனும்பெயர் சேறும் துகிலும்
பின்னமுந் தீவினைப் பெயரும் பேசுவர்.

1035. பரிக மென்பெயர் கணைபடைக் கலமும்
புரிசை யுள்ளுயர்ந்த நிலமும் அகழியும்
மேடையு மெனவே விளம்புவர் புலவர்.

1026. பள்ளி :—முனிவர் இருப்பிடம், தூக்கம், படுக்கை, சிற்றூர், கோயில்.

1027. பட்டம் :—உயர்பதவி, வழி, கவரிமான், ஆடை, வாயில், யானையின் முகபடாம், விலங்கின் படுக்கையிடம், படம்.

1028. பதுக்கை :—பாறை, மேடு, மரஞ்செடிகளின் சிறு செறிவு.

1029. பதலை :—மலை, சாடி, ஒருகட்பறை.

1030, பணை :—பருத்தல், மூங்கில், மருதநிலம், வயல், பேரிகை, குதிரைப்பந்தி, மரக்கொம்பு.

1031. பண்ணை :—வயல், குளம், அவை, மகளிர்விளையாடு மிடம், விலங்குதூங்குமிடம்.

1032. படு:—மரக்குலை, கள், நன்மை, குளம்.

1033. பயம்பு :—யானைபடுகுழி, நீர்நிலை.

1034. பங்கம்:—சேறு, ஆடை, பின்னம், தீவினை.

1035. பரிகம் :—வளைதடி, மதிலுண்மேடை, அகழி, மேடை.

1036. பணவை யெனும்பெயர் பரணுங் கழுதுமாம்.

1037. படையெனும் பெயரே பரிமாக் கலனையும்
ஆயுதப் பொதுவு மடர்கொடுஞ் சேனையும்
கண்படை யுடனே கலப்பையுங் கருதுவர்.

1038. பலமெனும் பெயரே பழமும் கிழங்கும்
சேனையும் லாபமும் நிறையும் செப்புவர்.

1039. பங்கி யெனும்பெயர் ஆண்பான் மயிரும்
அஃறிணைப் பொதுவின் பெயரு மாமே.

1040. பண்ட மெனும்பெயர் பண்ணி காரத்துடன்
விண்டொளிர் பொன்னும் விளம்பப் பெறுமே.

1041. படலிகை யென்னும் பெயர்பெரும் பீர்க்கும்
கைமணி வட்டமும் பூத்தட்டின் பெயருமாம்.

1042. படங்கென் பெயர்பெருங் கொடியு மேற்கட்டியும்.

1043. படலை யெனும்பெயர் வாசிக் கோவையும்
படர்தலுந் தொடையலும் பரந்தவாய்ப்
[பறையுமாம்.

1044. பண்ணெனும் பெயரே பரிமாக் கலனையும்
பாட்டின் பண்ணும் பகரப் பெறுமே.

1045. பறையென் பெயர்புள்ளி னிறகும் பணையும்
வசனமு மெனவே வழங்கப் பெறுமே.

1046. பகழி யெனும்பெயர் பகழிக் குதையும்
கணையு மெனவே கருதப் பெறுமே.

1047. பரமெனும் பெயரே பரிமாக் கலனையும்
மெய்யு மெய்புகு கருவியும் பாரமும்
முன்பு மேலு மொழிந்தனர் புலவர்.

1036. பணவை:—பரண், பேய்.

1037. படை:—குதிரைச் சேணம், ஆயுதப்பொது, சேனை, நித்திரை, கலப்பை.

1038. பலம்:—பழம், கிழங்கு, சேனை, இலாபம், ஒருநிறை.

1039. பங்கி:—ஆண்மயிர், விலங்கினங்களின்மயிர்.

1040. பண்டம்:—பலபண்டம், பொன்.

1041. படலிகை:—பெரும் பீர்க்கு, கைமணி, வட்டம், பூந்தட்டு.

1042. படங்கு:—பெருங்கொடி, மேல் விதானம்.

1043. படலை:—குதிரைக் கிங்கிணிமாலை, படர்தல், மாலை, பெரியவாயையுடைய பறை.

1044. பண்:—குதிரைச்சேணம், இசைப்பண்.

1045. பறை:—பறவையின் இறகு, வாத்தியம், சொல்.

1046. பகழி:—அம்பின் நுனி, அம்பு.

1047. பரம்:—குதிரைச்சேணம், உடல், கவசம், பாரம், முன்பு, மேல்.

1048. பழங்கணெ னும்பெய ரோசையும் துன்பமும்.

1049. படிறெனும் பெயரே பொய்யொடு களவுமாம்.

1050. பந்த மெனும்பெயர் சீரின் தொடர்ச்சியும்
அழகும் திரட்சியும் கிளையொடு கட்டுமாம்.

1051. பத்திர மெனும்பெய ரழகும் நன்மையும்
சுரிகையும் சிங்காசனமும் புள்ளிறகும்
இலையு மெனவே இயம்பப் பெறுமே.

1052. பலியெனும் பெயரே தேவ பூசையும்
பிச்சையும் பலித்தலும் பேசுவர் புலவர்.

1053. பரியெனும் பெயரே பாது காத்தலும்
பருத்தியுஞ் சுமத்தலுங் குதிரையும் பெருமையும்.

1054. பகடெனும் பெயரே பெருமையு மெருதும்
எருமை யாண்பெயருந் தோணியுங் களிறுமாம்.

1055. பதங்க மெனும்பெயர் விட்டிற் பறவையும்
புட்பொதுப் பெயரும் புகலப் பெறுமே.

1056. பயலெனும் பெயர்ச்சிற் ருளும் பள்ளமும்
பந்தியு மெனவே பகருவர் புலவர்.

1057. பணில மெனும்பெயர் சலஞ்சலப் பெயரும்
சங்கின் பெயருஞ் சாற்றுவர் புலவர்.

1058. பப்பெனும் பெயரே பரப்பும் உவமையும்.

1059. பந்தெனும்பெயர் கந்துகமும் கட்டும்
நீர்தூவுஞ் சிறுது ருத்தியும் நிகழ்த்துவர்.

1060. பவன மெனும்பெயர் பாருங் காற்றும்
இராசியும் கோயிலு நாடு மில்லமுமாம்.

1048. பழங்கண் :—ஒலி, துன்பம்.

1049. படிறு :—பொய், களவு.

1050. பந்தம்:—தளை (யாப்பிலக்கண வுறுப்புக்களுள் ஒன்று), அழகு, திரட்சி, உறவு, கட்டு.

1051. பத்திரம்:—அழகு, நன்மை, உடைவாள், சிம்மாசனம், பறவையின் இறகு, இலை.

1052. பலி:—தேவபூசை, பிச்சை, பலித்தல்.

1053. பரி:—பாதுகாத்தல், பருத்தி, சுமத்தல், குதிரை, பெருமை.

1054. பகடு:—பெருமை, எருது, எருமைக்கடா, தோணி, யானை.

1055. பதங்கம்:—விட்டில், பறவைப்பொது.

1056. பயல்:—சிற்றுள், பள்ளம், பந்தி.

1057. பணிலம்:—வலம்புரி ஆயிரம்சூழ்ந்த சங்கு, சங்கு.

1058. பப்பு:—பரப்பு, உவமை.

1059. பந்து:—கந்துகம், கட்டு, நீர் வீசும் சிறு துருத்தி.

1060. பவனம்:—பூமி, காற்று, இராசி, கோயில், நாடு, வீடு.

1061. படமெனும் பெயரே பாம்பின் பணமும்
சித்திரப் படமும் சிலையும் கொடியுமாம்.

1062. பறம்பெனும் பெயரே மலையு முலையுமாம்.

1063. பரத ரெனும்பெயர் தனவைசியர் பேரும்
நெய்தனில மாக்களு நிகழ்த்தப் பெறுமே.

1064. பவமெனும் பெயரே பாவமும் பிறப்புமாம்.

1065. பண்ணல் எனும்பெயர் சொல்லு நெருக்கமும்
பருத்தியின் பெயரும் பகரப் பெறுமே.

1066. பயிரெனும் பெயரே யொலியும் பைங்கூழும்
விதந்து கட்டிய வழக்கும் புட்குரலும்
விலங்கின் குரலும் விளம்புவர் புலவர்.

1067. படரெனும் பெயரே பரியும் நோயும்
வீரரு நினைத்தலு நடையும் விளம்புவர்.

1068. பவித்திர மெனும்பெயர் தருப்பையுஞ் சுசியுமாம்.

1069. படிவமெனும்பெயர் வடிவமு நோன்புமாம்.

1070. படுத்த லெனும்பெய ரொலியு முண்டாதலும்
பூத்தலு மின்மைப் பெயரும் புகலுவர்.

1071. பதியெனும் பெயரே கணவனும் நாகமும்
தலைவனு மெனவே சாற்றப் பெறுமே.

1072. பத்தி யென்பெயர் வழிபாடு மொழுங்கும்
அடைப்பது முறைமையு மாமென வியம்புவர்.

1073. பரித்தல் எனும்பெயர் அறுத்தலும் வெட்டலும்
இரங்கலு மன்பும் இசைக்கப் பெறுமே.

1061. படம்:—பாம்பின்படம், சித்திரப்படம், சிலை, விருதுக்கொடி.

1062. பறம்பு:—மலை, முலை.

1063. பரதர்:—தனவைசியர், நெய்தல் நில மாக்கள்.

1064. பவம்:—பாவம், பிறப்பு.

1065. பண்ணல்:—சொல், நெருக்கம், பருத்தி.

1066. பயிர்:—சத்தம், பசுமையானபயிர், வழக்கு, விலங்கின்குரல், பறவைகளின்குரல்.

1067. படர்:—குதிரை, நோய், வீரர், நினைத்தல், நடை.

1068. பவித்திரம்:—தருப்பை, தூய்மை.

1069. படிவம்:—வடிவம், நோன்பு.

1070. படுத்தல்:—ஒலி, உண்டாதல், பூத்தல், இன்மை.

1071. பதி:—கணவன், நாகம், தலைவன்.

1072. பத்தி:—வழிபாடு, ஒழுங்கு, அடைப்பது, முறைமை.

1073. பரித்தல்:—அறுத்தல், வெட்டல், இரங்கல், அன்பு.

1074. பஞ்ச மெனும்பெயர் ஐந்துஞ் சிறுமையும்.

1075. பனுவ லெனும்பெயர் செய்யுளும் நூலுமாம்.

1076. பராகமென்பெயர் மலர்த்தாதுவு மிரேணுவும்.

1077. பல்ல மெனும்பெயர் பாணமும் கரடியும்
கணக்கிலோர் குணிப்பும் கருதப் பெறுமே.

1078. பத்திரி யெனும்பெயர் பறவையும் பரியுமாம்.

1079. பட்டிகை யெனும்பெயர் பணையு மீரமும்
கச்சு மெனவே கருதப் பெறுமே.

1080. பரிவெனும் பெயரே யின்பமுந் துன்பமும்
அன்பு மிதன்பெய ராமென வியம்புவர்.

1081. பற்ப மெனும்பெயர் பதுமமுந் தூளுமாம்.

1082. பரணி யெனும்பெயர் தரும ஞளும்
அழுந்திடு கலனு மதகரிப் பெயருமாம்.

1083. பனேயெனும் பெயரே போந்தையின் தருவும்
அநுடநாட் பெயரு மாகு மென்ப.

1084. பணமெனும் பெயரே பாம்பின் படமும்
அரவுஞ் செம்பொற் காசு மாமே.

பகர அகர வருக்கம் முற்றும்.

## பகர ஆகார வருக்கம்

1085. பாரதி யெனும்பெயர் பனுவ லாட்டியும்
தோணியு மெனவே சொல்லப் பெறுமே.

1074. பஞ்சம்:—ஐந்து, சிறுமை.

1075. பனுவல்:—செய்யுள், நூல்.

1076. பராகம்:—பூந்துகள், துகள்.

1077. பல்லம்:—அம்பு, கரடி, ஒருபேரெண்.

1078. பத்திரி:—பறவை, குதிரை.

1079. பட்டிகை:—பணை, ஈரம், முலைக்கச்சு.

1080. பரிவு:—இன்பம், துன்பம், அன்பு.

1081. பற்பம்—தாமரை, தூள்.

1082. பரணி:—தருமனின்நாள், அணி, யானை.

1083. பனை:—இளம்பனைமரம், அநுடநட்சத்திரம்.

1084. பணம்:—பாம்பின்படம், பாம்பு, செம்பொன்காசு.

---

1085. பாரதி:—கலைமகள், மரக்கலம்.

1086. பாண்டி லெனும்பெய ரிடப ராசியும்
சகடமு மூங்கிலுந் தாங்குறு சிவிகையும்
காலேயுங் கட்டிலும் விளக்கின் றகளியும்
வட்டமு மெனவே வழங்கப் பெறுமே.

1087. பாணி யெனும்பெயர் பதியொடு சேர்ந்த
சோலேயு நாடுங் காடு நீரும்
பாடற் பல்லியமும் பாட்டுமோ ரிசையும்
கையும் பொழுது நீட்டித்தலுங் கருதுவர்.

1088. பாரா வார மெனும்பெயர் கடலும்
கடற்கரைப் பெயருங் கருதப் பெறுமே.

1089. பாசெனும் பெயரே பசுமையு மூங்கிலும்.

1090. பாரெனும் பெயரே தேரின் பரப்பும்
உரோகிணிப் பெயரும் புவனியு முரைப்பர்.

1091. பாம்பெனும் பெயரே பன்னக விகற்பமும்
வரம்பின் பெயரும் வழங்கப் பெறுமே.

1092. பாரி யெனும்பெயர் பாரின் பெயருங்
கட்டிலின் பெயருநல் லாடையு முந்நீரும்
மனேவி பெயருமோர் வள்ளலு மாமே.

1093. பாடி யெனும்பெயர் ஊரு நாடும்
நகர மும்படை வீடு நவிலுவர்.

1094. பானல் எனும்பெயர் கருநிறக் குவளேயும்
மருத நிலமும் வயலும் வழங்கும்.

1095. பாத்தி யெனும்பெயர் பகுத்தலும் வீடும்
சிறுசெய்யு மென்னச் செப்புவர் புலவர்.

1086. பாண்டில்:—இடபராசி, வண்டி, மூங்கில், பல்லக்கு, காளை, கட்டில், அகல்விளக்கு, வட்டம்.

1087. பாணி:—ஊர்சூழ்சோலை, நாடு, காடு, நீர், வாத்தியப்பொது, பாட்டு, ஓரிசை, கை, நெடுநேரம்.

1088. பாராவாரம்:—கடல், கடற்கரை.

1089. பாசு :—பசுமை, மூங்கில்.

1090. பார் :—தேர்ப்பரப்பு, உரோகிணிநட்சத்திரம், பூமி.

1091. பாம்பு :—பாம்புப்பொது, வரம்பு.

1092. பாரி :—பூமி, கட்டில், ஆடை, கடல், மனைவி, கடையெழு வள்ளல்களில் ஒருவன்.

1093. பாடி :—ஊர், நாடு, நகரம், படைவீடு.

1094. பானல் :—கருங்குவளை, மருதநிலம், வயல்.

1095. பாத்தி :—பகுத்தல், வீடு, சிறுநிலம்.

1096. பாழி யெனும்பெயர் தவத்தோர் சாலையும்
நகரமும் பெலமும் நண்ணல ரூரும்
படுக்கையும் பாயலும் பாழ்படு பொருளும்
மலைமுழை விலங்கு துயிலிடமு மாமே.

1097. பாலெனும் பெயரே பகுத்தலும் பக்கமும்
கீரமும் இயல்பும் இடமுங் கிளத்துவர்.

1098. பாசன மெனும்பெயர் பாண்டமுஞ் சுற்றமும்
உண்கலப் பெயரும் உரைக்கப் பெறுமே.

1099. பாடெனும் பெயரே பக்கமும் படுதலும்
பெருமையுஞ் சத்த வொலியும் பேசுவர்.

1100. பாலிகை யெனும்பெயர் பட்டவாள் முட்டும்
அதரமும் வட்டப் பெயரு மாமே.

1101. பாகெனும் பெயரே பாக்கின் பெயரும்
பகுத்தலும் குழம்பும் பாலும் பாகனும்
சருக்கரைப் பெயருஞ் சாற்றப் பெறுமே.

1102. பாளித மெனும்பெயர் கண்ட சர்க்கரையும்
குழம்பும் பட்டாடையுமே கூறுவர்.

1103. பாண மெனும்பெயர் பட்டின் விகற்பமும்
அம்பும் பவள வண்ணக் குறிஞ்சியுமாம்.

1104. பாக மெனும்பெயர் பாதியும் பிச்சையும்
நாவலர் கவிதைப் பாகமும் நவிலுவர்.

1105. பாக லெனும்பெயர் பலாவின் தருவும்
மூவகைக் கார வல்லியு மொழிகுவர்.

1106. பாதிரி யெனும்பெயர் பாதிரி மரமும்
மூங்கிலு மெனவே மொழியப் பெறுமே.

1096. பாழி :—முனிவர் வசிக்குமிடம், நகரம், வலிமை, பகைவர்ஊர், படுக்கை, மக்கட்படுக்கை, அழியும்பொருள், மலைக்குகை, விலங்கின் படுக்கையிடம்.

1097. பால் :—பகுத்தல், பக்கம், க்ஷீரம், இயல்பு, இடம்

1098. பாசனம் :—பாத்திரம், உறவு, உண்கலம்.

1099. பாடு :—பக்கம், படுதல், பெருமை, ஓசை.

1100. பாலிகை:—படைவாளின் கூர்மை, உதடு, வட்டவடிவு.

1101. பாகு :—பாக்கு, பங்கு, குழம்பு, பால், பாகன், சர்க்கரை.

1102. பாளிதம்:—கண்டசர்க்கரை, குழம்பு, பட்டாடை.

1103. பாணம் :—பட்டின்வகை, அம்பு, பவளவண்ணக் குறிஞ்சி. (மருதோன்றி).

1104. பாகம் :—பாதி, பிச்சை, செய்யுள்நடை.

1105. பாகல் :—பலாமரம், பாகற் கொடி.

1106. பாதிரி :—பாதிரிமரம், மூங்கில்.

1107. பால மெனும்பெயர் நெற்றியு மழுவும்
நீரிடைப் பரப்புகற் பாலமு நிகழ்த்துவர்.

1108. பாவ மெனும்பெயர் பாவகப் பெயருந்
தீவினைப் பெயரும் செப்பப் பெறுமே.

1109. பாய்மா வெனும்பெயர் பரியொடு புலியுமாம்.

1110. பாக்கெனும் பெயர்செம் பழுக்காய்ப் பெயரும்
எதிர்கா லத்தைப் பகரிடைச் சொல்லுமாம்.

1111. பாடல மெனும்பெயர் சிவப்பும் பாதிரியும்
குதிரையு மெனவே கூறப் பெறுமே.

1112. பாத்தெனும் பெயரே பகுத்தூண் பெயரும்
அடிசிற் பெயரொடு கஞ்சியு மாமே.

1113. பார மெனும்பெயர் கவசமும் பொறையும்
கலனையும் பாரும் நீரின் கரையும்
வன்பா ரமுமரக் கலமும் வழங்கும்.

1114. பாவெனும் பெயரே பரத்தலும் பனுவலும்.

1115. பாலை யெனும்பெயர் பாலை நிலமும்
அந்நிலப் பாடலும் பிரிவ துரைத்தலும்
பொருண்மேற் பிரிதலும் புணர்ந்துடன் போதலும்
புனர்பூ சமுமோர் மரமும் புகலுவர்.

1116. பார்த்த லென்னும் பெயர்பரப் புதலும்
தோற்றுதற் பெயருஞ் சொல்லப் பெறுமே.

1107. பாலம்:— நெற்றி, மழுவாயுதம், கற்பாலம்.

1108. பாவம்:—கருத்து, தீவினை.

1109. பாய்மா:—குதிரை, புலி.

1110. பாக்கு:—பாக்கு, எதிர்காலஇடைச்சொல்.

1111. பாடலம்:—சிவப்பு, பாதிரி, குதிரை.

1112. பாத்து:—பங்கிடல், சோறு, கஞ்சி.

1113. பாரம் :—கவசம், பொறுமை, சேணம், பூமி, நீர்க்கரை, கனம், தோணி.

1114. பா :—பரப்பு, நூல்.

1115. பாலை:—பாலைநிலம், பாலைப்பண், பிரிவதுரைத்தல், பொருள் நிமித்தம் பிரிதல், புணர்ந்துடன்போதல், புனர்பூச நட்சத்திரம், ஓர் மரம்.

1116. பார்த்தல் :—பரப்பு, தோற்றுதல்.

1117. பாவை யெனும்பெயர் சித்திரப் பாவையும்
திருமக ளாடலுஞ் செப்புவர் புலவர்.

1118. பாயச மெனும்பெயர் பாற்சோற் றினுடனே
பாற்குறண் டியென் பெயர்தானும் பகருவர்.

பகர ஆகார வருக்கம் முற்றும்.

## பகர இகர வருக்கம்

1119. பிள்ளை யெனும்பெயர் வடுகக் கடவுளுங்
காரிப் புள்ளுட னிளமரக் கன்றும்
மகவின் பெயரும் வகுத்துரைத் தனரே.

1120. பிதா வெனும்பெயர் சிவபெருமான் பெயரும்
பிரமன் பெயரும் தாதைதன் பெயரும்
பெருநா ரைப்புட் பெயரும் பேசுவர்.

1121. பிசித மெனும்பெயர் நீறும் புலாலும்
வேம்பின் பெயரும் விளம்புவர் புலவர்.

1122. பிச்ச மெனும்பெயர் பீலிக் குடையும்
ஆண்பான் மயிரும் வெண்குடையு மாமே.

1123. பிசியெ னும்பெயரே பேசுநற் பொருளும்
பொய்யுஞ் சோறும் புகலப் பெறுமே.

1124. பிண்டி யெனும்பெயர் நென்மா முதலவும்
அசோக மரமும் பிண்ணக்கு மாமே.

1125. பிரச மெனும்பெயர் தேனீப்பெயரும்
தேனின் பெயரு மிருலுஞ் செப்புவர்.

1117. பாவை :—சித்திரப்பாவை, இலக்குமிக்கூத்து. (கூத்துப் பதினொன்றனுள் அவுணர் மோகித்து விழும்படி கொல்லிப்பாவை வடிவு கொண்டு திருமகள் ஆடிய ஆடல்.)

1118. பாயசம்:—பாற்சோறு, முட்செடிவகை.

---

1119. பிள்ளை:—வைரவன், கரிக்குருவி, இளமரக்கன்று, குழந்தை.

1120. பிதா:—சிவபெருமான், பிரமன், தந்தை, பெருநாரை.

1121. பிசிதம்:—விபூதி, இறைச்சி, வேம்பு.

1122. பிச்சம் :—பீலிக்குஞ்சக்குடை, ஆண்மயிர், வெண்குடை.

1123. பிசி :—அரும்பொருள், பொய், சோறு.

1124. பிண்டி :—அரிசிமா, அசோகமரம், பிண்ணாக்கு.

1125. பிரசம் :—தேனீ, தேன், தேன்கூடு.

1126. பிறங்க லெனும்பெயர் பெருமையு நிறைவும்
மலையு முயரமும் வகுக்கப் பெறுமே.

1127. பிணையெனும் பெயரே விலங்கின் பெண்பாலும்
விருப்பமு மானும் விளம்புவர் புலவர்.

1128. பிணிமுக மெனும்பெயர் புட்பொதுப் பெயருடன்
மயிலு மன்னமும் வகுத்து ரைத்தனரே.

1129. பிங்கல மெனும்பெயர் செங்கன கத்தொடு
பொன்னி னிறமும் புகன்றனர் புலவர்.

1130. பின்னை யெனும்பெயர் பிற்றைப் பொழுதும்
தங்கையுங் கண்ணன் மனைவியுஞ் சாற்றுவர்.

1131. பிண்ட மெனும்பெயர் பிச்சையுந் திரட்சியும்
தேகமு மென்னச் செப்புவர் புலவர்.

1132. பிரம மெனும்பெயர் சிவனு மாயனும்
பிரமனும் இரவியு மதியுங் கனலும்
மந்திரமும் வேதமும் முத்தித் தருமமும்
வேள்வியு முனிவரும் விளம்பப் பெறுமே.

1133. பிப்பில மெனும்பெயர் திப்பிலி அரசுமாம்.

1134. பிலவங்க மென்பெயர் தேரையுங் குரங்குமாம்.

1135. பிதிரெனும் பெயரே தென்புலத் தெய்வமும்
நொடித்தலும் திவலையுங் கிளியின் விகற்பமும்
கதையு மெனவே கருதப் பெறுமே.

1126. பிறங்கல் :—பெருமை, நிறைவு, மலை, உயரம்.

1127. பிணை :—பெண் மிருகம், ஆசை, மான்.

1128. பிணிமுகம்:—பறவைப்பொது, மயில், அன்னம்.

1129. பிங்கலம்:—செம்பொன், பொன்னிறம்.

1130. பின்னை :—பின்பு, தங்கை, நப்பின்னை.

1131. பிண்டம் :—பிச்சை, திரட்சி, சரீரம்.

1132. பிரமம் :—சிவன், திருமால், பிரமன், சூரியன், சந்திரன், அக்னி, மந்திரம், வேதம், மோட்சம், தருமம், யாகம், முனிவர்.

1133. பிப்பிலம் :—திப்பிலி, அரசமரம்.

1134. பிலவங்கம் :—தேரை, குரங்கு.

1135. பிதிர் :—பிதிர்தேவதை, நொடித்தல், திவலை, கிளிவகையுள் ஒன்று, கதை.

1136. பித்திகை யெனும்பெயர் சுவர்த்த லத்துடனே
கொத்தவிழ் கருமுகைப் பெயருங் கூறுவர்.

1137. பிறழ்த லெனும்பெயர் பெயர்தலும் ஒளிர்தலும்.

1138. பிசின மெனும்பெயர் பொய்யனுங் கோளனும்.

பகர இகர வருக்கம் முற்றும்.

## பகர ஐகார வருக்கம்

1139. பையெனும் பெயரே பசுமை நிறமும்
பாம்பின் படமும் கூறையின் விகற்புமாம்.

1140. பையுள் எனும்பெயர் நோயும் சிறுமையும்.

1141. பைத்த லெனும்பெயர் பசுத்தலு முனிவுமாம்.

பகர ஐகார வருக்கம் முற்றும்.

## பகர ஒகர வருக்கம்

1142. பொறியெனும் பெயரே பொடித்தெழு நுண்
சிறுகலனேடு மரக்கலம் செல்வம்
இலாஞ்சினை திருவும் ஐம்புலனு மோதிரமு
மெழுத்துமாம்.

1143. பொன்னெனும் பெயரே பொறியுங் கனகமும்
அழகும் வியாழமும் திருவுங் குபேரனும்
இரும்பு மெனவே யியம்புவர் புலவர்.

1144. பொழிலெனும் பெயரே யுலகமுஞ் சோலையும்
பெருமையு மெனவே பேசப் பெறுமே.

1136. பித்திகை :—சுவர், சிறுசண்பகம்.

1137. பிறழ்தல் :—பெயர்தல், ஒளிசெய்தல்.

1138. பிசினம் :—பொய்பேசுதல், கோள்சொல்லுதல்.

---

1139. பை :—பசுமைநிறம், பாம்பின்படம், ஆடை வகையுள் ஒன்று.

1140. பையுள் :—நோய், சிறுமை.

1141. பைத்தல் :—பசுமை, கோபம்.

---

1142. பொறி :—தீப்பொறி, மரக்கலம், செல்வம், அடையாளம், இலக்குமி, ஐம்புலன், மோதிரம், எழுத்து.

1143. பொன் :—செல்வம், கனகம், அழகு, பிரகஸ்பதி, இலக்குமி, குபேரன், இரும்பு.

1144. பொழில் :—உலகு, சோலை, பெருமை.

1145. பொறையெனும் பெயரே பூமியும் பொறுமையும்
துறுகல் லுடனே மலையுஞ் சொல்லுவர்.

1146. பொங்க ரெனும்பெயர் மரத்தின் கோடும்
பொருப்பும் இலவ மரமும் புகலுவர்.

1147. பொகுட்டெனும் பெயரே பொருப்பு மொக்குளும்
பங்கயப் பொன்னிறக் கொட்டையும் பகருவர்.

1148. பொருந ரெனும்பெயர் பொருபடை வீரரும்
கொற்றவர் பெயரும் கூத்தர்தம் பெயரும்
திண்ணியோர் பெயரும் செப்பப் பெறுமே.

1149. பொகிலெனும் பெயரே புட்பொதுப் பெயரும்
கொப்புளு முகையுங் கூறப் பெறுமே.

1150. பொம்ம லெனும்பெயர் பொலிவுஞ் சோறுமாம்.

1151. பொங்க லெனும்பெயர் மிகுதியுங் கொதித்தலும்.

1152. பொய்த்த லெனும்பெயர் மகளிர் விளையாடலும்
பொய்த்திடு சொல்லும் புகலப் பெறுமே.

1153. பொத்தக மெனும்பெயர் சித்திரப் படாமும்
திருமுறைப் பெயருஞ் செப்புவர் புலவர்.

1154. பொய்யெனும் பெயரே பொந்தும் பொய்மையும்.

1155. பொச்சாப் பெனும்பெயர் மறவி பொல்லாங்குமாம்.

பகர ஒகர வருக்கம் முற்றும்.

## பகர ஓகார வருக்கம்

1156. போகி யெனும்பெயர் புரந்தரன் பெயரும்
பாம்பின் பெயரும் பகரப் பெறுமே,

1145. பொறை :—பூமி, பொறுமை, பாறை, மலை.

1146. பொங்கர் :—மரத்தின்கிளை, மலை, இலவமரம்.

1147. பொகுட்டு :—மலை, நீர்க்குமிழி, தாமரைக் கொட்டை.

1148. பொருநர் :—படைவீரர், அரசர், நடிப்பவர், வலியவர்.

1149. பொகில் :—பறவைப்பொது, நாபி, அரும்பு.

1150. பொம்மல் :—மங்கலம், சோறு.

1151. பொங்கல் :—மிகுதி, கொதித்தல்.

1152. பொய்த்தல் :—மகளிர்விளையாடல், பொய்பேசுதல்.

1153. பொத்தகம் :—ஓவியம், திருமுறை.

1154. பொய் :—மரப்பொந்து, பொய்மை.

1155. பொச்சாப்பு :—மறத்தல், பொல்லாங்கு.

---

1156. போகி:— இந்திரன், பாம்பு.

1157. போரெனும் பெயரே நென்முதற் சும்மையும்
சதைய நாளொடு சமரு மாமே.

1158. போக்கெனும் பெயரே யிளமரக் கன்றும்
வழியுங் குற்றமும் போதலும் பொய்யுமாம்.

1159. போதக மெனும்பெய ரப்ப வருக்கமும்
மதகரிக் கன்றெடு மரத்தின் கன்றும்
இளமையும் ஞானமு மியம்பப் பெறுமே.

1160. போக மெனும்பெயர் போக விகற்பமும்
பாம்பின துடம்பும் பகரப் பெறுமே.

1161. போர்வை யெனும்பெயர் தோலின் பெயரும்
சாலிகைப் பெயரொடு போர்த்தலுஞ் சாற்றுவர்.

1162. போத மெனும்பெயர் ஞானமும் தோணியும்.

பகர ஓகார வருக்கம் முற்றும்.

## பகர ஔகார வருக்கம்

1163. பௌவ மெனும்பெயர் கடலும் கணுவும்.

பகர ஔகார வருக்கம் முற்றும்.

# 8வது மகர வருக்கத் தொகுதி

## மகர அகர வருக்கம்

1164. மன்ன னெனும்பெய ருத்திரட் டாதியும்
மன்னவன் பெயரும் வகுத்தனர் புலவர்.

1165. மதியெனும் பெயரே முன்னிலை யசைச்சொலும்
உடுபதிப் பெயரு முணர்வு மாதமுமாம்.

1166. மரக்கா லெனும்பெயர் மாதவ னுடலும்
சோதி நாளு மளவையுஞ் சொல்லுவர்.

1157. போர்:— நெற்போர், சதய நட்சத்திரம், போர்.

1158. போக்கு:— இளமரக்கன்று, வழி, குற்றம், போதல், பொய்.

1159. போதகம்:— அப்பத்தின் வகை, யானைக்கன்று, மரக்கன்று, இளமை, அறிவு.

1160. போகம்:—போகத்தின் வேறுபாடு, பாம்பின் உடல்.

1161. போர்வை:— தோல், கவசம், போர்வை.

1162. போதம்:— அறிவு, மரக்கலம்.

---

1163. பௌவம்:— கடல், மரக்கணு.

---

1164. மன்னன்:—உத்திரட்டாதி நட்சத்திரம், அரசன்.

1165. மதி :—முன்னிலையசைச்சொல், சந்திரன், புத்தி, மாதம்.

1166. மரக்கால்:— திருமால் ஆடல், சுவாதிநட்சத்திரம், முகத்தல் அளவைக் கருவியிலொன்று.

1167. மயிலை யெனும்பெயர் மலரிரு வாட்சியும்
மீன ராசியும் மீன்பொதுப் பெயருமாம்.

1168. மடங்க லெனும்பெய ரிடியு மறலியும்
முடங்கலு நோயுட னூழியுஞ் சிங்கமும்.

1169. மறலி யெனும்பெயர் மறப்பு மழுக்காறும்
கூற்றனு மெனவே கூறுவர் புலவர்.

1170. மருளெனும் பெயரே மயக்கத்தின் பெயரும்
குறிஞ்சி யாழ்த்திறமும் பேயுங் கூறுவர்.

1171. மஞ்செனும் பெயரே வலிமையு மிளமையும்
மேகமும் பணியும் வேழத்தின் முதுகும்
எழிலு மெனவே யியம்பினர் புலவர்.

1172. மதனெனும் பெயரே மாட்சிமைப் பெயரும்
அனங்கனும் பெலமு மழகு மாமே.

1173. மண்டலி யெனும்பெயர் நாயும் பூனையும்
மண்டலி யரவும் வழங்கப் பெறுமே.

1174. மண்டல மெனும்பெயர் நாடுங் குதிரையும்
வட்டமுங் குதிரைச் சாரியும் வழங்கும்.

1175. மன்ற மென்பெயர் அம்பலமும் வாசமும்.

1176. மந்திர மெனும்பெயர் குதிரைப் பந்தியும்
கோயிலும் விசாரமு மதுவு மில்லமும்
இறையவர் நாம வெழுத்து மாமே.

1177. மறவ ரெனும்பெயர் வனசரர் பெயரும்
படைவீரர் பெயரும் பகரப் பெறுமே.

1178. மள்ளர் எனும் பெயர் வனசமா வீரரும்
திண்ணியோர் பெயரு மருதநில மாக்களும்.

1167. மயிலை :—இருவாட்சிமலர், மீனராசி, மீன்பொது.

1168. மடங்கல் :—இடி, இயமன், முடங்குதல், நோய், யுகமுடிவு, சிங்கம்.

1169. மறலி:— மறதி, பொறுமை, இயமன்.

1170. மருள்:— மயக்கம், குறிஞ்சியாழ்த்திறம், பேய்.

1171. மஞ்சு:— வலிமை, இளமை, மேகம், ஆபரணம், யானைமுதுகு, அழகு.

1172. மதன்:— மாட்சிமை, மன்மதன், வலி, அழகு.

1173. மண்டலி:— நாய், பூனை, ஒரு பாம்பு.

1174. மண்டலம்:— நாடு, குதிரை, வட்டம், குதிரைசுற்றி ஓடுதல்.

1175. மன்றம்:— சபை, வாசனை.

1176. மந்திரம்:— குதிரைப் பந்தி, கோயில், ஆலோசனை, கள், வீடு, இறைவன் திருநாமம்.

1177. மறவர்:— வேடர், படைவீரர்.

1178. மள்ளர்:— வீரர், வலியோர், மருதநிலமக்கள்.

1179. மதலை யெனும்பெயர் மரக்கலப் பெயரும்
புதல்வர் பெயரும் கொடுங்கைப் பாவும்
கொன்றையும் தூணும் சார்பின வையுமாம்.

1180. மடை யெனும்பெயர் மணிப்பணிப் பூட்டும்
புனலின் மடையும் அடிசிலும் புகலுவர்.

1181. மட்டெனும் பெயரே யளவு மதுவுமாம்.

1182. மனவெனும் பெயரே மணிப்பொதுப் பெயரும்
அக்கு மணியின் பெயரு மாமே.

1183. மணியெனும் பெயரே வனப்பு நன்மையும்
கருநிற முநவ மணியுங் கண்டையும்
இசையு மெனவே யியம்பப் பெறுமே.

1184. மதுக மெனும்பெயர் வண்டுந் தராவும்
இருப்பையு மட்டி மதுரமும் இயம்புவர்.

1185. மடியெனும் பெயரே வயிறுந் தாழையும்
சோம்பும் புடைவையுந் துன்ப நோயுமாம்.

1186. மன்ற லெனும்பெயர் மணமும் கல்யாணமும்
பாலையாழ்த் திறமும் பகரப் பெறுமே.

1187. மத்திகை யெனும்பெயர் மாலையின் பெயரும்
சம்மட்டி யினெடு சுடர்நிலைத் தண்டுமாம்.

1188. மல் லெனும் பெயரே மாயோ னுடலும்
வளமும் பெலமும் வகுத்துரைத் தனரே.

1189. மல்லிகை யெனும்பெயர் மாலதிப் புதலும்
சுடர்நிலைத் தண்டுஞ் சொல்லுவர் புலவர்.

1179. மதலை:— மரக்கலம், பிள்ளை, கொடுங்கை, கொன்றை மரம், தூண், சார்பானவை.

1180. மடை:— ஆபரணக்கடைப்பூட்டு, மதகு, உணவு.

1181. மட்டு :—அளவு, கள்.

1182. மனவு :—மணிப்பொது, சங்குமணி.

1183. மணி :— அழகு, நன்மை, கருமை, நவமணி, யானைமணி, இசை.

1184. மதுகம் :—வண்டு, உலோகவகை, இலுப்பைமரம், அதிமதுரம்.

1185. மடி :—வயிறு, தாழை, சோம்பல், புடவை, துன்பம், வியாதி.

1186. மன்றல் :—மணம், கலியாணம், பாலையாழ்த்திறம்.

1187. மத்திகை:— பூமாலை, குதிரைச் சவுக்கு, விளக்குத் தண்டு.

1188. மல்:— திருமால்கூத்து, வளமை, வலிமை.

1189. மல்லிகை:— ஒரு பூச்செடி, விளக்குத்தண்டு.

1190. மறமெனும் பெயரே பாவமும் கொடுமையும்
சினமு மெனவே செப்பப் பெறுமே.

1191 மஞ்சரி யெனும்பெயர் மலர்ப்பூங் கொத்தும்
மாலையுந் தளிரும் வகுத்தனர் புலவர்.

1192. மகர மெனும்பெயர் மலர்ப்பூந் தாதும்
சுறவு மகர விராசியுஞ் சொல்லுவர்.

1193. மந்தார மெனும்பெய ரைந்தரு விலொன்றும்
செம்பரத் தையுமெனச் செப்புவர் புலவர்.

1194. மத்தெனும் பெயரே தயிர்கடை தறிமுதன்
மத்தின் விகற்பமு மத்து முணர்த்துவர்.

1195. மல்ல லெனும்பெயர் வலிமையும் வளமுமாம்.

1196. மடமெனும் பெயரே முனிவர் வாசமும்
அறியாமை யுஞ்சத்திர மனையு மென்மையும்.

1197. மகனெனும் பெயரே மைந்தன் பெருமையும்
மகிமையிற் சிறந்தோன் பெயரும் வழங்கும்.

1198. மணமெனும் பெயரே கல்யாணமும் வாசமும்
கூட்டமு மெனவே கூறப் பெறுமே.

1199. மறையெனும் பெயர்மந் திரமும் வேதமும்
பரிசையு மறைவும் ராசியப் பெயருமாம்.

1200. மகமெனும் பெயர்மக நாளுடன் யாகமாம்.

1201. மடலெனும் பெயர்பனை மடல்போல் வனவும்
பூவி னிதழு மோர்நூலும் புகலுவர்.

1190. மறம்:—பாவம், கொடுமை, கோபம்.

1191. மஞ்சரி:— மலர்ப்பூங்கொத்து, மாலை, தளிர்.

1192. மகரம்:—பூந்தாது, சுறுமீன், மகர இராசி.

1193. மந்தாரம்:—தெய்வமரங்கள் ஐந்தனுளொன்று, செம்பரத்தை.

1194. மத்து:—தயிர் முதலியவற்றைக் கடையும் மத்து, மத்தின்வகை, ஊமத்தை.

1195. மல்லல்:—வலிமை, வளம்.

1196. மடம்:—முனிவர் வசிக்குமிடம், அறியாமை, சத்திரம், மென்மை.
(மடம் என்னும் சொல் மாணவர் முனிவர் வாசத்தைக் குறிக்கும்—நாநார்த்த தீபிகை.)

1197. மகன்:—மைந்தன், சிறப்புற்றோன்.

1198. மணம்:—கல்யாணம், வாசனை, கூட்டம்.

1199. மறை:—மந்திரம், வேதம், கேடகம், மறைவு, இரகசியம்.

1200. மகம்:— மகநட்சத்திரம், யாகம்.

1201. மடல்:— பனையேடு போல்வன, பூவிதழ், ஓர்நூல்.

1202. மத்தக மெனும்பெயர் நெற்றியுந்தலையுமாம்.

1203. மண்ணெனும் பெயரே முழவின் மார்ச்சனையும்
அலங்கரித்தலு நல்ல வனியுமாமே.

1204. மதுவெனும் பெயரே வசந்த காலமும்
இனிமையு நறவொடு தேனு மியம்புவர்.

1205. மரபெனும் பெயரே பழமையும் இயல்புமாம்.

1206. மறலெனும் பெயரே மயக்கமும் கூற்றுமாம்.

1207. மருமான் எனும்பெயர் வழித்தோன் றலுடனே
மருமகன் பெயரும் வழங்கப் பெறுமே.

1208. மயலெனும் பெயரே மயக்கமும் செற்றையும்
பேயின் பெயரும் பேசுவர் புல்வர்.

1209. மலைத லெனும்பெயர் மறுத்தலும் பொருதலும்
சூடலு மெனவே சொல்லப் பெறுமே.

1210. மருத மெனும்பெயர் மருத நிலமும்
அந்நிலப் பாடலும் வயலுமோர் மரமுமாம்.

1211. மங்கு லெனும்பெயர் மேகமும் விசும்பும்
இருளு மெனவே இயம்புவர் புலவர்.

1212. மன்னெனும் பெயரே அசைச்சொலும் வேந்தனும்
நிலைபேறு மிகுதிப் பெயரு நிகழ்த்துவர்.

1213. மலர்தல் எனும்பெயர் எதிர்தலுந் தோன்றலும்
மலர்தலின் பெயரும் வகுத்தனர் புலவர்.

1214. மகரந்த மென்னும் பெயர்மலர்த் தேனும்
நறவும் பூந்தாது நவிலப் பெறுமே.

1215. மதவெனும் பெயரே வன்மையு மிகுதியும்.

1202. மத்தகம்:— நெற்றி, தலை.

1203. மண்:— மத்தளத்திற் பூசுமண், அலங்காரம், பூமி.

1204. மது:— வசந்தகாலம், இனிமை, கள், தேன்.

1205. மரபு:— பழமை, இயல்பு.

1206. மறல்:— மயக்கம், இயமன்.

1207. மருமான் :—மகன், மருமகன்.

1208. மயல் :—மயக்கம், செத்தை, பேய்.

1209. மலைதல் :—மறுத்தல், போர்செய்தல், அணிதல்

1210. மருதம் :—மருத நிலம், மருதநிலப்பண், வயல், மருதமரம்.

1211. மங்குல் :—மேகம், ஆகாயம், இருள்.

1212. மன் :—அசைச்சொல், அரசன், நிலைபேறு, மிகுதி.

1213. மலர்தல்:— எதிர்தல், தோன்றல், மலர்தல்.

1214. மகரந்தம்:— மலர்த்தேன், கள், மகரந்தப்பொடி.

1215. மதவு:— வலிமை, மிகுதி.

1216. மதமெனும் பெயர்கரி மதமும் செருக்குமாம்.

1217. மனையெனும் பெயரே மனைவியும் வீடுமாம்.

1218. மருந்தெனும் பெயரே மருந்தின் விகற்பமும்
அமர ருணவின் பெயரு மாமே.

1219. மந்தி யெனும்பெயர் வண்டும் ஆதித்தனும்
குரங்கின் விகற்பமும் கூறப் பெறுமே.

1220. மன்றவெனும்பெயர் தேற்றமும் இடைச்சொலும்
மருவுமெனவே வழங்கப் பெறுமே.

மகர அகர வருக்கம் முற்றும்.

## மகர ஆகார வருக்கம்

1221. மாலெனும் பெயர்திரு மாலொடு மதிமகன்
காரிநிற வலாரியுங் காற்றெடு சோழனும்
கண்குத்திப் பாம்பும் கருமையும் பெருமையும்,
மயக்கமும் விருப்பும் கண்ணே ணியுமாகும்.

1222. மாவெனும் பெயரொரு மரமு மழைத்தலும்
திருவுங் குதிரையும் செல்வமும் கறுப்பும்
விலங்கின் பொதுவும் விளைநிலமு மழகும்
வண்டு மோரிலக்கமும் பெருமை நிறமும்
நென்மா முதலவு நிகழ்த்தப் பெறுமே.

1223. மாலை யெனும்பெய ரொழுக்கமு மியல்பும்
நதியும் இரவும் மலரான் மணியாற்
சொல்லாற் பொன்னாற் றெடுத்திடு தொடையுமாம்.

1224. மானெனும் பெயரே மகர விராசியும்
விலங்கின் பொதுவுட னுழையையும் விளம்புவர்.

1216. மதம் :—யானைமதம், கர்வம்.

1217. மனை :—இல்லாள், வீடு.

1218. மருந்து :—மருந்தின்வகை, தேவருணவு (அமுதம்).

1219. மந்தி :—வண்டு, சூரியன், பெண்குரங்கு.

1220. மன்ற :—நிச்சயம், இடைச்சொல், மணம்.

———

1221. மால் :—திருமால், புதன், இந்திரன், காற்று, சோழன், கண்குத்திப்பாம்பு, கறுப்பு, பெருமை, மயக்கம், விருப்பு, கணுக்களிலே அடிவைத்து, மலை முதலியவற்றில் ஏறிச்செல்லும்படி யமைத்துள்ள மூங்கில்.

1222. மா :—மாமரம், அழைத்தல், இலக்குமி, குதிரை, செல்வம், கறுப்பு, விலங்கின் பொது, விளைநிலம், அழகு, வண்டு, ஓரெண், பெருமை, நிறம், அரிசிமா.

1223. மாலை :—ஒழுக்கம், இயல்பு, நதி, இரவு, மலர்களாலும், மணிகளாலும், சொற்களாலும், பொன்னாலும் அமைக்கப்பட்டமாலை.

1224. மான் :—மகரராசி, விலங்கின்பொது, மான்.

1225. மாரி யெனும்பெயர் மழையு மேகமும்
வடுகியு மதுவு மரணமும் வழங்கும்.

1226. மாதிர மெனும்பெயர் திசையும் யானையும்
மலையு மெனவே வழங்கப் பெறுமே.

1227. மாதவ மெனும்பெயர் வளர்தவப் பெயரும்
இளவேனிற் பெயரு மதுவு மியம்புவர்.

1228. மார்க்க மெனும்பெயர் வழியுந் தெருவும்
சமைய விகற்பமுஞ் சாற்றப் பெறுமே.

1229. மாட மெனும்பெயர் மனையும் உழுந்துமாம்.

1230. மாழை யெனும்பெயரு லோகக் கட்டியும்
பொன்னு மழகும் புளிமாவும் ஓலையும்
திரண்ட வடிவும் செப்புவர் புலவர்.

1231. மாசெனும் பெயரே மேகமும் அழுக்கும்
சிறுமையுங் குற்றமும் செப்பப் பெறுமே.

1232. மாத ரெனும் பெய ரிடைச்சொலு மழகும்
காதலும் அரிவையர் பெயரும் கருதுவர்.

1233. மாந்த லெனும்பெயர் மரித்தலும் குடித்தலும்
உண்டலு மெனவே யுரைத்தனர் புலவர்.

1234. மாய னெனும்பெயர் மாதவன் பெயரும்
கருநிற முடையோன் பெயரும் கருதுவர்.

1235. மாய்த லெனும்பெயர் மறைதலும் மரணமும்

1236. மாருதி யெனும்பெயர் அநுமன் பெயரும்
வீமன் பிதாவின் பெயரும் விளம்புவர்.

1237. மாய மெனும்பெயர் வஞ்சனைப் பெயரும்
பொய்யுங் கருநிறப் பெயரும் புகலுவர்.

1225. மாரி :—மழை, மேகம், துர்க்கைகள், சாவு.

1226. மாதிரம் :—திசை, யானை, மலை.

1227. மாதவம் :—பெருந்தவம், வசந்தகாலம், கள்.

1228. மார்க்கம் :—வழி, தெரு, சமயவகை.

1229. மாடம் :—மனை, உளுந்து. (மாஷம் என்ற வட சொல்லை மாடம் என்று கொள்ளும்போது உளுந்தினைக்குறிக்கும்).

1230. மாழை:— உலோகக்கட்டி, பொன், அழகு, புளிமா, ஓலை, திரண்டவடிவு.

1231. மாசு:— மேகம், அழுக்கு, சிறுமை, குற்றம்.

1232. மாதர்:— இடைச்சொல், அழகு, ஆசை, பெண்கள்.

1233. மாந்தல்:— மரித்தல், குடித்தல், உண்ணுதல்.

1234. மாயன்:— திருமால், கருநிறத்தோன்.

1235. மாய்தல்:— மறைதல், மரணம்.

1236. மாருதி:— அநுமன், வாயுபகவான்.

1237. மாயம்:— வஞ்சனை, பொய், கருமை.

1238. மாயை யெனும்பெயர் மாயமும் சத்தியும்.

1239. மாடெனும் பெயரே தனமும் பக்கமும்
மணியுஞ் செல்வமு நிரையும் வழங்கும்.

1240. மாலிகை யெனும்பெயர் மதுவு மாலியும்.

1241. மானுத லெனும்பெயர் மயக்கமு முவமையும்
இலச்சையு மெனவே இயம்புவர் புலவர்.

1242. மான மெனும்பெயர் லச்சையு மளவும்
விமானமுங் குற்றமும் பெருமையும் விளம்புவர்.

மகர ஆகார வருக்கம் முற்றும்.

## மகர இகர வருக்கம்

1243. மிசையெனும் பெயரே மீமிசைச் சொல்லும்
உணவுடன் மேடு முரைக்கப் பெறுமே.

1244. மிச்சை யெனும்பெயர் மிடித்தலும் பொய்த்தலும்
அறிவின் மைப்பெயர் தானு மாமே.

1245. மிதவை யெனும்பெயர் தெப்பமுஞ் சோறுமாம்.

மகர இகர வருக்கம் முற்றும்.

## மகர ஈகார வருக்கம்

1246. மீனெனும் பெயரே வான்மீ னேடு
மச்சமும் சித்திரை நாளும் வழங்கும்.

1247. மீளி யெனும்பெயர் மிடலும் பெருமையும்
தலைவனும் விறலோன் பெயருஞ் சாற்றுவர்.

1248. மீக்கூ றெனும்பெயர் சொற்செல வுடனே
கீர்த்திப் பெயருங் கிளத்தப் பெறுமே.

மகர ஈகார வருக்கம் முற்றும்.

1238. மாயை:— வஞ்சனை, சத்தி.

1239. மாடு:— பொன், பக்கம், மணி, செல்வம், பசு.

1240. மாலிகை:— கள், சூரியன்.

1241. மானுதல்:— மயக்கம், உவமை, வெட்கம்.

1242. மானம்:— வெட்கம், அளவு, விமானம், குற்றம், பெருமை.

---

1243. மிசை :— சிறப்புப் பொருளைத் தெரிவித்தற்கு முன்னுள்ள பொருளிலேயே அடுத்து வருஞ் சொல், உணவு, மேடு.

1244. மிச்சை :—தரித்திரம், பொய்த்தல், அறிவின்மை.

1245. மிதவை :—தெப்பம், சோறு.

---

1246. மீன்:—நட்சத்திரம், மஸ்யம், சித்திரைநட்சத்திரம்.

1247. மீளி :—வலிமை, பெருமை, தலைவன், வலியோன்.

1248. மீக்கூறு : –செல்வாக்கு, புகழ்.

---

## மகர உகர வருக்கம்

1249. முறமெனும் பெயரே வியாகமுஞ் சுளகுமாம்.

1250. முறிகுள மெனும்பெயர் பூராட நாளும்
உடைகுளப் பெயரு முரைத்தனர் புலவர்.

1251. முரசெனும் பெயரே முரசின் விகற்பமும்
உத்திரட் டாதியு முரைக்கப் பெறுமே.

1252. முனியெனும் பெயர்தவ முனிவன் பெயரும்
தந்தியின் கன்றுந் தனுவி ராசியும்
வில்லும் புலவோர் விளம்பப் பெறுமே.

1253. முதலை யென்பெயர் செங்கிடையு மிடங்கரும்
மயிலிறகின் முதன் முள்ளும் வழங்கும்.

1254. முரம்பெனும் பெயரே மேடும் பாறையும்
பரலடுத்து யர்ந்த நிலமும் பகருவர்.

1255. முளையெனும் பெயரே மூங்கிலும் சுதனும்
அங்குரத் தின்பெயர் தானு மாமே.

1256. முறுவ லெனும்பெயர் தந்தமு முகையுமாம்.

1257. முன்ன லெனும்பெயர் நெஞ்சமு நினைவுமாம்.

1258. முனையெனும் பெயரே முரண்பெறு பகையும்
கூர்மையும் வெறுப்பும் கூறுவர் புலவர்.

1259. முரணெனும் பெயரே பெலமும் பகையுமாம்.

1260. முருகெனும் பெயரே முருகக் கடவுளும்
இளமையும் விழாவு மெழிலும் வாசமும்
மதுவு மெலுமிச்சும் வழங்கப் பெறுமே.

1249. முறம் :—விசாகநட்சத்திரம், முறம்.

1250. முறிகுளம் :—பூராடநட்சத்திரம் (உடைகுளம்).

1251. முரசு :—முரசின்வகை, உத்திரட்டாதி நட்சத்திரம்.

1252. முனி :—முனிவன், யானைக்கன்று, தனுர்ராசி, வில்.

1253. முதலை :—செந்நெட்டி, நீர்வாழ்முதலை, மயில் இறகின் அடிக்குருத்து.

1254. முரம்பு :—மேடு, பாறை, பருக்கைக்கல்லுள்ள உயர்நிலம்.

1255. முளை :—மூங்கில், பிள்ளை, அங்குரம்.

1256. முறுவல் :—பல், புன்சிரிப்பு.

1257. முன்னல் :—நெஞ்சம், நினைவு.

1258. முனை :—பகை, கூர்மை, வெறுப்பு.

1259. முரண் :—வலிமை, பகை.

1260. முருகு :—முருகன், இளமை, திருவிழா, அழகு, மணம், கள், எலுமிச்சை.

1261. முறையெனும் பெயரே முறைப்பெயர் விகற்பமும்
இயல்பும் பொத்தகப் பெயரும் இயம்புவர்.

1262. முடலை யெனும்பெயர் திரண்ட வடிவும்
பெருமையு மென்னப் பேசுவர் புலவர்.

1263. முன்ன மெனும்பெயர் முற்கா லத்தொடு
சிங்கமும் குறிப்பும் சீக்கிரமு மாமே.

1264. முடங்க லெனும்பெயர் மடங்கலுந் தாழையும்
மூங்கிலு நோயு மொழியப் பெறுமே.

1265. முத்த மெனும்பெயர் அதரமும் பிரியமும்
முத்து மருத நிலமு மொழிகுவர்.

1266. முண்டக மெனும்பெயர் முள்ளுடை மூலமும்
